# சுதந்திரத்தையும் சமூக நீதியையும் நோக்கி

19ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியிலிருந்து
சமூக ஜனநாயக அரசியல் அரங்குகளும்,
நடைமுறை அரசியலும்




பிரெட்ரீக்-ஈபேர்ட-ஸ்டிப்டுங்
அமைப்பு நடத்தும் ஒரு பொருட்காட்சி

FRIEDRICH
EBERT
STIFTUNG

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதந்திரத்தையும்
# சமூக நீதியையும் நோக்கி

19ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியிலிருந்து சமூக ஜனநாயக அரசியல் அரங்குகளும், நடைமுறை அரசியலும்

பிரெட்ரீக்-ஈபேர்ட-ஸ்டிப்டுங்
அமைப்பு நடத்தும் ஒரு பொருட்காட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

© பிரெட்ரிக்-ஈபேர்ட்-ஸ்டிப்டுங்

**ISBN: 978-955-607-059-0**

தமிழாக்கம் :

எஸ்.துரைராஜா

கணினி அமைப்பு :

செல்வி ராமேஸ்வரன்

வெளியிடுபவர் :

பிரெட்ரிக்-ஈபேர்ட்-ஸ்டிப்டுங்
சார்பில் டியெத்தர் டவே மற்றும் மைக்கேல் ஷிளேடர்

எண்ணக்கரு வடிவமைப்பு, விடய வாசகங்கள் மற்றும் புகைப்படங்கள் தெரிவு :

மாரியோ பர்ஜேர்ட்

பதிப்புரிமை வினாக்கள் :

பெட்ரா ஜியேர்ட்ஸ்

அமைப்புத் திட்டம் :

Pellens Kommunikationsdesign GmbH, Bonn

பொருட்காட்சித் தயாரிப்பு :

Com Expo. Bonn

அச்சு :

இலங்கையில் அச்சிடப்பட்டது 2009
FES வெளியீடு 76

அச்சுப்பதிப்பு :

NEO Graphics (Pvt) Ltd
143, Udahamulla Railway Station Road,
Gangodawila,
Nugegoda
Sri Lanka

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

ஜனநாயகக் கட்சிகளின் வரலாற்றில் நிகழ்ச்சித்திட்டங்கள் இன்றியமையாத பாத்திரத்தை வகித்துள்ளன. பிரத்தியேகமாக, ஜெர்மன் சமூக ஜனநாயகத்தின் விடயத்தில் இது உண்மையாகும். 1848 புரட்சியின் காலந்தொட்டு சமூக ஜனநாயகக் கட்சி மாற்றமுறும் பொருளாதார சமூக, கலாசார மற்றும் சட்ட நிலைமைகளுக்கு ஏற்றவகையில் நிகழ்ச்சித்திட்டங்களை வடிவமைத்து வந்துள்ளது. புதிய சவால்கள் புதிய தீர்வுகளைக் கோரி நிற்கின்றன. பற்றியொழுக வேண்டிய பணி சுதந்திரம், நீதி, மற்றும் ஒருமைப்பாடு போன்ற சமூக ஜனநாயகத்தின் அடிப்படை விழுமியங்களை தற்போது நிலவும் சூழ்நிலைகளுக்கு ஏற்றவகையில் பிரயோகிப்பதும் அவற்றைத் தொடர்ச்சியாகப் புத்தாக்கம் செய்வதுமாகும். யுதார்த்தத்தை அங்கீகரித்து, ஏற்றுக்கொள்வதன் மூலம் மாத்திரமே சமூக ஜனநாயகம் நிலைமாற்றத்தின் போதும், அக்காலப் பகுதி முழுவதும் அதன் செறிந்த சாராம்சத்தையும், அடையாளத்தையும் பேணிப் பாதுகாப்பது சாத்தியமாகும்.

பிரெட்ரிக்-ஈபேர்ட்-ஸ்ரிப்டுங் சமூக ஜனநாயகத்தை வலுப்படுத்துவதற்குத் தன்னை அர்ப்பணித்துள்ளது. அது ஜெர்மனியில் தனது கல்வி நடவடிக்கைகளிலும், தனது சர்வதேசப் பணியிலும் ஜனநாயக விழுமியங்களைப் போதிப்பதில் கவனம் செலுத்தி வந்துள்ளது. இதன் நோக்கம் ஏனைய நாடுகளுக்கும், சமூகங்களுக்கும் ஜெர்மன் ஜனநாயகத்தின் மாதிரியை வழங்குவதல்ல. ஒவ்வொரு தேசமும், ஒவ்வொரு சமூகமும் ஜனநாயக ஒத்துழைப்பு சம்பந்தமான தனது சொந்தப் பாதையைத் தெரிவு செய்தல் வேண்டும். எமது பங்காளர் தேசங்களில் நாம் செய்யமுயலுவது சிவில் சமூகக் கட்டமைப்புகள் மற்றும் நிறுவனங்களுக்கு வலுவளிப்பதில் உத்வேகமளித்து, பங்களிப்பு வழங்கி, ஜனநாயகப் பங்கேற்பு மற்றும் தீர்மானம் மேற்கொள்ளும் செயல்முறைகளை முன்னேற்றி, முரண்பாட்டுக்கான சாத்தியவளத்தைக் குறைத்து, சமத்துவ அடிப்படையில் ஒத்துழைப்பை முன்னேற்றுவதாகும். இந்த உணர்விலேயே நாம் தொழிற்சங்கங்கள், கூட்டுறவுகள், பெண்கள் மற்றும் கல்வி வலையமைப்புகள் போன்ற எமது பங்காளர்களுக்கு நடைமுறையில் ஆதரவு வழங்குகின்றோம். பிரெட்ரிக்-ஈபேர்ட்-ஸ்டிப்டுங் தன்னை ஒரு சிந்தனை மற்றும் செயற்பாட்டு முயற்சியாளராகவே நோக்குகின்றது.

ஆகவே, சமூக ஜனநாயக நிகழ்ச்சித்திட்டங்களின் வரலாறு மற்றும் அபிவிருத்தி சம்பந்தமான FES வரலாற்றுப் பிரிவின் இப் பொருட்காட்சி ஏனையோருக்கான ஒரு முதனிலைத் திட்ட மாதிரியாகவன்றி, ஜெர்மனியிலும் ஜனநாயக சமூகத்துக்கான பாதை மிருதுவான ஒன்றாகவன்றி, நீண்டதும், இடர்கள் மிக்கதுமான ஒன்று என்பதை எடுத்து விளக்குவதாகவே அமைகின்றது. இப்பாதை சில சந்தர்ப்பங்களில் வன்செயல் கருத்து முரண்பாடுகள், தோல்விகள் மற்றும் பின்னடைவுகளைச் சந்தித்த போதிலும், இறுதியில் வெற்றிக்கும், சுதந்திரம், சமூக நீதி மற்றும் ஒருமைப்பாடு என்பவை சம்பந்தமான உள் மையச் சமூக, ஜனநாயக விழுமியங்கள் ஒரு யதார்த்தமாகிய சமூகத்துக்கும் இட்டுச் சென்ற ஒன்றாகும்.

ஆன்கி புக்ஸ்
ஆசனத்தவிசாளர்
பிரெட்ரிக்-ஈபேர்ட்-ஸ்டிப்டுங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளடக்கம்

01 சுதந்திரமும், சமூக நீதியும்
சமூக ஜனநாயகக் கொள்கையின் கோட்பாடுகள்

02 'உலகத் தொழிலாளர்களே, ஒன்று சேருங்கள்!'
கைத்தொழில் புரட்சிக்கான ஒரு முதலாவது பதில் - 1848இன் பொதுவுடமைப் பிரகடனம்

03 'எமது விடயங்களை எமது கைகளில் எடுத்துக் கொள்வோம்'
1848 'தொழிலாளர் சகோதரத்துவத்தின்' நியதிச் சட்டம்

04 1860களின் சூழ்நிலை குறித்த ஆரம்பகால நிகழ்ச்சித்திட்டப் பகுப்பாய்வு
லஸ்ஸாலின் 'பகிரங்கக் கடிதம்', 1863 - Allgemeine Deutscher Arbeiter-Verein (ADAV)

05 1860களின் சூழ்நிலையின் ஆரம்ப கால நிகழ்ச்சித்திட்டம்சார் பகுப்பாய்வு
Vereinstag deutscher Arbeitervereine (VDAV)

06 'புதிய காலங்கள் மலர்ந்துள்ளன'
1869 சமூக ஜனநாயகத் தொழிற்கட்சியின் எய்சனாச் நிகழ்ச்சித்திட்டம்

07 'தொழிலாளர்களின் விடுதலை தொழிலாளர் வர்க்கத்திலேயே ஈட்டப்படுதல் வேண்டும்'
சமூக ஜனநாயகத்தின் ஒன்றிணைப்பு- 1875 கோத்தா நிகழ்ச்சித்திட்டம்

08 'சகல விதமான சுரண்டல் மற்றும் அடக்கு முறையை..... எதிர்த்துப் போராடுங்கள்'
1891இன் ஏர்பேர்ட் நிகழ்ச்சித்திட்டம்

09 புரட்சிகர வர்க்கப் போராட்டம் அல்லது தொடர்ச்சியான சீர்திருத்தக் கொள்கை
திரிபுவாதப் பிணக்கு 1896-1903

10 கட்சிக்கும், தொழிற்சங்கங்களுக்குமிடையிலான உறவு
வெகுஜன வேலைநிறுத்த விவாதத்திலிருந்து 1906 'மான்ஹெயிம் உடன்படிக்கை' வரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11 ‘கட்சிச் சமரசமா’ அல்லது அடிப்படையான எதிர்ப்பா?

முதலாம் உலக மகா யுத்தத்தின் போது (1914-1918) சமூக ஜனநாயகத்தில் பிளவு

12 புரட்சியும், குடியரசின் தாபிதமும்

தொழிலாளர் இயக்கத்தில் பிளவு தீவிரமடைதல் (1918/19)

13 ஒரு மக்கள் கட்சியை நோக்கிய பயணத்தில்

1921 SPDயின் கொர்லிட்ஸ் நிகழ்ச்சித்திட்டம்

14 சோஷலிஸத்தையும், சுதந்திரத்தையும் நோக்கிய ஐரோப்பியக் கண்ணோட்டம்

ஹெயிடல்பேர்க் நிகழ்ச்சித்திட்டம்-1925

15 சமீபத்திய அபிவிருத்திகள் மற்றும் நிகழ்ச்சித் திட்டரீதியான விளைவுகள் சம்பந்தமான பகுப்பாய்வு

‘ஒழுங்குபடுத்தப்பட்ட முதலாளித்துவமும்’,

‘பொருளாதார ஜனநாயகமும்’

16 பாரிய பொருளாதார வீழ்ச்சியின் போது - தேசிய சோஷலிஸத்திடம் தோல்வி

அரசியல் மற்றும் நிகழ்ச்சித்திட்ட இருதலைக்கொல்லி நிலை, 1930-1933

17 வெளிநாடுகளில் வாசமும், தேசிய சோஷலிஸமும்

‘பிரேக் பிரகடனத்திலிருந்து’ ஒரு ஜனநாயக, யுத்தத்துக்குப் பிந்திய அமைப்பை நோக்கி, 1933-1945

18 சுதந்திரம் மற்றும் சமூகநீதி நோக்கங்களுக்கான அர்ப்பணவுணர்வு

முதலாவது கொள்கை வழிகாட்டல்களிலிருந்து SPDயின் டோர்ட்மன்ட்/பேர்லின் நடவடிக்கை நிகழ்ச்சித்திட்டம் வரை (1945-1952/54)

19 விடுதலையிலிருந்து புதிய அடிமைத்தனத்துக்கு

பலவந்த ஒன்றிணைப்பும், ஒரு ‘புதிய வகையிலான கட்சியும், 1945-1953

20 விடுதலையிலிருந்து புதிய அடிமைத்தனத்துக்கு

பலவந்த ஒன்றிணைப்பும், ஒரு ‘புதிய வகையிலான கட்சியும், 1945-1953

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

21 ஒரு புதிய ஜெர்மன் கொள்கைக்கான வாய்ப்பு நழுவவிடக்கூடாது
1966இலிருந்து SPD அரசாங்கத்தில்

22 அரசியல் திசைமார்க்கத்தை வழங்குதல்
1970களில் நிகழ்ச்சித்திட்டம்சார் அபிவிருத்திகள்

23 'புதிய பணிகளை ஒரு புதிய வழியில் கையாளுதல்'
இர்சீ வரைபிலிருந்து பேர்லின் அரங்கு வரை, 1984-1989

24 'சமூக நீதியூடாக ஒருமைப்பாடு நிறைந்த சமூகத்தை நோக்கி'
பேர்லின் நிகழ்ச்சித்திட்டம் - 1989

25 'சமூக மற்றும் நீதி சம்பந்தமான மீள் ஐக்கியத்தை வடிவமைத்தல்'
GDRஇல் SPDயின் லீப்ஸிக் நிகழச்சித்திட்டம், 1990

26 'புதிது புனைதலும், சமூக நீதியும்' - 'மாற்றத்துக்கான தைரியம்'
செம் பசுமைக் கருத்திட்டத்தின் ஆரம்பங்களிலிருந்து '2010 நிகழ்ச்சிநிரல்' வரை, 1998-2005

27 'நீதியிலும், நியாயத்திலும் ஜெர்மனிய நவீனமயப்படுத்தல்'
ஒரு புதிய நிகழ்ச்சித்திட்டத்தின் பாதையில் - '21ஆம் நூற்றாண்டில் சமூக ஜனநாயகம்'

28 புதிதாக்கத்துக்கான சக்தி - சமூக ஜெர்மனி ஒன்றை நோக்கி
2007 ஹாம்பேர்க் நிகழ்ச்சித்திட்டம்

29 சமூக ஜனநாயகம் - இடைமாற்றத்தில் அடையாளம்
பெறுபேறுகளும், எதிர்காலச் சாத்தியங்களும்

பிரமுகர்கள் நிரல்

பேர்டினட் லஸ்ஸால்

ஓகஸ்ட் பெபல்

எடுவார்ட் பேர்ன்ஸ்டீன்

கார்ல் கோட்ஸ்கி

ரோஸா லக்ஸெம்பேர்க்


கேர்ட் ஷூமாக்கர்

வில்லி பிராண்ட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதந்திரத்தையும் சமூக நீதியையும் நோக்கி

19ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியிலிருந்து
சமூக ஜனநாயக அரசியல் அரங்குகளும்,
நடைமுறை அரசியலும்




பிரெட்ரீக்-ஈபேர்ட-ஸ்டிப்டுங்
அமைப்பு நடத்தும் ஒரு பொருட்காட்சி

FRIEDRICH
EBERT
STIFTUNG

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1 சுதந்திரமும், சமூக நீதியும்

## சமூக ஜனநாயகக் கொள்கையின் கோட்பாடுகள்




தொடர்ச்சியாக மாறிக்கொண்டிருக்கும் சூழ்நிலைகளுக்கேற்ற வகையில் நிகழ்ச்சித்திட்டத்தையும், கொள்கையையும் இசைவாக்கம் செய்து கொள்ளாத கட்சியொன்று செயலற்று, இறுதியில் தனது ஆக்கசக்தியை இழந்துவிடும். SPD எப்பொழுதுமே மீள்திசைமார்க்கத்துக்குள் துணிச்சலையும், பலத்தையும் காண்பித்துள்ளதோடு, தனது அரசியல் மற்றும் நிகழ்ச்சித்திட்ட அடையாளத்தைப் பேணியும் வந்துள்ளது. வேறு எந்தக் கட்சியையும் போலன்றி, அதற்கு 19ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியிலிருந்து ஒரு நீண்ட கால வரலாறு உள்ளது. இந்த வரலாறு முழுவதும் ஒருமைப்பாட்டில் சுதந்திரம் மற்றும் சமூக நீதியைத் தேடும் ஒன்றாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'உற்பத்திளைத் தொடர்ச்சியாகப் புரட்சிமயப்படுத்தல், சகல சமூக நிலைமைகளும், இடைவிடாது குழம்புதல், நிரந்தரமான நிச்சயமின்மையும், கிளர்ச்சியும்', பொதுவுடைமைப் பிரகடனம் 1848இல் மலரும் காலங்களை இவ்வாறாக விபரித்தது. நாம் இத்தகைய நிலைமைகளின் கீழேயே வாழுகின்றோம். இந்த மாற்றங்களுக்கு முகங்கொடுக்காத, மாற்றமுற்ற நிலைமைகளுக்கு ஏற்றவகையில் தனது வழிமுறைகளை இசைவாக்கம் செய்யாத ஒரு கட்சி செயலற்று, தனது ஆக்கசக்தியை இழந்துவிடும்.


ஜெர்மன் சமூக ஜனநாயகம் மீள்திசைமார்க்கப்படுத்தலுக்கான தனது துணிச்சலைத் தொடர்ச்சியாக நிரூபித்துள்ளது. 1848 புரட்சிக் காலப்பகுதியிலும், ஜெர்மன் கூட்டுச் சமஷ்டியின் போதும், ஜெர்மன் சக்கராதிபத்தியக் காலத்திலும், வெயிமார் குடியரசுக் காலப்பகுதியிலும், தேசிய சோஷலிஸ சர்வாதிகாரத்தின் போதும், ஜெர்மன் பழைய மற்றும் புதிய சமஷ்டிக் குடியரசுக் காலப்பகுதியிலும் பல்வேறு வித்தியாசமான அரசியல் மற்றும் சமூக முறைமைகளின் கீழ் அது தன்னை மாற்றிக் கொள்வதன் மூலம் தனது அடையாளத்தைப் பேணிப்பாதுகாப்பது சாத்தியமாகியுள்ளது.

இப்பொழுது கூட, உலகமயமாக்கல் சூழ்நிலைகளில் (SPD) ஜெர்மனியின் சமூக ஜனநாயகக் கட்சி ஒரு புதிய அரசியல் அரங்குடனும், நிகழ்ச்சித்திட்டத்துடனும் தனது அரசியல் நடவடிக்கைகளுக்கான வழிகாட்டல்களை வகுத்தமைக்கின்றது.

இப்பொருட்காட்சி சமூக ஜனநாயகக் கட்சி ஒரு தொழிலாளர் வர்க்கக் கட்சி ஒன்றிலிருந்து எவ்வாறு ஒரு சீர்திருத்தத் திசைமார்க்கத்தைக் கொண்ட மக்கள் கட்சியாக அபிவிருத்தியடைந்துள்ளது என்பதைக் காட்டுவது மாத்திரமன்றி, சமூக ஜனநாயகவாதிகளுக்கான கட்சி நிகழ்ச்சித் திட்டங்கள் நிலைமாற்றமின்றி ஒரு குறிப்பிட்ட வழிகாட்டலின் கீழ் செல்லும் அவர்களின் செயற்பாடுகளின் தார்மீக அடிப்படையையும் தெளிவுபடுத்துகின்றது. இது சமூக நீதிக்கானதும் அதன் பலத்தை ஒருமைப்பாட்டில் நிரூபிப்பதுமான சுதந்திரத்தை நோக்கிய ஒரு முயற்சியாகும்.

# 2 ‘உலகத் தொழிலாளர்களே, ஒன்று சேருங்கள்!’

## கைத்தொழில் புரட்சிக்கான ஒரு முதலாவது பதில் - 1848இன் பொதுவுடமைப் பிரகடனம்



1. புதிதாக உருவாக்கப்பட்ட தொழிற்சாலைகளில் தொழிலாளர்கள் கடுமையான ஒழுக்காற்று முறைகளுக்கும், கடூரமான நேர அட்டவணைகளுக்கும் முகங்கொடுத்தனர். வேலைத்தலத்தில் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு என்பவை அந்த நேரத்தில் இருக்கவில்லை.



3. 19ஆம் நூற்றாண்டில் தொழிலாளர்கள் மிகச் சிறிய, துர்நாற்றம் வீசும் நெருக்கடியான தொடர்வீடுகளில் வசித்தனர்.



2. குடும்பத்தின் வாழ்வாதாரத்திற்கு இளைஞர்களும், சிறுவர்களும் வேலை செய்ய வேண்டியுள்ளது. நீண்ட காலமாக சிறுவர் சரீரஉழைப்பு ஒரு பொதுவான நிகழ்வாகும்.

கைத்தொழில் புரட்சி முன்செல்கையில் நகர்ப்புறமயமாக்கம், துரித ஜனத்தொகை வளர்ச்சி மற்றும் வறுமை என்பவை 19ஆம் நூற்றாண்டின் முதல் அரைப்பகுதியில் சேர்ந்து பெருகும் அரசியல் மற்றும் சமூக முரண்பாடுகளைத் தீவிரப்படுத்தி, தீவிர அரசியல் மற்றும் சமூக மாற்றங்களுக்கான கோரிக்கையை வலுப்படுத்தின. 1848இல் கார்ல் மார்க்ஸ் மற்றும் பிரெட்ரிக் எங்கெல்ஸ் வெளியிட்ட பொதுவுடைமைப் பிரகடனம் முதலாளித்துவ சமூகத்தின் கூர்மையான பகுப்பாய்வு மற்றும் விமர்சனத்தை ஒன்றிணைத்து, தொழிலாளர் வர்க்கத்தின் புரட்சிகர எதிர்ப்பியக்கத்துக்கான வேண்டுகோளை விடுத்தது.





4. ‘பொதுவுடைமைப் பிரகடனத்தின்’ சிற்பிகள் கார்ல் மார்க்ஸ் (1818 – 1883) மற்றும் பிரெட்ரிக் எங்கெல்ஸ் (1820 – 1895)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

19ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் கைத்தொழில் புரட்சி தொழிலாளர் வர்க்கம் எனப்படும் ஒரு புதிய சமூக அடுக்கின் தோற்றத்தைத் துரிதப்படுத்தியது. முதலாளித்துவ நிலைமைகளின் கீழ் கைத்தொழில் உற்பத்தி வழிமுறைகள் புதிதாகத் தோன்றிய தொழிலாளர் வர்க்கத்தின் மீது, ஏனைய விடயங்களோடு, வேலைப் பிரிவினை மாறினும் மாறாவழமை, அழுக்கு, இரைச்சல், துர்நாற்றம் மற்றும் சுகாதாரக் கேடான நிலைமைகளின் கீழ் உற்பத்திப் பிரிவுகளை போன்ற தாக்கங்களை ஏற்படுத்தின. (1) நிலப்பிரபுத்துவப் பிணைப்புகளும், பாதுகாப்புகளும் இல்லாமற் போய், வர்த்தக சுதந்திரம் மற்றும் துரித ஜனத்தொகைப் பெருக்கம் என்பவை ஏற்பட்டு, அதிகரிக்கும் நகர்ப்புற மயமாக்கம் மற்றும் வறுமை என்பவை (2, 3) சேர்ந்து பெருகும் அரசியல் மற்றும் சமூக முரண்பாடுகள் ஓர் உச்சநிலைக்குச் செல்வதற்கும், தீவிர சமூக மற்றும் அரசியல் மாற்றத்துக்கான கோரிக்கை வலுப்பெறவும் வழிசெய்தன.

1848இல் கார்ல் மார்க்ஸ் மற்றும் பிரெட்ரிக் எங்கெல்ஸ் என்போர் இரகசிய பொதுவுடைமை லீக்கின் (Bund der Kommunisten) நிகழ்ச்சித் திட்டமாக 'பொதுவுடைமைப் பிரகடனத்தை வெளியிட்டார். (4) இந்த பிரகடனத்தில்' அவர்கள் தன்னுணர்வு பெற்ற தொழிலாளர் வர்க்கம் முதலாளித்துவ சமுதாயத்தைத் தோற்கடித்தது. சகல வர்க்க முரண்பாடுகளையும் ஒழித்துக் கட்டும் எனும், நம்பிக்கையை வெளியிட்டனர். தொழிலாளர் வர்க்க சர்வாதிகார காலப்பகுதியென்பது, பின்னர் லெனின் வெளிப்படுத்திய எண்ணக்கருவான பாரிய பெரும்பான்மையினரின் நலன்களுக்கான, பாரிய பெரும்பான்மையின் சர்வாதிகாரம் பெறப்படுவதற்கு நேரெதிரான நிலைமமாற்றக் காலப்பகுதி மாத்திரமேயமாகும். வர்க்க சமுதாயத்தை இல்லாதொழித்த பின்னர், ஒவ்வொருவரதும் சுதந்திரமான அபிவிருத்தியே அனைவரதும் சுதந்திரமான அபிவிருத்திக்கான முன் நிபந்தனையாகும். இந்த நிகழ்ச்சித் திட்டம் உலகத் தொழிலாளர்களே ஒன்று சேருங்கள்! என்னும் அழைப்பை விடுத்தது.

ஆரம்பத்தில் பொதுவுடமை லீக்கின் நிகழ்ச்சித்திட்டம் அனேகமாக எந்தவிதமான நடைமுறை அல்லது அரசியல் தாக்கத்தையும் ஏற்படுத்தவில்லை. பொதுவுடைமைப் பிரகடனம் 1870களில் அதன் புதிய பதிப்புகள் வெளியாகிய பின்னரே சமூக ஜனநாயகத்தின் மிகவும் முக்கியமான சிருஷ்டிகளுள் ஒன்றாகியது.



# 3 'எமது விடயங்களை எமது கைகளில் எடுத்துக் கொள்வோம்'

## 1848 'தொழிலாளர் சகோதரத்துவத்தின்' நியதிச் சட்டம்



3. கல்லச்சு: ஸ்டீபன் போர்ன் (1824- 1898)




1. கல்லச்சு: பேர்லினில் வீதிச்சமர்கள், 1848




2. Das Volk ('மக்கள்') முதல் பக்கம் 26 ஏப்ரலில் 1848

1848இல் ஐரோப்பாவில் மன்னராட்சிகளை உலுக்கிய புரட்சிகளின் போது முதலாவது பொது ஜெர்மன் தொழிலாளர்களின் அமைப்பாகிய (தொழிலாளர்சகோதரத்துவம்):'Arbeiterverbrüderung' தாபிக்கப்பட்டது. அதன் ஆசனத்தவிசாளர் ஸ்டீபன் போர்ன் வரைந்த நியதிச் சட்டங்களின் தலைப்புகள் சமூக-அரசியல் மேம்பாடுகளைக் கொண்டுவருதல், மற்றும் பொதுவான (மறைமுக) வாக்குரிமை மூலம் ஒரு பாராளுமன்ற, ஜனநாயக அரசை உருவாக்குதல் என்பவையாகும். பிற்போக்கின் காலப் பகுதியாகிய 1850களின் ஆரம்பத்தில் தொழிலாளர் சமத்துவ அமைப்பு தடைசெய்யப்பட்டது.



5. கல்லச்சு: புரட்சிகர அரசியலமைப்பொன்றை நடைமுறைப்படுத்துமாறு கோரி பேடனில் இடம்பெற்ற போராட்டம்




4. 'சகோதரத்துவம்' முதல் பக்கம் 13 அக்டோபர் 1848 மற்றும் நியதிச் சட்டங்களிலிருந்து பிரித்தெடுத்த பகுதி



6. கேலிச்சித்திரம்: ஐரோப்பில் எதிர்ப்புரட்சி: மீண்டும் பலம்பெற்ற பிற்போக்கு சக்திகள் புரட்சியாளர்களை அடக்குதல். அவர்கள் ஜேர்மனியிலிருந்து வெளியேற்றப்பட்டனர் அல்லது கொல்லப்பட்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1848இல் பிரான்சில் மத்தியதர வர்க்க மன்னர் லூயி பிலிப்பின் வீழ்ச்சிக்கு இட்டுச் சென்ற பெப்ருவரிப் புரட்சி ஜெர்மன் கூட்டுச் சமஷ்டி அரசுகளிலும் ஒரு புரட்சிகர இயக்கத்தை உருவாக்கியது. அது ஓர் அரசியலமைப்பையும், பத்திரிகை சுதந்திரத்தையும், முழு ஜெர்மன் பாராளுமன்றத்துக்கான தேர்தல்களையும் கோரியது. சில சிறிய ஜெர்மன் அரசுகளில் எவ்வித எதிர்ப்புமின்றி இக்கோரிக்கைகள் வழங்கப்பட்டன, அல்லது அவை குறித்த வாக்குறுதியாவது வழங்கப்பட்டது. 1848இல் பிரஷ்யாவில் நிலைமைகள் இரத்தம் சிந்தும் வீதிச் சமர்களாக உச்சநிலைக்குச் சென்றன. பிரதானமாக, பேர்லினில் IVஆம் பிரெட்ரிக் வில்ஹெம் அரசர் பல சலுகைகளை வழங்க நேர்ந்தது. (1)


ஜெர்மன் தொழிலாளர் வர்க்கத்துக்கு 1848 ஒரு புதிய சகாப்தத்தின் திருப்புமுனையாகியது: அது ஒழுங்கமைக்கப்பட்ட ஜெர்மன் தொழிலாளர் இயக்கத்தின் உதயத்தைக் குறிக்கிறது. அந்த வருடத்தின் செப்டம்பர் மாதத்தில் 'Arbeiterverbrüderung' (தொழிலாளர் சகோதரத்துவ அமைப்பு) பேர்லினில் இடம்பெற்ற ஜெர்மன் தொழிலாளர் மாநாட்டில் நிறுவப்பட்டது. (2) அண்ணளவாக 20,000 அங்கத்தவர்களைக் கொண்ட இந்த அமைப்பு ஜெர்மன் தொழிலாளர்களின் முதலாவது வெகுஜன அமைப்பாகும். தொழிலாளர் சகோதரத்துவ அமைப்பின் ஆசனத்தவிசாளர் ஸ்டீபன் போர்ன் (3) வரைந்த நியதிச் சட்டங்களின் (4) பிரதான பிரச்சினைகள் கூட்டம் கூடும் சுதந்திரம், தொழிற்சங்கங்களை அமைத்தல் நோய் மற்றும் மரணச் சடங்குச் செலவுகளுக்கு நிதியங்களை ஏற்படுத்துதல், வேலை செய்ய முடியாதவர்களுக்கான கவனப் பராமரிப்பு, வேலை நேரங்கள் குறைப்பு, பாடசாலைகளில் கட்டணங்களை ஒழித்தல் மற்றும் அனைவருக்கும் சமமான மறைமுக வாக்குரிமையின் அடிப்படையில் ஒரு பாரதூரமான ஜனநாயக அரசை உருவாக்குவதல் என்பவையாகும்.

பரிணமிக்கும் எதிர்ப்புரட்சிக்கு எதிராக அமைப்பின் தலைமைத்துவம் ஆயுதந்தரித்த எதிர்ப்புப் போராட்டம் குறித்தும் சிந்தித்தது (5). அக்ஸோனியா, பேடன் மற்றும் ரைன்-ஹெஸ் போன்ற இடங்களில் எதிர்ப்புக் கிளர்ச்சிகள் தோல்வி கண்டதால், பிற்போக்கு நிலைமைகள் காலகட்டத்தில் 'சகோதரத்துவம்' (6) தனது நடவடிக்கைகளை அரசுக் கடன்களூடாக உற்பத்தியாளர், நுகர்வாளர் நலன்கள் என்பதற்கு வரையறுக்க வேண்டியேற்பட்டது.



# 4 1860களின் சூழ்நிலை குறித்த ஆரம்பகால நிகழ்ச்சித்திட்டப் பகுப்பாய்வு

## லஸ்ஸாலின் 'பகிரங்கக் கடிதம்', 1863 - Allgemeine Deutsche Arbeiter-Verein (ADAV)



3. ADAV நிறுவப்பட்ட லீப்ஸிக் கேளிக்கைக் கூடம்

1863 ஆரம்பத்தில் ஒரு லீப்ஸிக் தொழிலாளர் குழுவுக்கு எழுதிய 'பகிரங்கக் கடிதத்தில்' மத்தியதர வர்க்க ஜனநாயகவாதி பேர்டினன்ட் லஸ்ஸால் தொழிலாளர் வர்க்கத்தின் 'சுதந்திரமான அரசியல் கட்சி' ஒன்றுக்கான அழைப்பை விடுத்ததோடு, 'பொதுவான சமத்துவமான, நேரடியான (ஆண்கள்) வாக்களிப்பு முறைமையைக் கட்சியின் சுலோகமாகவும், கொள்கைச் சின்னமாகவும்' பிரகடனம் செய்தார். இந்த வேண்டுகோளுடன் அவர் 1863 மே 23ஆந் திகதி தாபிக்கப்பட்ட பொது ஜெர்மன் தொழிலாளர் சங்கத்தின் (ADAV) நிகழ்ச்சித் திட்டத்தை வரைவிலக்கணம் செய்து, முதலாவது ஜெர்மன் தொழிற்கட்சியை அபிவிருத்தி செய்தார். லஸ்ஸால் கடுமையான ஒழுக்கவிதிகளை ஏற்படுத்திய இச்சங்கத்தின் மத்திய சமூக-பொருளாதாரக் கோரிக்கையே அரசின் ஆதரவுடன் (அரசுக் கடன்கள்) ஏற்படுத்தப்படும், ஜனநாயகமயப்படுத்தப்பட வேண்டிய உற்பத்திச் சங்கங்களின் அடிப்படையாகும்.


Antwortschreiben

Central-Comité

Ferdinand Lassalle

2. 'பகிரங்கக் கடிதம்' முன் பக்கம்



4. ADAV நிறைவேற்றுக் குழு அங்கத்தவர்கள் மத்தியதர வர்க்கத்தர் தோற்றநிலையில் (லஸ்ஸால் வலதுபுறமிருந்து முதலாவதாக)



6. ADAV 10வது நூற்றாண்டு விழாவில் கொடையளிக்கப்பட்ட ஜெர்மன் சமூக ஜனநாயகக் கட்சியின் பாரம்பரியக் கொடி


Bundeslied

Allgemeinen Deutschen Arbeiterverein

Georg Herwegh



1. பேர்டினன்ட் லஸ்ஸால் (1825-1864)

5. ADAVயின் சமஷ்டிக் கீதம், தொழிலாளர் வர்க்கத்தின் அறியப்பட்ட மிகச் சிறந்த பாடல்களில் ஒன்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1863இன் தொடக்கத்தில் லீப்ஸிக் தொழிலாளர் குழுவொன்று எதிர்காலத் தொழிலாளர் இயக்கமொன்றுக்கான முன்மொழிவுகளைச் செய்யுமாறு முதலாளித்துவ ஜனநாயகவாதியான பெர்டினன்ட் லஸ்ஸாலைக் (1) கேட்டுக்கொண்டது. லஸ்ஸால் இந்த வேண்டுகோளை ஏற்று, 'ஜெர்மன் தொழிலாளர்களின் பொது மாநாடொன்றைக் கூட்டுமாறு மத்திய குழுவுக்கான ஒரு பகிரங்கக் கடிதத்தை' எழுதினார் (2) லஸ்ஸால், தனது நிகழ்ச்சித்திட்டம்சார் ஆக்கத்தில் 'சுதந்தரமான அரசியல் கட்சி' ஒன்றைத் தாபிக்குமாறும், பிற்போக்கான, பிரஷ்ய முப்பிரிவு வாக்களிப்பு முறைமைக்குப் பதிலாக, 'அனைவருக்கும் சமமான, நேரடியான வாக்குரிமைக் கட்சியின்' சுலோகமாகவும், கொள்ளைச் சின்னமாகவும் வகுத்தமைக்குமாறும் தொழிலாளர் வர்க்கத்துக்கு அழைப்புவிடுத்தார். இக்கோரிக்கை ஆண்களுக்கு மாத்திரம் பொருந்துவதாகும்.

லஸ்ஸால் பொருளாதார அர்த்தத்தில் தொழிலாளர்கள் 'கூலிகள் சம்பந்தமான இரும்புச் சட்டத்துக்கு' அடிமைப்பட்டிருப்பதாகவும் நீண்ட கால நோக்கில் கூலிகள் வறுமைக் கோட்டுக்கு மேல் செல்லமாட்டா என்றும் தெரிவித்தார். தொழிலாளர்கள் தாமே தொழிலதிபர்களாக மாறுவதன் மூலம் மாத்திரமே சமூக நிலைமையில் மேம்பாடு ஏற்படுமென்றும், இது ஜனநாயகமயப்படுத்தப்பட்ட உற்பத்தியாளர் கூட்டுறவுகள் மற்றும் அரசுக் கடன்களுடாகவும் நிறைவேற்றப்பட வேண்டுமென்றும் தெரிவித்தார்.

1863 மே 23ஆந் திகதி Allgemeine Deutsche Arbeiter-Verein (பொது ஜெர்மன் தொழிலாளர் சங்கம்) (4) லீப்ஸிக் 'கேளிக்கைக் கூட்டத்தில்' தாபிக்கப்பட்ட லஸ்ஸஸ் அதன் தலைவராகத் தெரிவுசெய்யப்பட்டார். அவரின் கண்டிப்பான தலைமைத்துவத்தின் கீழ் ADAV (5, 6) 4,000க்கு மேற்பட்ட அங்கத்தவர்களுடன் முதலாவது ஜெர்மன் தொழிற்கட்சியாக அபிவிருத்தியுற்றது. 1864 இலையுதிர் காலத்தில் அவரின் மரணத்தைத் தொடர்ந்து ADAV யினுள் தீவிர பிணக்குகள் எழுந்தன.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


5

# 1860களின் சூழ்நிலையின் ஆரம்ப கால நிகழ்ச்சித்திட்டம்சார் பகுப்பாய்வு

## Vereinstag deutscher Arbeitervereine (VDAV)




3. கல்லச்சு: பாசெல் IWA கூட்டத்தில் பங்குபற்றியோர் 1869



1. ஒகஸ்ட பெபல் (184-1913) 1860 அளவில்

1863 ஜூன் மாதத்தில் ADAV நிறுவப்பட்டதன் சற்றுப் பின்னராக, பல்வேறு அரசியல் பின்னணிகளைக் கொண்ட தொழிலாளர் சங்கங்கள் பிராங்க்பேர்ட் அம் மெயினில் ஒன்றுகூடி (ஜெர்மன் தொழிலாளர் சங்கங்களின் சம்மேளனம்) VDAVஐத் தாபித்தனர். ADAVஐப் போலன்றி அது மிகவும் இறுக்கமற்ற ஸ்தாபனக் கட்டமைப்பைக் கொண்டிருந்தது. ஆரம்பத்தில் அவர்கள் முதலாளித்துவ வர்க்கத்தின் தாராளவாதப் பிரதிநிதிகளுடன் ஒத்துழைத்தனர். 1865 முதல் VDAV உற்பத்திச் சங்கங்கள் மற்றும் (ஆண்களுக்கான) பொதுவான, சமத்துவமான, இரகசிய வாக்கெடுப்புக்காக வாதிட்டனர். 1868இல் VDAV முதல் சர்வதேச மானிய, சர்வதேச உழைப்பாளர் சங்கத்தின் (IWA) நியதிச் சட்டங்களை ஏற்றுக்கொண்டது.



2. 1867 அக்டோபர் 31ந் திகதி ஒகஸ்ட் பெபல் தலைமையில் இடம்பெற்ற முதலாவது நிர்வாக சபைக் கூட்ட நிகழ்வு அறிக்கையும், VDAVயின் நிலையியல் கட்டளைகளும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1863 ஜூனில் ADAV தாபிக்கப்பட்ட பின்னர் பல்வேறு அரசியல் பின்னணிகளைச் சேர்ந்த தொழிலாளர் சங்கங்கள் பிராங்பேர்ட் அம்மெயினில் ஒருங்கிணைந்து ஜெர்மன் தொழிலாளர் சங்கங்களின் சம்மேளனமாகிய ADAVஐ (Vereinstag deutscher Arbeitervereine) உருவாக்கினார். 1865 முதல் Leipzig Arbeiter Bildungsverein (தொழிலாளர் கல்விச் சங்கம்) தலைவராக விளங்கிய ஓகஸ்ட் பெபல் (1) தாபித்த மாநாட்டின் பங்கேற்பாளருள் ஒருவராக விளங்கினார். அவர் 1867இல் அதன் தலைவரானார். (2) இந்த அமைப்பு ADAVஐ விட மேலும் ஜனநாயகரீதியாக ஒழுங்கமைக்கப்பட்டிருந்தது. ஆரம்பத்தில் அவர்கள் முதலாளிவர்க்கத்தின் தாராளவாத எண்ணங் கொண்ட பிரதிநிதிகளுடன் ஒத்துழைத்தனர்.


ஆரம்பத்தில் VDAV தன்னை ADAVயின் கோரிக்கைகளிலிருந்து தீவிரமாக வேறுபடுத்திக் கொண்டது. ஆயினும், தொடர்ந்த வருடங்களில் உறவுகள் மேலும் நெருக்கமாகின. 1865 முதல் VDAV உற்பத்தியாளர்கள் கூட்டுறவுகள் உருவாக்கத்துக்காக வாதிட்டதோடு, அனைவருக்கும் சமமான, வாக்குரிமைக்கும், (ஆண்களுக்கு) இரகசிய வாக்களிப்புக்கும் ஆதரவளித்தது. 1868இல் VDAV முதலாவது சர்வதேசமாகிய சர்வதேச உழைப்பாளர் அங்கத்தின் (IWA) (3). நியதிச் சட்டங்களை ஏற்றுக்கொண்டது. இவை கார்ல் மார்க்ஸினால் எழுதப்பட்டவையாகும்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 6 'புதிய காலங்கள் மலர்ந்துள்ளன'

## 1869 சமூக ஜனநாயகத் தொழிற்கட்சியின் எய்சனாச் நிகழ்ச்சித்திட்டம்





4. 1871இல் ட்ரெஸ்டனில் இடம்பெற்ற SDAP யின் 2ஆவது மாநாட்டில் பங்குபற்றியோர்.

1869 ஆகஸ்ட் மாதத்தில் எய்சானச்சில் சமூக ஜனநாயகத் தொழிற்கட்சி தாபிக்கப்பட்டது. முதலாவது நிகழ்ச்சித் திட்டத்தை வரைந்தவர் ஓகஸ்ட் பெபல் ஆவார். எய்சனாச்சில் நிறுவப்பட்ட புதிய கட்சி கார்ல் மார்க்ஸினால் எழுதப்பட்ட முதலாவது சர்வதேசியத்தின் நியதிச்சட்டங்களையே அடிப்படையாகக் கொண்டிருந்தது. அதன் நடுநாயகமான நோக்கில் 'உழைக்கும் வர்க்கங்களின் பாதுகாப்பும், அவர்களின் நிலைமையை மேம்படுத்துவதும், பூரண விடுதலையுமாகும்.' SDAP பிரதானமாக உட்கட்சி ஜனநாயகம், தொழிற்சங்க இயக்கத்தின் நிபந்தனையற்ற ஆதரவு மற்றும் ஜெர்மன் தேசிய ஐக்கியத்துக்கான மனப்பாங்கு என்னும் விடயங்களில் ADAVயிலிருந்து வேறுபட்டிருந்தது.



2. எய்சனாச் கட்சி நிகழ்ச்சித் திட்டம் ஏற்றுக்கொள்ளப்பட்ட எங்சநாக்கிலுள்ள "ஹோட்டல் சும் மொஹ்ரென்."




3. எய்சனாச் நிகழ்ச்சித் திட்டம் 19ஆம் நூற்றாண்டின் இறுதியில் ஏனைய கட்சி நிகழ்ச்சித் திட்டங்களைப் போலவே மிகவும் சுருக்கமானது.

1. எய்சனாச்சில் இடம்பெற்ற தாபித மாநாட்டில் விடுக்கப்பட்ட அழைப்பு. 'டெமோக்கிராட்டிக் வீக்லி' பத்திரிகையில் ஜெர்மன் சமூக ஜனநாயக வாதிகளுக்கு 1869 ஜுலை 17ஆந் திகதி விடுக்கப்பட்ட அழைப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1869 ஆகஸ்டில் எய்சனாச்சில் SDAP, சமூக ஜனநாயக தொழில் கட்சி (Sozialdemokratische Arbeiterpartei) தாபிக்கப்பட்டது. முதலாவது நிகழ்ச்சித் திட்டத்தை ஓகஸ்ட் பெபல் வரைந்திருந்தார் (1). எய்சனாச்சில் தாபிக்கப்பட்ட புதிய கட்சி (2) பிரதானமாகக் கார்ல் மார்க்ஸினால் எழுதப்பட்ட முதலாவது சர்வதேசியத்தின் நியதிச்சட்டங்களையே அடிப்படையாகக் கொண்டிருந்தது. இதன் நடுநாயகமான நோக்கம் 'உழைக்கும் வர்க்கத்தின் பாதுகாப்பும், மேம்பாடும் பூரண விடுதலையுமாகும்'.

எய்சனாக் நிகழ்ச்சித்திட்டம் (3) அநீதியான அரசியல் மற்றும் சமூக நிலைமைகளுக்கு எதிரான போராட்டத்திலும் கவனம் செலுத்தி, பின்வரும் முடிவுகளை மேற்கொண்டது: 'சமூகப் பிரச்சினை அரசியல் நிலைமைகளோடு பிரிக்க முடியாதவாறு பின்னிப்பிணைந்துள்ளது; அதன் தீர்வு அரசியல் நிலைமைகளின் தங்கியுள்ளது. அது ஒரு ஜனநாயக தேசத்தில் மாத்திரமே சாத்தியமானதாகும்.'

பிரதானமாக, உட்கட்சி ஜனநாயகம், தொழிற்சங்க இயக்கத்தின் நிபந்தனையற்ற ஆதரவு மற்றும் ஜெர்மனியின் தேசிய ஐக்கியம் குறித்த அதன் மனப்பாங்கு என்பவற்றில் SDAP ADAVயிலிருந்து வேறுபட்டிருந்தது.

கட்சியைத் தாபித்த பின்னர், எய்சனாச்சில் இடம்பெற்றுக்கொண்டிருந்த ஜெர்மன் தொழிலாளர் சங்கங்களின் சம்மேளனத்தின் (VSAV) 6ஆவது மாநாடு தனது அமைப்பைக் கலைத்துவிட்டு SDAPயில் இணைந்துகொள்ளத் தீர்மானித்தது. (4)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7


# ‘தொழிலாளர்களின் விடுதலை தொழிலாளர் வர்க்கத்தாலேயே ஈட்டப்படுதல் வேண்டும்’

சமூக ஜனநாயகத்தின் ஒன்றிணைப்பு - 1875 கோத்தா நிகழ்ச்சித்திட்டம்



1. மரச் செதுக்கு வேலை: 1871இல் வேர்செயில்ஸில் ஜெர்மன் சக்கராதிபத்தியத்தின் தாபிதம்

தேச அரசு மட்டத்தில் ஜெர்மன் சக்கராதிபத்தியம் தாபிக்கப்பட்டதும் (1871) வேறுபாடுகள் முடிவுக்கு வந்ததோடு, அதன் பின்னர் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியின் போதனை அடக்குமுறை சம்பந்தமான பொதுவான அனுபவம் அதற்கு முன்னர் பகையுணர்வு கொண்டிருந்த தொழிற் கட்சிகளிடையே ஒன்றிணைவுக்கு வழிவகுத்தது. வில்ஹெம் லியெப்நெக்ட் எழுதிய நிகழ்ச்சித்திட்டம் ‘பழைய’ ஜனநாயகக் கோரிக்கைகளுக்கும், பல மார்க்ஸீய மற்றும் லஸ்ஸாலியன் எண்ணக் கருக்களுக்கும் நியதிகளுக்குமிடையிலான ஒரு கலவையை வழங்கியது. அது கட்சி அங்கத்தினர்களின் சிந்தனைகள், உணர்வுகளோடு இயைபுள்ளதாக விளங்கியது. லண்டனில் இருந்த கார்ல் மார்க்ஸ் மற்றும் எங்கெல்ஸைப் போலவே, நிகழ்ச்சித்திட்ட வேறுபாடுகளை விட, ஒருங்கிணைவு நோக்கமே மேலும் முக்கியமானதென்று எண்ணினார். 1875மேயில் கோத்தாவில் நிறுவப்பட்ட ஜெர்மன் சோஷலிஸத் தொழிற்கட்சி (SAPD) ‘சகல சட்டபூர்வமான வழிகளிலும் ஒரு சுதந்திரமான தேசத்தையும், சோஷலிஸ சமூகத்தையும், அமைக்க விரும்பியது. முதலாவது ஜெர்மன் கடசியென்ற வகையில் அது பெண்கள் உள்ளடங்கலாக சகல சமூக வகைப் பிரிவுகளையும் சேர்ந்த பிரஜைகளுக்கும் வாக்குரிமையைக் கோரியது.




2. வில்ஹெம் லியெமப்நெக்ட் (1826-1900) மற்றும் 1875இன் கோத்தா நிகழ்ச்சித்திட்டம்



4. SAPD அங்கத்துவ அட்டை



3. டார்விங் கோத்தா கட்சி மாநாட்டில் ஓகஸ்ட் பெபல்.



5. கோத்தா கட்சி மாநாட்டில் ஞாபகார்த்தப் பக்கம். நடுவில் முதல்வர்கள் கார்ல் மார்க்ஸ் மற்றும் லஸ்ஸாலால்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிராங்கோ-ஜெர்மன் யுத்தம் (1870/71), மற்றும் ஜெர்மன் சக்கராதிபத்தியத்தின் தாபிதம் (1871) (1) என்பவற்றைத் தொடர்ந்து பரிணமித்த பொருளாதார நெருக்கடிகள் தீவிரமடையும் வர்க்க முரண்பாடுகளுக்கு இட்டுச் சென்றதோடு, ADAV மற்றும் SDAPக்கு எதிரான பொலிஸ் அடக்குமுறையையும் ஏற்படுத்தின. இறுதியில் இப்பொதுவான அனுபவத்தின் காரணமாக இரு கட்சிகளும் ஒன்றிணைவது தவிர்க்க முடியாதது என்பதை அவர்களுக்கு உணர்த்தியது.

வில்ஹெம் லியெப்நெச்டர் ஐக்கியமுற்ற கட்சியின் நிகழச்சித்திட்டத்தில் பிரதான பகுதிகளை வகுத்தமைத்தார் (2). இது 'பழைய' ஜனநாயகக் கோரிக்கைகளினதும், மார்க்ஸீய மற்றும் லஸ்ஸாலியன் எண்ணக்கருக்களினதும் ஒரு கலவையாக அமைந்தது. அது தொடர்பில் விடயவாசகம் சகல கட்சி அங்கத்தினர்களினதும் சிந்தனைகள், உணர்வுகளுடன் பூரணமாக இணங்குவதாக அமைந்தது. எவ்வாறாயினும் ஓகஸ்ட் பெபலும், லண்டனில் கார்ல் மார்க்ஸும், பிரெட்ரிக் எங்கெல்ஸும் பெருமளவில் கோபமுற்றபோதிலும், ஒருங்கிணைவு நோக்கம் நிகழ்ச்சித்திட்ட வேறுபாடுகள் எதையும் விட முக்கியமானதாகத் தோன்றியது. (3)

1875 மே மாதத்தில் கோத்தாவில் நிறுவப்பட்ட ஜெர்மன் சோஷலிஸத் தொழிலாளர் கட்சி (SAPD) (4) 'சகல சட்டபூர்வமான வழிகளினூடாக ஒரு சுதந்திர தேசத்தையும் சோஷலிஸ சமூகத்தையும்' அமைக்க விரும்பியது.

முதல் ஜெர்மன் கட்சியென்ற வகையில் இது பெண்கள் உள்ளடங்கலாக, சகல வர்க்கங்களையும் சேர்ந்த சகல பிரஜைகளுக்கும் வாக்குரிமையைக் கோரியது.

தத்துவார்த்த அர்த்தப் பொதிவு இல்லாத நிலையிலும், கோத்தா நிகழ்ச்சித்திட்டம் சமூக ஜனநாயகத்தின் ஒருங்கிணைவுக்கான ஓர் அரங்காக விளங்கியது. 1875இல் அது தாபிக்கப்பட்ட போது அக்கட்சியில் அண்ணளவாக 25,000 அங்கத்தவர்கள் இருந்தனர் (5). 1876இலிருந்து வெளிவந்த முதலாவது கட்சிப்பிரசுரம் 'Vorwarts' (முன்னுரை) என்பதாகும்.

UNIFICATION
Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 'சகல விதமான சுரண்டல் மற்றும் அடக்கு முறையை..... எதிர்த்துப் போராடுங்கள்'

## 1891இன் ஏர்பேர்ட் நிகழ்ச்சித்திட்டம்



3. கெப்சர்சால்- ஏர்பேர்ட் கட்சி மாநாட்டின் நிகழ்விடம்



4. கார்ல் கோட்ஸ்கி (1854-1938), எடுவார்ட் பேர்ன்ஸ்டீன் (1850-1932) மற்றும் 1891 ஏர்பேர்ட் நிகழ்ச்சித் திட்டம்







பிஸ்மாக்கின் 'சோஷலிஸ எதிர்ப்புச் சட்டங்கள்' சுமத்திய 12 வருடமாகத் தடையைத் தொடர்ந்து (1878-1890) SAPD ஜெர்மனியின் சமூக ஜனநாயகக் கட்சி (SPD) என்னும் பெயரை ஏற்றுக்கொண்டது. 1891இல் அது ஏர்போர்ட்டில் ஒரு புதிய நிகழ்ச்சித்திட்டத்தையும் ஏற்றுக்கொண்டது. இந்த நிகழ்ச்சித்திட்டம் கார்ல் கோட்ஸ்கியின் எதிர்கால சோஷலிஸத்தை நோக்கிய அபிவிருத்தி சம்பந்தமான மார்க்ஸீயப் பகுப்பாய்வு மற்றும் முன்கணிப்புக்கும், எடுவார்ட் பேர்ஸ்ஸ்டீனின் நிகழ்கால சமூக முறைமை சம்பந்தமான சமூக சீர்திருத்தக் கோரிக்கைக்கும் இடையிலானஒன்றிணைப்பாகவிருந்தது. அந்த நேரத்தில் புரட்சிகர நோக்கங்களையும், நடைமுறைச் சமூக சீர்திருத்தங்களையும் ஒன்றிணைப்பது முரண்பாடானதாகக் கருதப்படவில்லை.



1. பிஸ்மார்க் மற்றும் அவரின் கொள்கை சம்பந்தமான கேலிச்சித்திரம்




2. 'Der Sozialdemokrat' (சிவப்புப் பதிப்பு) 12 வருட கால அடக்குமுறை இடம்பெற்ற போதிலும் 1890இல் பாராளுமன்றத்துக்கான (Reichstag) தேர்தலில் சமூக ஜனநாயகக் கட்சியின் வெற்றியை ஆவணப்படுத்துகின்றது




5. சித்திரப் பின்னல் வேலைப்பாடு (20ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்துக்குச் சிறிது முன்னராக) லஸ்ஸால், பெபல் மற்றும் மார்க்ஸின் ஓவியங்களுடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிஸ்மாக்கின் (1) 12 வருட கால 'சோஷலிஸ எதிர்ப்புச் சட்டங்கள்' நடைமுறையிலிருந்த போதிலும், சமூக ஜனநாயகம் செழித்து வளரத் தொடங்கியது.. இதைச் சமூக ஜனநாயகவாதிகள் மேலிருந்து வரும் 'வர்க்கப் போராட்டமாக' அனுபவித்தனர். கட்சி தனது பெயரை ஜெர்மனியின் சமூக ஜனநாயகக் கட்சியென்று (SPD) மாற்றிக் கொண்டது. (2) அது 1891இல் ஏர்போர்ட்டில் (Erfurt) (3) ஒரு புதிய கட்சி நிகழ்ச்சித்திட்டத்தையும் ஏற்றுக்கொண்டது. இது ஐரோப்பாவின் பல சோஷலிஸ கட்சி நிகழ்ச்சித்திட்டங்களின் மீது பாரிய செல்வாக்கை ஏற்படுத்தியது.

ஏர்பேர்ட் நிகழ்ச்சித்திட்டத்துடன் மார்க்ஸிஸம் ஜெர்மன் சமூக ஜனநாயகத்தின் உத்தியோகபூர்வக் கட்சித் தத்துவமாகியது. 'சோஷலிஸ-எதிர்ப்புச் சட்டங்கள்' உருவாக்கிய சூழ்நிலைகளை எதிர்த்துப் போராடி, உயிர் பிழைத்த கட்சி மத்தியதர வர்க்க முதலாளித்துவ அமைப்பு கொணரக்கூடிய அழிவு குறித்தும், எதிர்காலத்தில் ஒரு சோஷலிஸ சமூகத்தை நடைமுறைப்படுத்த வேண்டிய அவசியம் குறித்தும் எடுத்துரைத்தது. இந்த நிகழ்ச்சித்திட்டம் (4) கார்ல் கோட்ஸ்கியின் எதிர்கால சோஷலிஸத்தை நோக்கிய அபிவிருத்தி சம்பந்தமான மார்க்ஸீயப் பகுப்பாய்வு மற்றும் முன்கணிப்புக்கும், எடுவார்ட் பேர்ள்ஸ்டீனின் நிகழ்கால சமூக முறைமை சம்பந்தமாக சமூகச் சீர்திருத்தவாதக் கோரிக்கைகளுக்குமிடையிலான ஒன்றிணைப்பாகவிருந்தது. புரட்சிகர நோக்கங்களையும், இக்களத்திற்குரிய நடைமுறைச் சமூக சீர்திருத்தங்களையும் ஒன்றிணைப்பது தன்னளவில் ஒரு முரண்பாடாகக் கருதப்படவில்லை. (5) உள்ளமைவான இந்த முரண்பாடு திரிபுவாதப் பிணக்கு என்பது அழைக்கப்படுவதில் இறுதியில் தீவிரமடைந்தது.

LIBERATION

விடுதலை

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 9 புரட்சிகர வர்க்கப் போராட்டம் அல்லது தொடர்ச்சியான சீர்திருத்தக் கொள்கை

## திரிபுவாதப் பிணக்கு 1896-1903



1. எடுவார்ட் பேர்ன்ஸ்டீன் (1890 அளவில்)



3. கேலிச்சித்திரம்: ஒகஸ்ட் பெபல், உப-தலைப்பு: 'கொந்தளிக்கும் ஒகஸ்ட்'

நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் எடுவார்ட் பேர்ன்ஸ்டீன் மார்க்சிஸ தத்துவத்தில் நடுநாயகமான கூற்றுக்களுக்கு ஒரு 'திருத்தத்தைக்' கொண்டுவர முயன்றார். அவரைப் பொறுத்தவரையில் 'வர்க்கத் தடைகள்' ஓர் இயற்கை விதியாக இருக்க வேண்டிய அவசியமில்லை என்பதோடு, தொழிலாளர் வர்க்கம் நிரந்தர வறுமையில் வீழ்ந்திருப்பது தடுக்க முடியாதது அல்ல. மத்தியதர வர்க்க-முதலாளித்துவ சமூகம் சரிந்து விழுவது ஒரு தர்க்கரீதியான விளைவாக இருக்க வேண்டுமென்ற அவசியமில்லை. பேர்ன்ஸ்டீனின் அபிப்பிராயத்தில் சோஷலிஸம், மார்க்ஸ் கூறுவது போன்ற விஞ்ஞான அடிப்படையையன்றி, ஒழுக்கவியல் அடிப்படையையே கொண்டுள்ளது. 1903இல் ட்ரெஸ்டனில் இடம்பெற்ற SPD கட்சி மாநாட்டில் ஒகஸ்ட் பெபலும், கட்சியின் மத்திய குழுவும், ரோஸா லக்ஸெம் பேர்க்கைச் சுற்றியிருந்த இடதுசாரிக் குழுவினரும், இவ்வாறாகக் கட்சியின் பெரும்பான்மை அங்கத்தினர்களின் 'திரிபுவாத முயற்சிகளை' நிராகரித்தனர். எவ்வாறாயினும் மார்க்சிஸக் கட்சித் தத்துவத்துக்கும், சமூகச் சீர்திருத்தக் கொள்கைக்குமிடையிலான முரண்பாட்டுத் தீ தொடர்ந்தும் கனன்று கொண்டிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. ரோஸா லக்ஸெம்பேர்க் (1871-1919) மற்றும் ஒகஸ்ட் பெபல் 1904இல் ஆம்ஸ்ரர்டாமில்

1986 தொடக்கம் எடுவார்ட் பேர்ன்ஸ்டீன் (1) மார்க்ஸீய தத்துவத்தின் நடுநாயகமான கூற்று 'திருத்தப்பட வேண்டும்' என்று தெரிவித்து அதற்கெதிரான ஒரு நிலைப்பாட்டை எடுத்தார். சமூக அபிவிருத்தி அவரின் அபிப்பிராயத்தில் ஏர்பேர்ட் நிகழ்ச்சித்திட்டத்தில் கூறப்பட்டிருந்தவற்றைவிட, வேறு வழிகளில் முன்னேறுவதாகும். பேர்ள்ஸ்டீனைப் பொறுத்தவரையில் வர்க்கரீதியான தடைகள் என்பவை ஓர் 'இயற்கை விதி' அல்ல என்பதோடு, தொழிலாளர் வர்க்கம் மேலும் மேலும் ஆழமாக வறுமையில் விழவேண்டிய அவசியமில்லை; அத்தோடு, மத்தியதர வர்க்க-முதலாளித்துவ சமூகம் ஒரு போதும் அழிந்துவிடமாட்டாது. திரிபுவழிகளின் விமர்சனம் பெபல், கோட்ஸ்கி மற்றும் ரோஸா லக்ஸெம் பேர்க்கைச் சுற்றியிருந்த இடதுசாரிப் பிரதிநிதிகள் அடங்கிய மார்க்ஸீயக் கட்சியமைவுக்கெதிராக இடம்பெற்றது. (2). அவர்கள் உற்பத்திச் சாதனங்கள் அனைத்தினதும் தேசியமயமாக்கம் என்னும் ஒரு தனிநடவடிக்கை தன்னியல்பாகவே பொது இலட்சியமாகிய சுதந்திரத்துக்கு இட்டுச் செல்லுமென்ற அபிப்பிராயத்தை ஏற்றுக்கொள்ளவில்லை.

திரிபுவாதிகளின் கண்ணோட்டத்தில் சோஷலிஸத்துக்கான இடைமாற்றம் அரசியல் முறைமையின் ஜனநாயகப்படுத்தல், மற்றும் பொருளாதாரத்தின் பிரமாணப்படுத்தல் என்பவை ஊடாகவே இடம்பெறுதல் வேண்டும். 1901 முதல் பேர்ள்ஸ்டீன், மார்க்ஸ் கூறுவது போன்று சோஷலிஸம் விஞ்ஞானபூர்வமாக அடிப்படையைப் பற்றி ஒழுக்கநெறி சார்பான அடிப்படையையே கொண்டிருப்பதால், இக் கண்ணோட்டத்திலிருந்து அது நீதிக்கும், குறித்துரைப்பான சமூக நலன்களுக்குமான தொழிலாளர் வர்க்கத்தினர் துடிப்பான போராட்டத்தின் மூலம் மாத்திரமே ஈட்டப்படக்கூடியதாகும் என்றும் தெரிவித்தார். ஒரு சோஷலிஸப் பொருளாதாரத்தில் சுய-பொறுப்புள்ளவர் ஈட்டிக்கொள்வதற்கு உழைப்பாளர் வர்க்கத்துக்குக் கல்வி அவசியமென்பதையும் அவர் வலியுறுத்தினார். அவரைப் பொறுத்தவரையில் சுய-பொறுப்புணர்வு என்பதன் கருத்து ஒரு புறத்தில் ஒரு சமூகக் கோட்பாடும், மறுபுறத்தில் தனிநபர் சுதந்திரமுமாகும்.


ஒகஸ்ட் பெபலும், கட்சியில் பெரும்பான்மையினரும் திரிபுவாதிகளின் நிலைப்பாட்டைத் தீவிரமான நிராகரித்திருந்தார். அவர்களின் பிணக்கு 1903இல் ட்ரெஸ்டனில் இடம்பெற்ற SPD கட்சி மாநாடு வரை அதிகரித்துச் சென்று, ஒரு பாரிய பெரும்பான்மையினர் 'திரிபுவாத முயற்சிகளை நிராகரித்தார். ஆயினும், இக்கருத்துக்கள் மேலும் ஆழமாக வேரூன்றுவதை அவர்களால் தடுக்க முடியவில்லை. மார்க்ஸிய கட்சித் தத்தவத்துக்கும், சமூக சீர்திருத்தக் கொள்கைகளுக்குமிடையிலான முரண்பாட்டுத் தீ மேலும் தொடர்ந்து கனன்று கொண்டிருந்தது. ஏர்பேர்ட் அரங்கையும், மார்க்ஸீயத்தையும் பாதுகாப்பதற்கான பெபலின் (3) முயற்சிகள் கட்சியை ஒற்றுமையாக வைத்திருப்பதற்கான அவாவின் பலமான விருப்புறுதியின் விளைவாகும். மறுபுறத்தில், அவர் SPD யை தற்போதுள்ள சமூக அமைப்பினுள் சீர்திருத்தங்களைக் கோரும் ஓர் இடதுசாரிக்கட்சியாக அபிவிருத்தி செய்யும் வகையிலான கட்சிக்குள் இருந்தோரின் முதல் முயற்சிகளுக்கு இடையூறு ஏற்படுத்தினார்.

CLASH OF THEORIES


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கட்சிக்கும், தொழிற்சங்கங்களுக்குமிடையிலான உறவு

## வெகுஜன வேலைநிறுத்த விவாதத்திலிருந்து 1906 'மான்ஹெயிம் உடன்படிக்கை' வரை



1. அரசியல் வெகுஜன வேலைநிறுத்தத்தைத் தொழிலாளர் இயக்கத்தின் இறுதி ஆயுதமாக ஏற்றுக்கொண்ட, 1904இல் ஆம்ஸ்டர்டாமில் இடம்பெற்ற சர்வதேச சோஷலிஸ மாநாடு



2. 1906 மான்ஹெயிம் கட்சி மாநாட்டில் முழுநிறை அமர்வு



3. ஓகஸ்ட் பெபல் (X) மற்றும் தொழிற்சங்கத் தலைவர் கார்ல் லீஜியென் (1861-1920) (XX) இவர்கள் மான்ஹெயிம் கட்சி மாநாட்டில் உடன்படிக்கையை வரைந்தார்.

1860களிலிருந்து தாபிக்கப்பட்ட சுதந்திர தொழிற்சங்கங்கள் முதலில் SPDயின் அரசியல் தலைமைத்துவத்தை ஏற்றுக்கொண்டன. அவற்றின் அனைத்துமடங்கும் வகையிலான வெற்றியும், குறிப்பாக அவற்றின் சமூக சாதனைகளும் 19ஆம் நூற்றாண்டின் இறுதியில் அவற்றுக்கு ஒரு புதிய தன்னம்பிக்கையை வழங்கின. இது தொழிற்சங்கங்களினதும், கட்சியினதும் தலைமைத்துவங்களிடையே முரண்பாட்டைத் தோற்றுவித்தது. இந்த முரண்பாடுகள் கட்சியின் தயக்கநிலைக்குத் தீர்வு காணும் வகையில் இடதுசாரிகள் பரப்பிய அரசியல் வெகுஜன வேலைநிறுத்தம் சம்பந்தமான கருத்துக்கள் பற்றிய வாதங்களிலிருந்து எழுந்தவையாகும். தொழிற்சாங்கங்கள் ஓர் அரசியல் வெகுஜன வேலைநிறுத்தத்துக்கெதிராக வாதிட்ட அதேவேளையில், SPD அதை இறுதி ஆயுதமாக ஏற்றுக்கொண்டது. 1906இல் இடம்பெற்ற மான்ஹெயிம் SPD கட்சி மாநாட்டில் தொழிற்சங்கங்களுக்கும், SPD கட்சிக்கும் சமத்துவமான உரிமைகள் நெறிமுறையாக ஏற்றுக்கொள்ளப்பட்டமையால் இப்பிணக்கு தீர்த்துவைக்கப்பட்டது.



4. மான்ஹெயிம் உடன்படிக்கை என்றும் அழைக்கப்பட்ட அரசியல் வெகுஜன வேலைநிறுத்தம் குறித்த தீர்மானம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறுகிய வாழ்க்கைக் காலத்தைக் கொண்ட முதலாவது தொழிற்சங்கங்கள் 1848 அளவில் பரிணமித்தன. 1860களில் அவற்றின் நிலைமைகள் மேம்பாடைந்தன. முதலில், அவை சமூக ஜனநாயகக் கட்சியின் தலைமைத்துவக் கோரிக்கையை ஏற்றுக்கொண்டன. ஆயினும், அவற்றின் அமைப்புரீதியான விரிவாக்கத்தின் போதும், பிரதானமாக தொழிற்சங்கத்தினால் ஈட்டிக்கொள்ளப்பட்ட பல சமூக சாதனைகளின் பின்னரும் அவை ஒரு புதிய தன்னம்பிக்கையைப் பெற்றுக்கொண்டன. இது சுதந்திரமான தொழிற்சங்கங்களுக்கும், SPDக்கும் இடையிலான நெருக்கடிகளுக்கு இட்டுச் சென்றது. இந்த முரண்பாடுகள், கட்சியின் தயக்கநிலையை இல்லாதொழிக்கும் வகையில் ரோஸா லக்ஸெம்பேர்க்கைச் சுற்றியிருந்த இடது-சாரிகளின் தூண்டுதலில் இடம்பெற்ற அரசியல் வெகுஜன வேலைநிறுத்தப் போராட்டம் குறித்த பிணக்கோடு மேலும் கூர்மையாக வெளிப்பட்டன.

1904இல் ஆம்ஸ்ரர்டாமில் இடம்பெற்ற சர்வதேச சோஷலிஸ மாநாடு (1) அரசியல் வெகுஜன வேலை நிறுத்தமே தொழிலாளர் வர்க்கத்தின் இறுதி ஆயுதமென்னும் கருத்தைப் பரப்பியிருந்தது. இத்தகைய உத்தியொன்றின் நேரடிப் பொறுப்பை வகிக்க வேண்டிய தொழிற்சங்கங்கள் தமது அமைப்புகளின் விஸ்தரிப்பு மற்றும் அவற்றின் அரசியல் நிலைப்பாடு என்பவை குறித்துப் பயம் கொண்டிருந்தமை காரணமாக அதை நிராகரித்தன.

எவ்வாறாயினும், SPD 1905இல் இடம்பெற்ற அதன் ஜெனா கட்சி மாநாட்டில் தீர்மானகரமான முரண்பாட்டுச் சூழ்நிலைகளில் அரசியல் வெகுஜன வேலைநிறுத்தம் ஒரு விருப்புத் தெரிவாகுமென்று தீர்மானித்தது. வெகுஜன வேலைநிறுத்தப் பிரச்சினை சம்பந்தமான கருத்து வேறுபாடு ஒருபுறத்தில் வெகுவாக மெச்சப்பட்ட கட்சியின் ஐக்கியத்துக்கு அச்சுறுத்தல் விடுத்தது. மறுபுறத்தில் அது கட்சிக்கும், தொழிற்சங்கங்களுக்கும் இடையிலான ஐக்கியத்துக்கு அச்சுறுத்தல்விடுத்தது. இப்பொருண்மை சம்பந்தமான வினாக்களிலிருந்து கோட்பாடு சம்பந்தமான வினாவொன்று எழுந்தது. இது கட்சிக்கும் தொழிற்சங்கங்களுக்கும் இடையிலான உறவாகும்.

1906இல் இடம்பெற்ற கட்சியின் மான்ஹெயிம் மாநாட்டில் (2) விதிமுறையற்ற பேச்சுவார்த்தைகளினூடாக ஓர் 'உடன்படிக்கை' மூலம் முரண்பாடு தீர்த்து வைக்கப்பட்டது (3). மான்ஹெயிம் கட்சி மாநாட்டில் ஏற்றுக்கொள்ளப்பட்ட இந்த உடன்படிக்கை (4) தொழிற்சங்கங்களுக்கும், கட்சிக்கும் சமத்துவமான உரிமை நெறிகளையும் உள்ளடக்கியிருந்தது. அதேவேளையில், சாத்தியமான பொது வேலைநிறுத்த விடயத்தில், பரஸ்பர கலந்தாலோசனை இடம்பெற வேண்டுமென்பதும் குறித்துரைக்கப்பட்டிருந்தது.

MASS STRIKE

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 11 ‘கட்சிச் சமரசமா’ அல்லது அடிப்படையான எதிர்ப்பா?

## முதலாம் உலக மகா யுத்தத்தின் போது (1914-1918) சமூக ஜனநாயகத்தில் பிளவு



3. யுத்தத்தில் யதார்த்தம்: 1916 வேர்டுன் சமர்



5. ஸ்டொக்ஹோமில் இடம்பெற்ற 1917 சமாதான மாநாட்டில் VSPD பேராளர்குழு. கார்ல் கோட்ஸ்கி (x), எடுவார்ட் பேர்ன்ஸ்ரைன் () மற்றும் ஹியூகோ ஹேஸ் (1863-1919) (xxx) ஏனையோருடன்



1. 1914 ஆரம்பத்தில் ஜெர்மன் பாராளுமன்றத்திலிருந்த சமூக ஜனநாயகப் பாராளுமன்றக் கட்சி: பிலிப் ஸ்கீடெமன் (X) மற்றும் பிரெட்ரிக் ஈபேர்ட் (XX) ஏனையோருடன்



2. 1914இல் அணிதிரளுதல்: ஆர்வமுடன் யுத்தத்திற்கான தயாரிப்பு

ஜெர்மன் அரசு தற்காப்புக்கான யுத்தமொன்றில் ஈடுபட்டுள்ளதென்ற தவறான நம்பிக்கை காரணமாக சமூக ஜனநாயகப் பாராளுமன்றக் கட்சி 1914 ஆகஸ்டில் ஏகாதிபத்திய அரசாங்கம் கோரிய யுத்தக் கடன்களுக்கு ஆதரவாகப் பாராளுமன்றத்தில் வாக்களித்தது. யுத்தம் 20ஆம் நூற்றாண்டின் ‘பாரிய அழிவாக’ தீவிரமடைந்தது. SPD சுதந்திர தொழிற்சங்கங்களுடன் கூட்டிணைவாக தமது அரசியல் மற்றும் சமூகக் குறிக்கோள்களை அமுல்நடத்துவதற்கான துடிப்பான செயற்பாடுகளிலிருந்து விலகியிருந்தது. கட்சியினுள் விரைவிலேயே வளர்ச்சியடைந்த எதிர்ப்பு ‘கட்சிச் சமரசத்தை’ உடனடியாக முடிவுக்குக் கொண்டு வரவேண்டுமென்றும், பொதுவாக யுத்தம் முடிவுறுத்தப்பட வேண்டுமென்றும் கோரியது. 1917 ஏப்ரல் மாதத்தில் ஜெர்மனியின் சுதந்திர சமூக ஜனநாயகக் கட்சி உதயமாகியது (VSPD). விரைவிலேயே இதில் ரோஸா லக்ஸெம்பேர்க் மற்றும் கார்ல் லியெப்நெக்டைச் சுற்றியிருந்த ஸ்பாட்டக்கஸ் குழு இணைந்து கொண்டது. இதனால் ஜெர்மன் சமூக ஜனநாயகக் கட்சியின் பிளவு உறுதியாகியது.



4. 1917 முடிவில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடும் பெண்கள்



6. ரோஸா லக்ஸெம்பேர்க் 1912



7. யுத்த எதிர்ப்புப் பேரணியொன்றில் கார்ல் லியெப்நெக்ட் (1871-1919)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

20ஆம் நூற்றாண்டின் 'பாரிய அழிவாக' மாறிய முதலாவது உலக மகாயுத்தம் வெடித்ததும், SPD ஒரு முடிவை மேற்கொள்வதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டது. தன் மீது திணிக்கப்பட்ட தற்காப்பு யுத்தமொன்றில் ஜெர்மன் அரசு ஈடுபட்டுள்ளதென்று நம்பியதால் பாராளுமன்றத்திலிருந்த (1) சமூக ஜனநாயகப் பாராளுமன்றக் கட்சி ஏகாதிபத்திய அரசாங்கம் கோரிய யுத்தக் கடன்களுக்கு ஆதரவாக 1914 ஆகஸ்டில் (2) வாக்களித்தது. தொழிற்சங்கங்களுடன் கூட்டிணைவாக அவர்கள் தமது அரசியல் மற்றும் சமூகக் குறிக்கோள்களை அமுல்படுத்துவதற்கான தமது துடிப்பான செயற்பாடுகள் அனைத்தையும் கைவிட்டனர். மேலும், அவர்கள் யுத்தம் விரைவில் முடிந்துவிடுமென்றும் (3), அத்தோடு நெருக்கமான விடயமாக, அரசியல் சீர்திருத்தங்களையும் நம்பிக்கையோடு எதிர்பார்த்தனர்.

இதைத் தொடர்ந்த மாதங்களில் பாராளுமன்றக் கட்சியுள்ளிருந்த ஒரு சிறுபான்மையினரும், கட்சிக்குள்ளிலிருந்த சிறுபான்மையினரும் 'இக்கட்சிச் சமரசம்' என்பதற்கெதிராக வெளிப்படையாகவே கருத்துத் தெரிவித்தனர். தற்காலிகமான உடன்படிக்கையையும், உடனடியான சமாதான உடன்படிக்கையையும் இடைநிறுத்துவதுவதே அவர்களது சுருக்கமான குறிக்கோள்களாகும். (4) இறுதியில் 1917 ஏப்ரலில் (VSPD) ஜெர்மன் சுதந்திர சமூக ஜனநாயகக் கட்சி (5) நிறுவப்பட்டது. விரைவில் ரோஸா லக்ஸம்போக் (6) மற்றும் கார்ல் லியெப்பெநங்ட் (7) என்போரைச் சுற்றியிருந்த ஸ்பார்ட்டக்கஸ் குழு இணைந்துகொண்டது. இத்துடன் ஜெர்மன் சமூக ஜனநாயகக் கட்சியின் பிளவு உறுதியாகியது. யுத்தம் இறுதிக் கட்டத்தை நெருங்குகையில் உண்ணாவிரத எதிர்ப்புகள், கலகங்கள் மற்றும் வேலை நிறுத்தங்கள் உள்ளிட்டவகையில் பல ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்றன. பிரதானமாக SPDயின் 'கட்சிச் சமரசக்' கொள்கையை விமர்சிப்பதன் மூலமே VSPD தனது ஆதரவாளர்களை அணி திரட்டியது.




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 12 புரட்சியும், குடியரசின் தாபிதமும்

## தொழிலாளர் இயக்கத்தில் பிளவு தீவிரமடைதல் (1918/19)





1. தபால் அட்டை: மக்கள் பிரதிநிதிகளின் முதல் அங்கத்தவர்களுடன் ஜெர்மன் குடியரசின் பிரகடனம், SPDVஐச் சேர்ந்த பிரெட்ரிக் ஈபேர்ட் (1871-1925) பிலிப்ஸ்கீடெமன் (1865-1939) மற்றும் VSPDஐச் சேர்ந்த எமில் பார்த் (1879- 1941), வில்ஹெம் டிஹ்மான் (1874-1954) மற்றும் ஹியுகோ ஹேஸ் (1863-1919)



3. புரட்சியின் சாதனைகளைக் காட்டும் SPD சுவரொட்டி

ஜெர்மன் நவம்பர் புரட்சியின் போது இரண்டு சமூக ஜனநாயகக் கட்சிகளும் சேர்ந்து 1918 நவம்பர் 10ஆந் திகதி புரட்சிகர, இடைமாற்றங்களை அரசாங்கமாகிய மக்கள் பிரதிநிதிகள் மன்றத்தை உருவாக்கின (Rat der Volksbeauftragten). ஜெர்மனியின் புதிய பாராளுமன்ற முறைமையில் குடியரசு தாபிதம், ஆண்களுக்கும், பெண்களுக்கும் வாக்களிக்கும் சமவுரிமை, எட்டு மணித்தியால வேலை நாள் போன்ற SPDயின் அத்தியாவசிய நிகழ்ச்சித்திட்டக் கோரிக்கைகள் யதார்த்தமாகின. கட்சியினுள் பொருத்தமான ஆளணியினர் இல்லாத காரணத்தால், யுத்தத்தின் பின்னர் எழும் பிரச்சினைகளாகக் கையாள்வதற்காக சமூக ஜனநாயகவாதிகள் 'பழைய' கருமப்பாட்டுச் சலுகைபெற்ற வர்க்கத்தினருடன் ஒத்துழைப்பை நாடினர். VSPD இதற்கு எதிர்மறையாக, 'மத்தியதரவர்க்க பாராளுமன்றத்துக்குப் பதிலாக, 'சோவியத்' முறைமையொன்றின் நடைமுறையாக்கத்தைக் கோரியது. VSPD பிரதிநிதிகள் அரசாங்கத்திலிருந்து ராஜினாமாச் செய்தனர். சமீபத்தில் உருவாக்கப்பட்ட பொதுவுடைமை சர்வதேசியத்துக்கான, இசைவங்கீகாரம் சம்பந்தமான பிணக்கில் VSPD அங்கத்தவர்கள் ஜனநாயகக் குடியரசுக்கு எதிராகப் போராடிய ஜெர்மன் பொதுவுடைமைக் கட்சியில் (KPD) இணைவதற்குத் தீர்மானித்தனர்.




4. 1919 பெப்ருவரி 11ஆந் திகதி வெய்மாரில் பிரெட்ரிக் ஈபேர்ட் ஜெர்மன் குடியரசின் ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்டார்.




2. மக்கள் பிரதிநிதிகள் மன்றத்திலிருந்து USPD விலகியமை சம்பந்தமாக ஜெர்மன் அரசாங்கத்தின் பிரகடனம்



5. 1919 KPDயின் 'ஜனவரி எழுச்சி'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜெர்மனியின் நவம்பர் புரட்சி மற்றும் குடியரசு பிரகடனத்தின் பின்னர் இரண்டு சமூக ஜனநாயகக் கட்சிகளும் ஒரு புரட்சிகர இடைமாற்றக் கால அரசாங்கமொன்றை நிறுவின (மக்கள் பிரதிநிதிகளின் மன்றம்). இது 1918 நவம்பர் 10ஆந் திகதி பிரெட்ரிக் ஈபேர்ட்டின் தலைமையில் நிறுவப்பட்டது. (1) 1918 இறுதியில் USPD அங்கத்தவர்கள் (2) மன்றத்திலிருந்து ராஜினாமாச் செய்தனர். சுதந்திர சமூக ஜனநாயகக் கட்சி அடிப்படை எதிர்க்கட்சியாகச் செயலாற்றுவதற்காக மன்றத்திலிருந்து விலகியது.

USPD அதன் நிகழ்ச்சித் திட்டத்தைப் பொறுத்தவரையில் 1919இல் தெளிவான தீவிரவாதப் போக்கைக் காண்பித்தது. அது நடுத்தரவர்க்கப் பாராளுமன்றத்தை ஒழிப்பதிலும், சோவியத் முறைமையொன்றை அறிமுகம் செய்வதிலும் கவனம் செலுத்தியது.

அங்கத்தவர் தொகை அதிகரித்த போதிலும், தேர்தல் வெற்றிகள் பல ஈட்டப்பட்ட போதிலும் USPD 1920 அக்டோபரில் பெரும்வீழ்ச்சி கண்டது. சமீபத்தில் நிறுவப்பட்ட பொதுவுடைமை சர்வதேசத்துக்கு இசைவு அங்கீகாரம் வழங்குவது குறித்த பிணக்கில் பெரும்பான்மையான அங்கத்தவர்கள் 1918 இறுதியில் தாபிக்கப்பட்ட ஜெர்மன் பொதுவுடைமைக் கட்சியில் இணைவதற்கு ஆதரவளிக்கத் தீர்மானித்தனர்.

புரட்சியின் போதும், அதற்குப் பின்னரும் சமூக ஜனநாயகக் கட்சி பாரிய பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்தது, இவை போர்வீரரின் ஒழுங்கான முறையில் சிவிலியன் வாழ்க்கையில் மீளொருங்கிணைக்கப்படுதல், உணவு வழங்கலை உறுதிப்படுத்துதல் மற்றும் ஜெர்மனியை ஐக்கியமாக வைத்திருத்தல் என்பவையாகும்.

SPD அரசியல் மற்றும் சமூகப் புரட்சியின் பரிணமிக்கும் பணிகளுக்குத் தத்துவாரீதியிலும், நடைமுறைரீதியிலும் அறவே தயாராகவிருக்கவில்லை. கட்சியினுள் தகுதியான ஆளணியினர் இல்லாமை காரணமாக, SPD புரட்சிக்கு முன்னர் பொதுநிர்வாகத்திலும், நீதித்துறையிலும், இராணுவத்திலுமிருந்த கருமப்பாட்டுச் சலுகைபெற்ற வர்க்கத்தின் மீது தங்கியிருக்கும் நிலை ஏற்பட்டது.

மறுபுறத்தில் SPD அடிப்படையான நிகழ்ச்சித்திட்டக் கோரிக்கைகளை நிறைவேற்றியது. ஒரு பாராளுமன்றக் குடியரசு, ஆண்களுக்கும், பெண்களுக்கும் சமத்துவமான வாக்குரிமை, எட்டு மணித்தியால வேலைநாள் மற்றும் தொழிற்சங்கங்களுக்கான சட்டபூர்வ அங்கீகாரம் என்பவை உதாரணங்களாகும். (3) SPD பாராளுமன்ற ஜனநாயகத்தை நோக்கிச் செயற்பட்டதால், இந்த அர்த்தத்தில் மிகவும் முன்னேற்றகரமான நிலைப்பாட்டைக் கொண்டிருந்தது. சமூக ஜனநாயகவாதிகள் ரஷ்ய மாதிரியுடன் இணக்கமான சோவியத் குடியரசு என்னும் கருத்தைத் தீவிரமாக நிராகரித்தனர். வெயிமாரில் கூடிய தேசியப் பேரவைப் பாராளுமன்ற ஜனநாயக அரசியலமைப்பொன்றை ஏற்றுக்கொண்டு, SPD ஆசனத்தவிசாளர் பிரெட்ரிக் ஈபேர்ட்டை ஜெர்மன் குடியரசின் ஜனாதிபதியாகத் தெரிவு செய்தது (4).


புரட்சி இறுதியில் தொழிலாளர் இயக்கத்தில் பிளவை ஆழமாக்கியது. SPD, USPD (கலைக்கப்படும் வரை) மற்றும் KPD என்பவை ஒன்றோடொன்று மோதிக் கொண்டமையால், பரஸ்பரம் தமது அரசியல் சாத்தியவளங்களை வரையறுத்துக் கொண்டன. SPD மாத்திரமே வெயிமார் குடியரசுக்கு ஆதரவளித்ததால் அது KPDயின் இலக்குக்கு உள்ளாகியது (5).

REVOLUTION

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 13 ஒரு மக்கள் கட்சியை நோக்கிய பயணத்தில்

## 1921 SPDயின் கொர்லிட்ஸ் நிகழ்ச்சித்திட்டம்






2. எடுவார்ட் பேர்ன்ஸ்டீன் மாநாட்டில் நிகழ்ச்சித்திட்ட ஆணைக்குழு

1. 'Wahrer Jacob' மாதமிரு முறை வெளிவரும் சமூக ஜனநாயகப் பத்திரிகை. முதல் பக்கம், கொர்லிட்ஸ் கட்சி மாநாட்டின் போது






4. கொர்லிட்ஸ் கட்சி மாநாட்டுக் கட்டிடமும், முழுநிறை அமர்வும்

1921இல் கொர்லிட்ஸ் கட்சி மாநாட்டில் SPD முதிர்ச்சிபெறாத குடியரசில் கட்சிக் கொள்கையை வழிநடத்துவதற்கான ஒரு புதிய நிகழ்ச்சித் திட்டத்தை ஏற்றுக்கொண்டது. எடுவார்ட் பேர்ள்ஸ்டீனால் எழுதப்பட்ட பிரதான பகுதிகளில் அரங்கு SPD 'ஜனநாயகத்துக்கும் சோஷலிஸத்துக்குமான இணைந்த போராட்டத்தில்'' உடலுழைப்பாளர்களையும், புத்திஜீவிகளையும்' ஐக்கியப்படுத்தும் ஒரு மக்கள் கட்சியாக இனங்காட்டப்பட்டிருந்தது. தொழிலாளர் வர்க்கத்தின் விடுதலைக்கான வர்க்கப் போராட்டம் 'ஒரு வரலாற்றுத் தேவை' மாத்திரமன்றி, அதேவேளையில் ஒரு 'தார்மீகக் கோரிக்கையுமாகும்'. SPD ஜனநாயகக் குடியரசு மீண்டும் மாற்றியமைக்கப்பட முடியாத வகையில் வரலாற்று அபிவிருத்தியால் நிறுவப்பட்ட அரசு வடிவமென்றும், அதன் மீது தொடுக்கப்படும் எந்தத் தாக்குதலும் மக்களின் வாழ்வாதாரமான உரிமைகளுக்கு எதிரான ஒரு முயற்சியென்றும் கருதியது.



3. கொர்லிட்ஸ் கட்சி மாநாட்டின் நிகழ்ச்சித்திட்ட ஆணைக்குழு




5. கொர்லிட்ஸ் நிகழ்ச்சித்திட்டம் முன் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1920இல் SPD முதிர்ச்சிபெறாத குடியரசில் கட்சிக் கொள்கையை வழிநடத்துவதற்கான ஒரு புதிய நிகழ்ச்சித்திட்டத்தை வரையத் தீர்மானித்தது. எவ்வாறாயினும், அடொல்ப் புரோன் தலைமையில் தயாரிக்கப்பட்ட முதலாவது வரைபு தீவிர விமர்சனத்துக்கு உள்ளாகியது. 1921 கொர்லிட்ஸ் கட்சி மாநாட்டில் (1) அங்கீகாரத்துக்காகச் சமர்ப்பிக்கப்பட்ட திருத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டத்தின் கணிசமான பகுதிகள் எடுவர்ட் பேர்ன்ஸ்டீனஸ்ஸால் எழுதப்பட்டவையாகும் (2, 3). இதன் உள்ளடக்கம் ஏர்பேர்ட் அரங்கிலிருந்து கணிசமான அளவுக்கு வேறுபட்டிருந்தது.

கொர்லிட்ஸ் கட்சி மாநாட்டில் (4) SPD தன்னை 'ஜனநாயகத்துக்கும், சோஷலிஸத்துக்குமான இணைந்த போராட்டத்துக்காக' 'உடலுழைப்பாளர்கள் மற்றும் புத்திஜீவிகளை' ஐக்கியப்படுத்தும் ஒரு மக்கள் கட்சியாகத் தன்னை இனங்காட்டியது. 'தொழிலாளர் வர்க்கத்தின் விடுதலைக்கான வர்க்கப் போராட்டம் ஒரு 'வரலாற்றுத் தேவை' மாத்திரமன்றி, அதேவேளையில் ஒரு 'தார்மீகக் கோரிக்கையுமாகும்'

இந்த அரங்கு போருக்குப் பிந்திய சமூகத்தின் குறித்துரைப்பான வாழ்க்கை நிலைமைகளையும் பிரதிபலிக்கின்றது. அந்த வகையில் SPD மீண்டும் மாற்றியமைக்க முடியாதவகையில் வரலாற்று அபிவிருத்தியால் நிறுவப்பட்ட அரசு வடிவமொன்றும் அதன் மீது தொகுக்கப்படும் எந்தத் தாக்குதலும் மக்களின் வாழ்வாதாரமான உரிமைகளுக்கு எதிராக ஒரு முயற்சியொன்றும் கருதியது. (5)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

#  சோஷலிஸத்தையும், சுதந்திரத்தையும் நோக்கி - ஐரோப்பியக் கண்ணோட்டம்

## ஹெயிடல்பேர்க் நிகழ்ச்சித்திட்டம்-1925



1. 1922இல் SPD மற்றும் VSPD இணைவின் போதான பேரணியும், நினைவு முத்திரையும்






2. கார்ல் கோட்ஸ்கி



3. ருடொல்பேர்க் ஹில்ர்டிங்



4. ஹெயிடல்பேர்க் கட்சி மாநாட்டின் ஆவணங்களின் முன் பக்கம்

1922இல் நியூரெம்பேர்க்கில் இடம்பெற்ற கட்சி மாநாட்டில் USPDயின் எஞ்சிய பகுதியும், SPDயும் ஒன்றிணைந்த பின்னர் கார்ல் கோட்ஸ்கியும், ருடொல்ப்ப ஹில்பர்டிங்கும் ஒரு புதிய கட்சி அரங்கத் திட்டத்தை வரைந்தனர். ஏர்பேர்ட் நிகழ்ச்சித் திட்டத்தில் மார்க்ஸிஸத் திசைமார்க்கம் கொண்ட சில அம்சங்கள் உள்ளடக்கப்பட்ட போதிலும், தொழிலாளர் வர்க்கத்தின் விடுதலைக்கான போராட்டத்துக்கான மிகச் சாதகமான அடிப்படையும், ஆகவே சோஷலிஸத்தை யதார்த்தமாக்கி, நடைமுறைப்படுத்தக்கூடிய அடிப்படையாகவும் விளங்கும். ஜனநாயகக் குடியரசுக்கான அர்ப்பணவுணர்வின் மீதே பிரதான கவனம் செறிந்திருந்தது. மேலும், முதலாவது ஜெர்மன் கட்சியென்ற வகையில் SPD ஐரோப்பிய ஐக்கிய ராச்சியங்களின் உருவாக்கத்துக்காகப் பிரசாரம் செய்தது. இதன் விளைவாக, SPDயின் உள்ளிருந்த நிகழ்ச்சித்திட்டம்சார் கருத்து வேறுபாடுகள் விரைவில் வெளிவரத் தொடங்கின. ஹெயிடல்பேர்க் நிகழ்ச்சித் திட்டம் வெயிமார் குடியரசில் SPDயின் நடுநாயகமான இருதலைக்கொள்ளி நிலை ஒன்றைப் பிரதிபலிக்கின்றது. ஒரு புறத்தில் அது அரசியலமைப்பு அடிப்படையிலான குடியரசுக் கட்சியாகவும், மறுபுறத்தில் தொடர்ந்தும் ஒரு தொழிலாளர் வர்க்கக் கட்சியாகவும் இருக்க வேண்டியிருந்தது. அதாவது ஆளுங்கட்சியாகவும், எதிர்க்கட்சியாகவும் இருக்க விரும்பும் அவாவாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

SPDக்கும், USPDஇன் எஞ்சிய பகுதிக்கும் இடையிலான நல்லிணக்க நிலையொன்றை 1920களின் ஆரம்பப்பகுதி கண்டது. இது இறுதியாக 1922இல் நியூரெம் பேர்க் கட்சி சமவாயத்தின் ஒன்றிணைப்புக்கு இட்டுச்சென்றது. (1) கட்சி சமவாயத்தின் விஞ்ஞாபனத்தில், 'ஜெர்மன் குடியரசின் பாதுகாப்புக்கும், ஒன்றிணைப்புக்கும்' ஒன்றிணைந்த சமூக ஜனநாயகக் கட்சி அழைப்புவிடுத்திருந்தது. மேலும், புதியதொரு திட்டத்தை நிறைவேற்றுவதென அது தீர்மானித்தது. இப்பணிக்கு கார்ல் கோட்ஸ்கி (2) மற்றும் ரூடொல்ப் ஹிர்பர்டிங் (3) ஆகியோர் முழுமையான பொறுப்பைக் கொண்டிருந்தனர்.

உள்ளடக்கங்களைப் பொறுத்தளவில், USPDஇலிருந்து மரபுரிமையொன்றாகவும், கம்யூனிஸ்ட் போட்டிக்கான பிரதிபலனாகவும் இன்றி எர்புட் திட்டத்தில் குறித்துரைக்கப்பட்ட வர்க்கப் போராட்டம் மீதான நிலைகளுக்கு அதிகளவு உறுத்திச் சொல்கின்ற மேற்கோளை வரைவு செய்திருந்தது. எனினும், 1925இன் ஹெயிடல்பேர்க் திட்டமானது (4) சுதந்திரத்திற்கும், ஜனநாயகத்திற்குமான உறுதியான அர்ப்பணிப்பொன்றுடன் சமூக ஜனநாயகப் பாரம்பரியத்தின் பிரகாரம் விளங்கியது. திட்ட ஆணைக்குழுவின் சார்பில், சோஷலிஸத்திற்கும், சுதந்திரத்திற்கும் மற்றும் ஜனநாயகத்திற்கும் இடையிலான பிரிக்க முடியாத இணைப்பினை ஹில்பர்டிங் வலியுறுத்தினார். இது தொடர்பில் திட்டம் பின்வருமாறு குறிப்பிடுகின்றது: 'வேலைசெய்யும் வர்க்கத்தின் சுதந்திரப் போராட்டத்திற்கும், சோஷலிஸத்தை அடைவதற்கும், அதை அமுலாக்குவதற்கும் ஜனநாயகக் குடியரசே மிகவும் சாதகமான அடிப்படையாகும். இதனால் தான் குடியரசை சமூக ஜனநாயகக் கட்சி பாதுகாப்பளிப்பதுடன், அதற்கான மேலதிகமான முன்னேற்றத்தையும் பரிந்துரைக்கின்றது'.

மேலதிகமாக, சமாதானக் கொள்கையொன்றுக்கான கோட்பாடுகளையும், ஹெயிடில்பேர்க் திட்டம் முன்னேற்றியது: 'சர்வதேச மோதல்களின் அமைதியான தீர்வையும், கட்டாயமான இணக்க மன்றங்களின் முன்பாக அவற்றின் இணக்கத்தையும்' SPD 'கோரி நிற்கின்றது'. ஜேர்மனியில் முதலாவது கட்சியாக, அதன் ஹெயிடல்பேர்க் திட்டத்துடன் SPD 'சகல கண்டங்கள் மீது மக்களின் அக்கறைகளின் ஒருமைப்பாட்டினைச் சாதிப்பதற்காக ஐக்கிய ஐரோப்பிய நாடுகளை அமைப்பதற்காக பொருளாதாரக் காரணங்களுக்கான இன்றியமையாததாக விளங்குகின்ற ஐரோப்பிய பொருளாதார ஐக்கியத்திற்கு ஆதரவளிக்கின்றது'.


ஒருபுறத்தில் அரசியலமைப்பு மீதான அடிப்படையிலான குடியரசுக் கட்சியொன்றாகச் செயற்படுவதற்கும், மறுபுறத்தில் ஆட்சி செய்கின்ற கட்சியாகவும், எதிர்கட்சியாகவும் இருப்பதற்காக அதன் ஆசையுடன் தொழிலாளர்களுக்கான வர்க்கக் கட்சியாகத் தொடர்ந்திருப்பதற்கும் வெயிமர் குடியரசில் SPDஇன் மையமான சிக்கல் நிலையொன்றை ஹெயிடல்பேர்க் திட்டம் பிரதிபலிக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமீபத்திய அபிவிருத்திகள் மற்றும் நிகழ்ச்சித் திட்டரீதியாக விளைவுகள் சம்பந்தமான பகுப்பாய்வு

## 'ஒழுங்குபடுத்தப்பட்ட முதலாளித்துவமும்', 'பொருளாதார ஜனநாயகமும்'



1. கியெல் கட்சி மாநாட்டில் பேராளர்கள் ஏனையோருடன் ரூடொல்ப் ஹில்பர்டிங் (x) 1927



3. பிரிட்ஸ் நப்தாலி (1888-1961) 'பொருளாதார ஜனநாயக' இலட்சியத்தைச் சாராம்சப்படுத்தினார்.




2. 'சமூக ஜனநாயகத்தின் பணிகள்' முதல் பக்கம். 'சுதந்திரமான போட்டியிலிருந்து ஒழுங்கமைக்கப்பட்ட பொருளாதாரத்துக்கு' என்பது குறித்த பிரிவும் அடங்கியுள்ளது.




4. 1928இல் இடம்பெற்ற சுதந்திர தொழிற்சங்கங்களின் மாநாட்டுக்கான சுவரொட்டி

'அரசு ஏகபோக முதலாளித்துவம்' என்னும் பொதுவுடைமைத் தத்துவத்து க்கான அளவுமீறிய எதிர்ப்பார்ப்புகளைக் கொண்ட மாற்றீடு ரூடொல்ப் ஹில்பர்டிங் அபிவிருத்தி செய்த ஓர் 'ஒழுங்கமைக்கப் பட்ட முதலாளித்துவம்' என்னும் எண்ணக் கருவாகும். இந்த அணுகுமுறை 1927இல் இடம்பெற்ற கியெல் கட்சி மாநாட்டில் ஏற்றுக்கொள்ளப்பட்டது. இது கால வரை தொழிலதிபர்களால் செயற்படுத்தப்பட்டு, ஒழுங்கமைக்கப்பட்ட பொருளாதாரம் அரசினால் ஒழுங்கமைக்கப்படும் ஒரு திட்டமிட்ட பொருளாதாரமாக நிலை மாற்றம் செய்யப்படவிருந்தது. இந்த எண்ணக்கரு எதிர்கால அரசியல் மற்றும் பொருளாதாரக் கலந்துரையாடல்களுக்கு முக்கியமான விளைவுகளைக் கொண்டிருந்ததோடு, ஆரம்பகால, நடுநாயகமான தேசியமயமாக்கல் நோக்கம் திட்டமிடல், கட்டுப்பாடு மற்றும் பொருளாதார ஜனநாயகம் போன்ற வற்றுக்கான கோரிக்கைகள் காரணமாக முக்கியமிழந்தன. இது ஒரு சீர்திருத்தக் கொள்கைக்கு சட்டநிலைத்தகவு வழங்குவதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'அரசு ஏகபோக முதலாளித்துவம்' என்னும் பொதுவுடைமைத் தத்துவத்துக்கு மாற்றீடாக விளங்கும் 'ஒழுங்கமைக்கப்பட்ட முதலாளித்துவம்' என்னும் எண்ணக்கரு ரூடொல்ப் ஹில்பர்டிங்கினால் அபிவிருத்தி செய்யப்பட்டதாகும். இது முதலாளித்துவப் பொருளாதாரத்தின் அபிவிருத்தி தொழில் முயற்சியில் தீர்மானம் மேற்கொள்ளுதலில் திட்டமிடுதல் மற்றும் ஜனநாயகப்படுத்தல் போன்றவற்றை நோக்கிய செல்நெறிகளை உருவாக்கும். அத்தோடு அரசு நடவடிக்கை இதைப் பொறுப்பேற்று, முன்னேற்றுதல் வேண்டும் என்னும் எடுகோளை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது. 1927இல் கியெல் SPD கட்சி மாநாட்டில் 'குடியரசில் சமூக ஜனநாயகத்தின் பணிகள்' (1) என்னும் தலைப்பில் ரூடொல்ப் ஹில்பர்டிங் ஆற்றிய முக்கிய உரையின் பின்னர் இப்பகுப்பாய்வு பேராளர்களின் அங்கீகாரத்தைப் பெற்றதோடு (2) இது 'பொருளாதார ஜனநாயகம்' என்னும் நிகழ்ச்சித்திட்டத்துக்கு வழிசமைத்தது. இதில் சமூகமயப்படுத்துனர்களின் கோரிக்கையை விட, திட்டமிடல் மற்றும் ஜனநாயகக் கட்டுப்பாடு குறித்த நடவடிக்கைகள் மேலும் முக்கியமான பாத்திரத்தை வகித்தன. 1928இல் ஹாம்பேர்க்கில் இடம்பெற்ற சுதந்திர தொழிற்சங்கங்களின் மாநாட்டில் பொருளாதார ஜனநாயகத்துக்கான நிகழ்ச்சித் திட்டத்தின் ஒரு விபரமான அறிக்கையை பிரிட்ஸ் நப்தாலி (3) அறிவித்தார் (4). பொருளாதார ஜனநாயகத்துக்கான கோரிக்கை ஓர் இணைக்கும் அம்சமாகியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 16 பாரிய பொருளாதார வீழ்ச்சியின் போது - தேசிய சோஷலிஸத்திடம் தோல்வி

## அரசியல் மற்றும் நிகழ்ச்சித்திட்ட சிக்கல் நிலை, 1930-1933





1. 'எந்த வேலையையும் செய்யத்தயார்' - 1930களின் பாரிய பொருளாதார வீழ்ச்சியின் போது வேலையற்ற தொழிலாளி




2. 1930களின் ஆரம்பத்தில் வேலையின்மை சம்பந்தமான கேலிச்சித்திரம் 'வேலை குறித்து ஏன் இவ்வளவு அலட்டிக் கொள்ள வேண்டும்? நாம் வேலை எதுவுமின்றி நன்றாக வாழவில்லையா?'



4. சான்செலர் ஹெயின்ட்ரிச் புருனிங் (1885-1970) Zentrum (ஜெர்மன் மத்திய கட்சி).



3. ஹேர்மன் முல்லரின் (1876 - 1931) அமைச்சரவை SPD (x)






5. 1932 பாராளுமன்றத்தக்கான SPD சுவரொட்டி: எய்சேம் முன்னணியின் பேரணி (இரும்பு முன்னணி: மூன்று அம்புகள் இரும்பு முன்னணியின் சின்னமாகும்)

பாரிய பொருளாதார வீழ்ச்சியும், வேலையின்மையும், கூர்மையான அரசியல் தீவிரமயமாக்கலுடன் சேர்ந்து SPD யின் சாதுரியச் செயற்பாடுகளுக்கான சாத்திய வளத்தைக் குறைத்தன. வெயிமார் குடியரசின் இறுதிப் பாராளுமன்ற அரசாங்கமாகிய பாரிய கூட்டணி அரசாங்கத்தில் SPDயினால் மத்தியதர வர்க்கக் கூட்டணிப் பங்காளிக்கு எதிராக தனது சமூகக் கொள்கைகளை நடைமுறைப்படுத்த முடியவில்லை. 1930 மார்ச்சில் கூட்டணி கலைக்கப்பட்டதன் பின்னர் SPD ஹெயின்ரிச் புருனிங்கின் பணத்தளர்வுக் கொள்கைகளைச் 'சகித்துக் கொண்டது'. இது KPD மற்றும் NSDAP (நாஸிக்கட்சி) என்பவை பலம்பெறுவது போன்ற 'மேலும் மோசமான நிலைமை' ஏற்படுவதைத் தடுக்கும் நோக்கத்திலாகும். SPD இவ்வாறு புருனிங்கின் கூலிகள் குறைப்பு மற்றும் சமூக நலனோம்புகை வெட்டுக்கள் கொள்கைக்கான பொறுப்பில் ஒரு பகுதியை ஏற்றுக் கொண்டதால், இடதுசாரிகள் பிரிந்து செல்வதற்கும், ஜெர்மன் சோஷலிஸ தொழிலாளர் கட்சி (SAP), உதயமாவதற்கும் இது காரணமாகிறது. வேலை உருவாக்கத்துக்கும், பொருளாதாரத்தின் மீள் கட்டமைப்புக்குமான தொழிற்சங்கங்களின் நிகழ்ச்சித்திட்டங்கள் SPDயினால் முன்னெடுக்கப்படவில்லை. 1933இல் சுதந்திரச் தொழிற்சங்கங்களும் கட்சியும் தேசிய சோஷலிஸவாதிகளால் நசுக்கப்பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரிய பொருளாதார வீழ்ச்சியும் வேலையின்மையும், (1, 2) கூர்மையான அரசியல் தீவிரவாதமயமாக்கலுடன் இணைந்து SPDயின் சாதுரியச் செயற்பாடுகளுக்கான சாத்தியத்தைக் குறைத்தன. வெயிமார் குடியரசின் இறுதிப் பாராளுமன்ற அரசாங்கமாகிய சமூக ஜனநாயகவாதி ஹேர்மன் முல்லரின் (3) தலைமையிலான இறுதிக் கூட்டணி அமைச்சரவை 1930 மார்ச்சில் சரிந்து விழுந்தது. இது தொழிலாளர் ஆகுசெலவுகளைக் குறைப்பதற்கும், வேலையின்மைக் காப்புறுதி அனுகூலங்களைக் குறைக்கும் வகையில் அதற்கான பங்களிப்புத் தொகைகளைக் குறைப்பதற்கும் மத்தியதர வர்க்கக் கூட்டணிக் கட்சிகள் முன்வைத்த கோரிக்கைகளுக்கு தொழிற்சங்கங்களிடமிருந்தும், கட்சிக்குள்ளிருந்தும் எழுந்த எதிர்ப்பின் விளைவாகும்.

புரூனிங் அரசாங்கத்தைச் சகித்துக் கொள்ளும் கொள்கை கூட (4) தீவிரமானவாதப் பிரதிவாதங்களுக்கு இட்டுச் சென்றது. SPD இதைவிட மோசமான நிலைமையை அதாவது, பாராளுமன்றக் கலைப்பு, புதிய தேர்தல்கள் மற்றும் இறுதியில் தேசிய சோஷலிஸவாதிகள் மற்றும் பொதுவுடைமைவாதிகளைப் பலப்படுத்துதல் - தடுக்கும் எதிர்பார்ப்புகளைக் கொண்டிருந்தது. வேலை உருவாக்கம் மற்றும் பொருளாதாரத்தின் மீள்கட்டமைப்பு சம்பந்தமான தொழிற்சங்க நிகழ்ச்சித்திட்டங்களை SPD முன்னெடுக்கவில்லை. புரூனிங்கின் பணத்தளர்வுக் கொள்கைகளை ஏற்றுக் கொண்டதன் மூலம் கூலிக் குறைப்புகள் மற்றும் சமூக நலனோம்புகையில் குறைப்புகள் சம்பந்தமான அவரின் கொள்கைகளுக்கான பொறுப்பில் ஒரு பங்கையும் அது ஏற்கவேண்டியிருந்தது. 1931இல், இது ஏனையவற்றுடன் SPDயின் இடதுசாரிகளினால் ஒரு பகுதியினர் பிரிந்து செல்வதற்கும், ஜெர்மன் சோஷலிஸத் தொழிலாளர் கட்சியின் (SAP) தாபிப்பதற்கும் இட்டுச் சென்றது. SPD யின் பாராளுமன்ற நிலைப்பாட்டுக்கு எதிராக அவர்கள் முதலாளித்துவத்தைத் தோற்கடிப்பதற்காக வெகுஜனங்களை அணிதிரட்டும் நோக்கத்தை முன்வைத்தனர்.

அதேவேளையில், அரசியலமைப்பு அடிப்படையில் எஞ்சியிருந்த ஒரேயொரு குடியரசுக் கட்சியான சமூக ஜனநாயகக் கட்சி மேலும் மேலும் பலமாக வளர்ச்சியடைந்த தேசிய சோஷலிஸத்துக்கெதிரான போராட்டத்தில் அதிகமதிகமாகச் சிக்குண்டது (5) ஒரு பிரசார இயக்கத்தில் SPD தனது பலம் அனைத்தையும் பிரயோகித்து நாஸிகளுக்கெதிராகப் போராடிய போதிலும் ('ஹிட்லர் என்றால் யுத்தம்'), அதனால் நாஸி சர்வாதிகாரம் ஏற்படுவதைத் தடுக்க முடியவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 17 வெளிநாடுகளில் வாசமும், தேசிய சோஷலிஸமும்

## 'பிரேக் பிரகடனத்திலிருந்து' ஒரு ஜனநாயக, யுத்தத்துக்குப் பிந்திய அமைப்பை நோக்கி, 1933-1945





1. கெஸ்டாபோவினால் செயற்படுத்தப்பட்ட 'கொலம்பியா ஹவுஸ்' சிறைச்சாலையின் மேலறையில் அரசியல் கைதிகள், 1933 - ஓல்டென்பேர்க் முன்னாள் பிரதமர் பேர்னார்ட் குன்ட் (1876-1946). SA யினால் செம்னிட்ஸ் வீதிகளூடாக இழுத்துச் செல்லப்பட்டு ஏளனப்படுத்தப்படுகின்றார்.

தேசிய சோஷலிஸவாதிகள் அதிகாரத்தைக் கைப்பற்றியதும் உடனடியாக இடம்பெற்ற கொடூரமான அடக்குமுறையின் போது தொழிலாளர் இயக்கத்தைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான அங்கத்தவர்கள் வெளிநாடுகளுக்குத் தப்பியோட வேண்டி ஏற்பட்டது. வெளிநாட்டிலிருந்த SPD நிறைவேற்றுக் குழுவாகிய Sopade ஆரம்பத்தில் பிரேக்கிலிருந்து நாஸி ஆட்சிக்குழுவுக்கெதிரான சமூக ஜனநாயக எதிர்ப்பை ஒழுங்கமைப்புச் செய்தது. அதன் 'பிரேக் பிரகடனத்தில்' (1934 ஜனவரி) பிளவுபட்ட தொழிலாளர் இயக்கத்தின் செயல்தவிர்வுகள் மாறித் தவறுகளை ஒத்துக்கொண்டதோடு, வெளிப்படையாக ஒரு மார்க்ஸீஸ அடிப்படையில் தேசீய சோஷலிஸத்துக்கெதிரான புரட்சிகளும் போராட்டத்துக்குத் தன்னை அர்ப்பணித்தது. நாட்டைவிட்டு வெளியேறி மேற்குலக நாடுகளில் வசித்தோரின் ஜனநாயக கலாசாரம் குறித்த பொதுவான அனுபவமும், பொதுவுடைமைவாதிகளுடனான தொடர்ச்சியான முரண்பாடுகளும் நீண்ட கால நோக்கில் கட்சியின் செயற்பாடுகளை வடிவமைக்கவிருந்தன. வெளிநாடுகளில் வாழும்போது சமூக ஜனநாயகவாதிகளும், இடதுசாரிக் குழுக்களும் 'ஹிட்லருக்குப் பிந்திய காலத்துக்கான' திட்டங்களை வரைவதற்கு ஒன்றுகூடினர். அவர்கள் அனைவரும், ஐரோப்பிய அரசுகளின் சம்மேளமொன்றில் ஒரு ஜனநாயக ஜெர்மனியை உருவாக்கும் நோக்கத்தில் உடன்பாடு கண்டனர்.






3. வில்லிபிராண்டும் (1913-1992) 1943 ஸ்டொக்ஹோமில் 'ஜனநாயக சோஷலிஸவாதிகளின் சமாதான நோக்கங்கள்' என்னும் புரட்சியின் வரைபும்






2. பிரேக்கிலிருந்த SPD நிறைவேற்றுக் குழு. நடுவில் ஒட்டோ வெல்ஸ் (1873-1939), இடதுபக்கம் எரிச் ஓல்லேன் ஹோாவர், மற்றும் 1934 ஜனவரி 25 பிரேக் பிரகடனம்




4. 'ஹிட்லருக்குப் பிந்திய காலத்தை' வடிவமைப்பதற்கான தீர்மானகரமான விடயவாசகமாகிய 'ஜெர்மன் சோஷலிஸவாதிகளின் கொள்கை' சம்பந்தமான ஆவணத்தின் முதல் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1933 முன்னரைப் பகுதியில் அதிகாரத்தைக் கைப்பற்றிய பின்னர் தேசிய சோஷலிஸவாதிகள் உடனடியாகவே தொழிலாளர் அமைப்புகளை நசுக்கினர். பல சமூக ஜனநாயகவாதிகளும், தொழிற்சங்கவாதிகளும் கொடூரமான தொடர் தொல்லைகளை அனுபவித்தனர் (1). ஆயிரக்கணக்கான தொழிலாளர் இயக்க அங்கத்தினர்கள் கைது செய்யப்பட்டனர் அல்லது வெளிநாடுகளுக்குத் தப்பியோடினர். இக் கடுமையான அடக்குமுறைகள் மத்தியிலும் பலர் எதிர்த்துப் போராடுவதில் உறுதியாகவிருந்தனர்.

நாட்டுக்கு வெளியிலிருந்த SPD நிறைவேற்றுக் குழுவாகிய Sopade நாஸி ஆட்சிக் குழுவுக்கெதிரான அரசியல் கிளர்ச்சியையும், எதிர்ப்புப் போராட்டத்தையும் ஒழுங்குபடுத்தும் நோக்கில் ஆரம்பத்தில் பிரேக்கில் தாபிக்கப்பட்டது. 1934 ஜனவரியில் Sopade 'பிரேக் பிரகடனத்தை' ஏற்றுக்கொண்டது (2) இந்த நிகழ்ச்சித்திட்டத்தில் Sopade பிளவுண்ட் தொழிலாளர் இயக்கத்தின் செயல்தவிர்வுகளையும், தவறுகளையும் ஏற்றுக்கொண்டு, வெளிப்படையான ஒரு மார்க்ஸிய அடிப்படையில் தேசிய சோஷலிஸத்துக்கெதிரான புரட்சிகரப் போராட்டத்துக்குத் தன்னை அர்ப்பணித்தது.

ஆயினும் நாஸி ஆட்சிக்கு விரைவிலேயே பொருளாதார நெருக்கடிகள் மற்றும் வளர்ந்து வரும் எதிர்ப்புக் காரணமாக ஸ்திரநிலையை இழந்துவிடும் என்பவை போன்ற பிரகடனத்தின் முன்நிபந்தனைகள் யதார்த்தமாகாததால் அது விரைவில் தனது முக்கியத்துவத்தை இழந்தது.

ஐக்கிய ராச்சியத்திலும், ஸ்கான்டிநேவியாவிலும் ஜனநாயக மற்றும் பன்மைத்துவ கலாசாரத்தின் பொதுவான அனுபவம் (3) பிரிட்டனிலும், சுவீடனிலும் நாடு கடந்து வாழ்ந்து கொண்டிருந்த இதுவரை பிளவுற்றிருந்த சமூக ஜனநாயகவாதிகள் தமது தாராளவாத ஜனநாயக மரபுகளை நினைவுகூர வைத்தன. இவை மேலும் தீவிரமாக ஜனநாயக, சோஷலிஸ திசைமார்க்கங்களில் அபிவிருத்தி செய்யப்படவிருந்தன. அவர்கள் 1940களில் ஒன்றிணைந்ததோடு, 'ஹிட்லருக்குப் பின்னரான' காலத்துக்கான திட்டங்களையும் வகுத்தனர். அவர்களின் பொதுவான நோக்கம் ஹிட்டலர் சர்வாதிகாரத்தின் நசுக்குதல்களுக்கும் பின்னர் ஸ்டாலின் சோஷலிஸச் சீரழிவுக்கு மாற்றீடாக ஒரு சுதந்திரமான சோஷலிஸத் தொழிலாளர் இயக்கத்தை நிறுவுவதாகும். யுத்தத்துக்குப் பிந்திய திட்டமிடலில் நடுநாயகமாக விளங்கியது. பொதுவான வெளிநாட்டு, பாதுகாப்பு மற்றும் பொருளாதாரத்துடன் கூடிய ஓர் ஐரோப்பிய அரசுகளின் சம்மேளனத்தில் ஒரு ஜனநாயக ஜெர்மனியை உருவாக்குவதாகும். (4)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதந்திரம் மற்றும் சமூகநீதி நோக்கங்களுக்கான அர்ப்பணவுணர்வு

## முதலாவது கொள்கை வழிகாட்டல்களிலிருந்து SPDயின் டோர்ட்மன்ட்/பேர்லின் நடவடிக்கை நிகழ்ச்சித்திட்டம் வரை (1945-1952/54)



2. 1946இல் கட்சி நிறைவேற்றுக் குழுவின் அங்கத்தினர்கள் (இடமிருந்து வலமாக) கேர்ட் ஷுமாக்கர், எரிக் ஒல்லன் ஹோவர், அல்பிரட் நோ (1906 - 1983) மற்றும் பிரிட்ஸ் ஹெயின்




1. 1946 ஹாம் SPD பேரணியில் கேர்ட் ஷுமாக்கர் (1895 - 1952)

கேர்ட் ஷுமாக்கரினால் வரையப்பட்ட 'SPDயின் கட்சி வழிகாட்டல்கள்' யுத்தத்தின் பின்னரான கட்சிக்குப் புதிய திசைமார்க்கத்தை வழங்குபவையாக அமைந்தன. அவை 1946இல் ஹாம்பேர்க்கில் இடம்பெற்ற கட்சி மாநாட்டில் ஏற்றுக்கொள்ளப்பட்டன. ஷுமாக்கரின் கோட்பாடு 'ஜனநாயகம், அறிவாற்றல் சுதந்திரம் மற்றும் விமர்சிப்பதற்கான சுதந்திரம் என்பவை இல்லாமல் சோஷலிஸம் சாத்தியமில்லை' என்பதாகும். ஷுமாக்கர் முதலாளித்துவச் சமுதாயத்தின் பிரச்சினைகளைப் பகுப்பாய்வு செய்து கையாளுவதற்கு மார்க்ஸிஸம் ஒரு வழிமாத்திரமேயென்றும், ஏனையவை ஒழுக்க நெறியியல், தத்துவரான மற்றும் மத அடிப்படைகளாகுமென்றும் தெரிவித்தார். 1952இல் SPD டோர்ட்மஸ்ட் நடவடிக்கை, நிகழ்ச்சித் திட்டத்தை நிறைவேற்றி, அங்கீகரித்தது. இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் நடுநாயகமான அம்சங்கள் பின்வருமாறு: சுதந்திரத்தில் ஜெர்மன் ஐக்கியத்துக்காகப் பாடுபடுதல், வாழ்வின் சகல துறைகளிலும் பெண்களுக்குச் சமத்துவம், தொழிலாளர்களின் இணைந்த தீர்மானம் மேற்கொள்ளும் உரிமைகளை நடைமுறைப் படுத்துவதனூடாகப் பொருளாதாரத்தை ஜனநாயகப் படுத்தல். திருந்திய வடிவமாகிய 1954 பேர்லின் நடவடிக்கை நிகழ்ச்சித்திட்டம் SPD ஒரு தொழிலாளர் வர்க்கக்கட்சியென்ற நிலையிலிருந்து 'ஒரு மக்கள் கட்சியாக' அபிவிருத்தியடைந்துவிட்டது என்பதை வலியுறுத்தியது.



3. 1948இல் SPD பேர்லின் மாநாட்டில் வில்லி பிராண்ட்




5. 1952 டோர்ட்மான்ட் கட்சி மாநாட்டில் SPD நிறைவேற்றுக் குழு மற்றும் நடவடிக்கை நிகழ்ச்சித்திட்டத்தின் முன்பக்கம்




4. 1951இல் பிராங்பேர்ட் ஆம்மெயினில் இடம்பெற்ற சர்வதேச சோஷலிஸ மாநாட்டில் சோஷலிஸ சர்வதேசியம் தாபிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யுத்தம் முடிவதற்கு முன்னரே ஏற்கனவே விடுதலை செய்யப்பட்ட ஜெர்மன் பிரதேசங்களில் SPDயை மீண்டும் தாபிப்பதற்கான ஒரு சில கூட்டங்கள் இடம்பெற்றன. கேர்ட் ஷூமாக்கர் (1,2) போருக்குப் பிந்திய சமூக ஜனநாயகத்தின் முன்னணிப் பிரமுகராக விளங்கினார். நாஸி சர்வாதிகார காலத்தின் போது ஒரு தசாப்தகாலத்துக்கு மேலாக ஜனநெரிசல் முகாம்களில் தடுத்துவைக்கப்பட்டிருந்தார். வெறுமனே மீள்நிர்மாணம் மாத்திரமன்றி, ஒரு புதிய SPDயையும், ஒரு புதிய ஜெர்மனியையும் உருவாக்குவது அவரின் நோக்கமாகவிருந்தது. அதாவது, முழு ஜெர்மனியையும் அவர் புதிதாக நிர்மாணம் செய்ய விரும்பினார். அவரின் கட்சியின் நிலைப்பாடு சம்பந்தமான ஒரு முதலாவது நிகழ்ச்சித் திட்ட வரைவிலக்கணமாகிய 'SPDயின் அரசியல் வழிகாட்டல்கள்' SPDயின் போருக்குப் பிந்திய, 1948இல் ஹாம்பேர்க்கில் இடம்பெற்ற முதலாவது கட்சி மாநாட்டில் ஏற்றுக்கொள்ளப்பட்டது. ஷூமாக்கரின் கோட்பாடு 'ஜனநாயகமோ அறிவாற்றல் சுதந்திரமோ, விமர்சனம் செய்யும் சுதந்திரமோ இல்லாமல் சோஷலிஸம் சாத்தியமில்லை' என்பதாகும். ஷூமாக்கர் முதலாளித்துவ சமுதாயத்தின் பிரச்சினைகளை இனங்கண்டு, கையாளுவதற்கு மார்க்ஸிஸம் ஒரு வழி மாத்திரமேயாகுமென்றும், ஏனையவை ஒழுக்க நெறியியல், தத்துவஞான மற்றும் மத அடிப்படைகளாகுமென்றும் தெரிவித்தார். அவர் மத்தியதர வர்க்கத்தையும் இணைத்துக் கொள்வதைக் கோரியபோதிலும், அடிப்படையில் தொழிலாளர் வர்க்கக் கட்சியொன்றே அவசியமென்று தெரிவித்தார்.

ஷூமாக்கரின் விருப்பத்துக்கெதிராக நிகழ்ச்சித்திட்டம் குறித்த கலந்துரையாடலொன்று மீண்டும் ஆரம்பமாகியது. 1949இல் வில்லி பிரான்ட் (3) பின்வருமாறு தெரிவித்தார்: 'ஜனநாயக சோஷலிஸம் ஒன்று சமூக உறவுகளை மீளொழுங்குபடுத்தவதற்கான ஒரு தொகுதி கருத்துகளாகும். ஆயினும், அது தன்னுள் அடங்கியுள்ள ஒரு முறைமை அல்ல. எவ்வாறாயினும், எதிர்காலத்தில் மேலும் அபிவிருத்தியுறக்கூடிய இந்த அடிப்படையான நம்பிக்கைகள் ஒரு பொதுவான தத்துவ ஞானத்தில் தங்கிநிற்பவையாகும். அவை சுதந்திரம், மனிதாபிமானம், சட்டத்தினாட்சி மற்றும் சமூக நீதிக்கான அர்ப்பணவுணர்வில் தங்கிநிற்பவையாகும்.

1951இல் பிரகடனம் செய்யப்பட்ட சோஷலிஸ சர்வதேசியத்தின் கோட்பாடுகளால் (4) உணர்வுபெற்ற SPD நடவடிக்கை நிகழ்ச்சித்திட்டமொன்றை வகுத்தது. இது 1952இல் டோர்ட்மன்டில் இடம்பெற்ற கட்சி மாநாட்டில் ஏற்றுக்கொள்ளப்பட்டது. இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் நடுநாயகமான அம்சங்கள் சுதந்திரமான ஜெர்மனியின் ஐக்கியம், வாழ்வின் சகல துறைகளிலும் பெண்களுக்குச் சமத்துவம் மற்றும் தொழிலாளர்களின் இணைந்த தீர்மானம் மேற்சொல்லும் உரிமைகளின் நடைமுறையாக்கத்தினூடாக பொருளாதாரத்தின் ஜனநாயகமயப்படுத்தல் என்பவையாகும்.


சூழ்நிலையின் அடிப்படையான புத்திஜீவிப்பகுப்பாய்வு இல்லாமையாலும், போதாத வழுவற்ற தன்மைகாரணமாகவும் நிகழ்ச்சித் திட்டத்தின் புதிய வடிவமொன்று வில்லி எயிசல்லின் மேற்பார்வையின் கீழ் வகுத்தமைக்கப்பட்டு 1954 பேர்லின் கட்சி மாநாட்டில் ஏற்றுக்கொள்ளப்பட்டது (5) அது 'சமூக நீதி, சுதந்திரம் மற்றும் உலக சமாதானம்' என்பவற்றுக்கான சமூகமொன்றைக் குறிக்கோளாகக் கொண்டதாகும். அத்தோடு, அது SPD ஒரு தொழிலாளர்வர்க்கக் கட்சியென்பதிலிருந்து 'ஒரு மக்கள் கட்சியாக' அபிவிருத்தியடைந்துள்ளது. ஓர் எதிர்காலத் திசைமார்க்கம் கொண்ட கூற்றையும் உள்ளடக்கியிருந்தது.

PEOPLE'S PARTY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடுதலையிலிருந்து புதிய அடிமைத்தனத்துக்கு

## பலவந்த ஒன்றிணைப்பும், ஒரு 'புதிய வகையிலான கட்சியும், 1945-1953







2. 1946 ஏப்ரல் 22ஆந் திகதி பேர்லின் அட்மிரல் பலாஸ்டில் இடம்பெற்ற இணைந்த கட்சி மாநாட்டில் வில்ஹெம் பியெக் (1894-1960), ஓட்டோ குரொட்வொல் (1894-1964) மற்றும் வோல்டர் உல்பிரிகிட் (1893-1973)

1. மேற்கு பேர்லினில் ஒன்றிணைப்பதற்கு எதிரான வாக்களிப்பும், 1946இல் Prenzlauer Berg SPD மாவட்டக் குழுவின் ஒன்றிணைப்புக்கெதிரான தீர்மானமும்



SPD மற்றும் KPGயின் பலவந்த ஒன்றிணைப்பையும், 1946 ஏப்ரலில் ஜெர்மன் சோஷலிஸ ஐக்கிய கட்சியின் (SED) உருவாக்கத்தையும் தொடர்ந்து (கிழக்கு பேர்லின் தவிர) சோவியத் இடங்கொண்ட வலயத்தில் SPD கலைக்கப்பட்டது. பின்னர் SED ஒரு மாக்ஸிஸ லெனினியக் கட்சியாக, 'ஒரு புதிய வகையிலான கட்சியாக' அபிவிருத்தியுற்றது. ஒரு சர்வாதிகாரம் நிறுவப்பட்டது. 1953 ஜுன் 17ஆந் திகதி ஜெர்மன் ஜனநாயகக் குடியரசில் (GDR) இடம்பெற்ற எழுச்சிக்கெதிரான வன்செயல் அடக்குமுறை தெளிவாகக் காண்பிப்பது போன்று செம்படையின் இராணுவப் பிரசன்னமே இச் சர்வாதிகாரத்தைத் தூக்கி நிறுத்தியது.



3. பல அரசியல் எதிரிகள் அடைக்கப்பட்டு, சித்திரவதை செய்யப்பட்ட போட்ஸென் சிறை



4. ஜெர்மன் ஜனநாயகக் குடியரசில் 1953 ஜுன் 17ந் திகதி இடம்பெற்ற எழுச்சி- பேர்லின் மற்றும் ஹேல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1945 ஜூனில் சோவியத் இராணுவ நிர்வாகம் தான் இடங்கொண்டவலயத்தில் பாஸிஸ எதிர்ப்புக் கட்சிகள் உருவாகுவதை அனுமதித்தது. அதன் பின்னர் ஜெர்மன் பொதுவுடைமைக் கட்சி (KPD) மீண்டும் தாபிக்கப்பட்டது. சமூக ஜனநாயகக் கட்சி தன்னை மத்திய குழுவுடன் சோவியத் இடங்கொண்ட வலயத்தில் (SOZ) நிறுவிக் கொண்டது. ஷுமாக்கரின் தலைமையிலான மேற்கு ஆக்கிரமிப்பு வலயங்களிலிருந்த SPD பொதுவுடைமைவாதிகளுடன் எவ்விதமான ஒத்துழைப்பையோ, இணைப்பையோ நிராகரித்தது. ஒட்டோ குரொத்வொல் தலைமையிலிருந்த மத்திய குழு SOZஇலும், பேர்லினிலும் இருந்த 619,000 அங்கத்தினர்களோடு SPD வலுவான நிலையிலிருந்து செயற்படும் என்ற நம்பிக்கையில் KPDயுடன் நெருக்கமாக ஒத்துழைக்கத் தயாராகவிருந்தது. எவ்வாறாயினும், 1945 செப்ரெம்பர் முதல் KPD ஓர் இணைப்பு' இயக்கத்தை ஆரம்பித்தது. SOZஇலிருந்த SPD உப-குழுக்களின் ‘இணைப்புத் தீர்மானங்கள்’ ஏமாற்றுவழிகள் மூலம் அல்லது சோவியத் ஆக்கிரமிப்புப் படைகளின் பாரிய அழுத்தத்தின் கீழ் அடிக்கடி நிறைவேற்றப்பட்டன. இயலுமானவிடங்களில், மக்கள் தமது நிராகரிப்பை வெளிப்படுத்தினர் (1).

1946 ஏப்ரலில் SPD மற்றும் KPD யின் பலவந்த ஒன்றிணைப்போடும், ஜெர்மன் சோஷலிஸ ஐக்கிய கட்சியின் (SED) தாபிதத்தோடும் (2) ஜெர்மனியின் சோவியத் இடங்கொண்ட பகுதிகளில் SPD கலைக்கப்பட்டது. பேர்லின் நான்கு வலயங்களாகப் பிரிக்கப்பட்டதால் சமூக ஜனநாயகக் கட்சி பேர்லின் கிழக்குப் பகுதியிலிருந்து செயற்படுவது சாத்தியமாயிற்று. எவ்வாறாயினும், 1961இல் சுவர் எழுப்பப்பட்ட பின்னர் கிழக்கு பெர்லீனில் செயற்பட்ட SPD கலைக்கப்பட்டது.

பலவந்த ஒன்றிணைப்புக்குப் பின்னர் கட்சியிலும், முழுச் சமூகத்திலும் களையெடுப்புகள் இடம்பெற்றன. இது பிரதானமாக முன்னாள் சமூக ஜனநாயகவாதிகளையே இலக்கு வைத்தது. சமூக ஜனநாயகக் கொள்கைகளை ஆதரித்தமைக்காக அவர்கள் தொடர்தொல்லைகளுக்கு ஆளாக்கப்பட்டு, அவர்களின் பதவிகளிலிருந்து நீக்கப்பட்டு, கைது செய்யப்பட்டனர் (3).

பின்னர் SED ஒரு மார்க்ஸிச - லெனினிஸக் கட்சியாக, ஒரு ‘புதிய வகையிலான கட்சியாக’ அபிவிருத்தியுற்றது. 1953இல் (4) ஸ்டாலினின் மரணத்தைத் தொடர்ந்து பொதுவுடைமை ஆட்சிக்கு முடிவு ஏற்படுமென்ற பலமான நம்பிக்கைகள் நிறைவேறவில்லை. 1953 ஜூன் 17ஆந் திகதி கைத்தொழில் கோட்டாக்களை அதிகரிப்பதற்கு எதிராக (‘குறைந்த கூலிக்கு அதிக வேலை’) கிழக்கு ஜெர்மனியில் இடம்பெற்ற தொழிலாளர் ஆர்ப்பாட்டங்கள் விரைவிலேயே ஓர் எழுச்சியாக மாற்றமுற்று, சுதந்திரத்துக்கும், ஜெர்மன் ஐக்கியத்துக்குமான கோரிக்கைகள் எழுந்தன. அது சோவியத் டாங்கிகளின் உதவியுடன் கொடூரமாக ஒடுக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 20 SPD ஒரு நவீன மக்கள் கட்சியாக நிலைமாற்றமடைதல்

## 1959இன் கொடஸ்பேர்க் நிகழ்ச்சித்திட்டம்








1950களின் போது SPD ஒரு பிரதான அரசியல் சக்தியாகக் கணிக்கப்பட வேண்டுமானால் அது யுத்தத்துக்குப் பின்னரான யதார்த்தங்களுக்குத் தன்னை இசைவுபடுத்திக் கொள்ள வேண்டுமென்பது கட்சியினுள் இருந்தவர்களுக்கு மென்மேலும் தெளிவாகியது. வில்லி ஈச்லர், பொருளியல் நிபுணர் ஹெயின்ரிச் டீஸ்ட் என்போரின் தலைமைத்துவத்தின் கீழ், நிகழ்ச்சித்திட்ட ஆணைக்குழுவில் பல வருட காலத் தயாரிப்பு வேலையின் பின்னர் 1959 நவம்பர் 13 முதல் 15 வரை பாட்கொடஸ்பேர்கில் இடம்பெற்ற விசேட கட்சி மாநாட்டில் புதிய அரங்கொன்று ஏற்றுக்கொள்ளப்பட்டது. இந்த நிகழ்ச்சித்திட்டத்தில் சமூக ஜனநாயகக் கொள்கையின் பிரதான அத்திவாரமாக விளங்கிய மார்க்ஸிஸமும், ஒரு சோஷலிஸ 'இறுதி நோக்கம்' என்னும் கருத்தும் கைவிடப்பட்டன. சமூக ஜனநாயகமென்பது, இப்பொழுது சுதந்திரத்துக்கும், ஜனநாயகத்துக்குமான இடையீடற்ற தேடுதலாக வரைவிலக்கணம் செய்யப்பட்டது. சமூக ஜனநாயகவாதிகள் இப்பொழுது தம்மை ஜெர்மன் சமஷ்டிக் குடியரசின் அடிப்படைச் சட்டத்தின் கீழான பாராளுமன்ற ஜனநாயகச் சட்டகத்தினுள் தொடர்ச்சியான சீர்திருத்தங்கள் என்றும் திசைமார்க்கத்தைக் கொண்ட ஓர் இடதுசாரி மக்கள் கட்சியாக எண்ணிக்கொண்டனர்.




5. கொடஸ்பேர்க் அரங்கின் முன் பக்கம்



4. கொடஸ்பேர்க் அரங்கில் திறந்த வாக்களிப்பு; ஏனையோர் மத்தியில் ஹொல்கர் போர்னர் (X) காணப்படுகின்றார். (1931-2006)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

1953இலும், 1957இலும் ஜெர்மன் பாராளுமன்றத்துக்கான தேர்தல்களில் கொன்ராட் அடினோரின் தலைமையிலான கிறிஸ்தவ ஜனநாயக சங்கத்திடம் (CDV) படுதோல்வியைச் சந்தித்த பின்னர் SPDயினுள்ளிருந்து நிகழ்ச்சித்திட்டப் புத்தாக்கத்துக்கான கோரிக்கைகள் ஓங்கி ஒலித்தன. அது போருக்குப் பிந்திய யதார்த்தத்தோடு இசைவாக்கம் செய்துகொள்ள விரும்பியதோடு, அந்த நிலைக்குத் தள்ளப்பட்டதென்றும் கூறலாம்.

இந்த அர்த்தத்தில், SPD நிரந்தர எதிர்க்கட்சியென்ற தனது முன்னைய பாத்திரத்தையும், சமூக மற்றும் அரசியல் வெளியாள் என்ற பாத்திரத்தையும் கைவிடவும் வாக்காளர்களுக்கு ஓர் ஆக்கபூர்வமான படிமத்தைக் காண்பிக்கவும் விரும்பியது. வில்லி ஈசிலரி பொருளியல் நிபுணர் ஹெயின்ரிச் டீஸ்ட் (1) என்போரின் தலைமைத்துவத்தின் கீழ் நிகழ்ச்சித் திட்ட ஆணைக்குழுவில் பல வருட கால தயாரிப்பு வேலையின் பின்னர் 1959 நவம்பர் 13 முதல் 15 வரை பாட்கொடஸ்பேர்கில் இடம்பெற்ற விசேட கட்சி மாநாட்டில் புதிய கட்சி நிகழ்ச்சித்திட்டம் கலந்துரையாடப்பட்டு, அங்கீகரிக்கப்பட்டது. கொடஸ்பேர்க் நிகழ்ச்சித்திட்டத்தில் கவனத்தை ஈர்த்த அம்சம் (2-5) மார்க்ஸிஸம் கட்சி தத்துவமாக உத்தியோகபூர்வமாகவும், இறுதியாகவும் கைவிடப்பட்டமையும், ஒரு சோஷலிஸ 'இறுதி நோக்கம்' நிராகரிக்கப்பட்டமையுமாகும். இவையிரண்டும் 1878 'சோஷலிஸ எதிர்ப்புச் சட்டங்கள்' காலத்திலிருந்து கட்சிப் பாரம்பரியத்தின் இன்றியமையாத அம்சங்களாகவிருந்தன. இந்த நிகழ்ச்சித் திட்டம் ஜனநாயக சோஷலிஸத்தின் உள் மைய விழுமியங்களுக்குத் தன்னை அர்ப்பணித்திருந்தது:

- சுரண்டலிலிருந்தும், பிறரில் தங்கி நிற்றலிலிருந்தும் சுதந்திரத்திற்கும், அரசியலுக்கும், சமூகத்துக்கும் துடிப்பாகப் பங்களிப்புச் செய்வதற்கான சுதந்திரம்;
- அனைவருக்கும் சமத்துவமான சுதந்திரம் என்பதற்கு நீதி ஓர் அடிப்படையான முன்நிபந்தனையாகவிருத்தல்;
- ஜனசமூகம் தனது அங்கத்தவர்கள் அனைவரினதும் நலன்களுக்கும் பொறுப்பானது என்றும் அறிவு குறித்த அர்த்தத்தில் ஒருமைப்பாடு.

மனிதாபிமானம், தொன்மைத் தத்துவ ஞானம் மற்றும் கிறிஸ்தவ ஒழுக்கநெறியியல் என்பவை ஜனநாயக, தாராளவாத சோஷலிஸத்தின் மூலங்களாக எடுத்துரைக்கப்பட்டன. இது சுதந்திரத்துக்கும், நீதிக்குமான இடையறாத தேடுதலாக அர்த்தங்கொள்ளப்பட்டது.

நிகழ்ச்சித்திட்டத்தின் அதிதீவிர கருத்து வேறுபாடுகளுக்குரிய பந்திகள் பொருளாதாரக் கொள்கைகள் சம்பந்தமான கூற்றுக்களாகும். SPD இப்பொழுது தன்னை ஒரு சமூக சந்தைப் பொருளாதாரத்துக்கும், தன்னாட்சிக்கும், தொழிலாளர்கள் மற்றும் நுகர்வோரின் துடிப்பான பங்கேற்புடனான அதிகாரப் பரவலாக்கத்துக்கும் அர்ப்பணித்தது. இதற்குப் பின்னர், SPD தன்னை ஜெர்மன் ஜனநாயகக் குடியரசின் அடிப்படைச் சட்டத்தின் பாராளுமன்ற ஜனநாயகச் சட்டத்தினுள் தொடர்ச்சியான சீர்திருத்தத் திசைமார்க்கங் கொண்ட இடதுசாரி மக்கள் கட்சியாக எண்ணிக் கொண்டது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 21 ஒரு புதிய ஜெர்மன் கொள்கைக்கான வாய்ப்பு நழுவவிடக்கூடாது

1966 இலிருந்து SPD அரசாங்கத்தில்











1. SPD தேர்தல் செய்திப்பத்திகை (1963) மற்றும் சுவரொட்டி (1961).



கோடஸ்பேர்க் அரங்கின் நிகழ்ச்சித்திட்ட மற்றும் அரசியல் மீள் திசைமார்க்கத்தின் பின்னர் SPD புதிய சமூக அடுக்குகளுக்கு வேண்டுகோள் விடுத்ததன் பேரில் அது ஒரு நவீன சீர்திருத்த நோக்கம் கொண்ட கட்சியாக அங்கீகரிக்கப்பட்டது. 1960களின் ஆரம்பத்தில் சமூக ஜனநாயகவாதிகள் அனேகமாக சகல சமூகத்துறைகளினதும் நவீனமயமாக்கம் சம்பந்தமான கருத்துகளை அபிவிருத்தி செய்திருந்தனர். 1969இல் ஜெர்மன் சான்செலர் வில்லிபிராண்ட் தலைமையில் CDV/CSV கூட்டணியில் (1966-1969) சுதந்திர ஜனநாயகக் கட்சியுடன் இணைந்து அரசாங்கத்தை அமைத்து அதன் கனிஷ்ட பங்காளியாகியது. 1960களின் இறுதியில் SPD நிகழ்ச்சித் திட்டம் மற்றும் கொள்கை சம்பந்தமாகப் பூரண அபிவிருத்தியுற்றிருந்ததைக் காண்பித்தது.



2. SPDயின் நிழல் அமைச்சரவை முதல் வரிசை இடமிருந்து: கார்லோ ஸ்கிமிட் (1896-1979), கேட் ஸ்ட்ரோபெல் (1907-1996), கார்ல் ஸ்கில்லர் (1911-1994). வில்லி பிராண்ட், பிரிட்ஸ் ஏர்லர், அலெக்ஸ் மொலர் (1903-1985), இடமிருந்து இரண்டாம் வரிசை: ஹேபர்ட் வெஹ்னர், ஏர்ன்ஸ்ட் ஷெல்லன்பேர்க் (1907-1984), ஹெல் முட், ஷ்மிட்ற் (1918), குஸ்டாப் ஹெய்னமென் (1899-1976) வால்டெமர் வொன் றொயரின்ஸன் (1906-1971).



3. பாரிய கூட்டணியின் அவசரகால நிலைச் சட்டங்கள் குறித்த கொள்கைகளுக்கு எதிர்ப்பு 1968 நியூரெம்பார்க் கட்சி மாநாட்டுக்கு முன்னர் ஹேர்பட் வெஹ்னர் முன்னால் காணப்படுகின்றார்.



5. 1969 செப்டெம்பர் 28. தேர்தல் வெற்றிக்குப் பின்னர் வில்லி பிராண்ட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

SPD கோடஸ்பேர்கில் இடம்பெற்ற நிகழ்ச்சித்திட்ட மற்றும் அரசியல் மீள் திசைமார்க்கத்தின் பின்னர் புதிய சமூக அடுக்குகளுக்கு உகந்ததாக மாறியதோடு, ஒரு நவீன சீர்திருத்தத் திசைமார்க்கம் கொண்ட கட்சியாகவும் ஏற்றுக்கொள்ளப்பட்டது. (1) 1960களின் ஆரம்பத்தில் சக்திக் கொள்கையிலிருந்து, வீதி நிர்மாணம் மற்றும் நகர அபிவிருத்தியூடாக கல்வி, விசேடமாகப் பல்கலைக்கழகக் கல்வி வரை சமூக ஜனநாயகவாதிகள் அனேகமாகச் சமூகத்தின் சகல விடயப்பரப்புகளிலும் நவீனமயமாக்கல் எண்ணக்கருக்களை அபிவிருத்தி செய்தனர். கெய்னீசியின் பொருளாதாரச் கொள்கை பாதிப்புகளைத் தணிக்கும் வழியாகவும் இறுதியில் பொருளாதார நெருக்கடியைத் தவிர்த்து, நிலைபேறான பொருளாதார முன்னேற்றம் மற்றும் சமூகப் பாதுகாப்பை முன்னேற்றும் ஒன்றாகவும் கருதப்பட்டது. சமூக ஜனநாயக நிகழ்ச்சித்திட்டப் பிரகடனங்களில் இணைத் தீர்மானம் மேற்கொள்ளல் மற்றும் ஜனநாயக மயப்படுத்தல் என்பவை முக்கிய வார்த்தைப் பிரயோகங்களாகின. இவ்வாறாக 1960களிலும், 1970களிலும் கட்சியின் வெற்றிக்கான அடிப்படைகள் தாபிக்கப்பட்டன.

ஒரு சில வருடங்களுள் வில்லி பிராண்ட் அணியின் தலைமைத்துவத்துடன் SPD சமஷ்டி மட்டத்தில் அரசாங்கப் பொறுப்பை ஏற்றுக்கொள்வது சாத்தியமாகியது. (2) அத்தோடு, மக்கள் மேலும் மேலும் CDV/CSVவின் பிற்போக்கான கொள்கைகளில் அதிருப்தியுற்றனர். 1966இல் லுட்விக் ஓர்ஹார்டின் தலைமையின் கீழான கிறிஸ்தவ தாராளவாதக் கூட்டணி அதிகரிக்கும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுக் கொள்கைப் பிரச்சினைகள் காரணமாகத் தடுமாற்றமடைந்த போது SPD CDV/CSVவுடன் ஒரு பெரும் கூட்டணியை ஏற்படுத்தத் தீர்மானித்தது. இத்தீர்மானம் ஒரு தீவிர உள்நிலைப் பிணக்கு ஏற்படக் காரணமாகியது. (3) கட்சியில் பெரும்பான்மையானோர் பிராண்டின் நிலைப்பாட்டை ஆதரித்தனர். எனினும், பிராண்ட் சமூக ஜனநாயகம் சமஷ்டி மட்டத்தில் அரசாங்கத்தில் பங்குபற்றுவதிலிருந்து விலகியிருக்க முடியாது என்பதில் நம்பிக்கை கொண்டிருந்தார்.

இதற்குப் பிந்திய நிகழ்வுகள் அவரின் கருத்துகள் மிகச் சரியானவை என்பதை உறுதிப்படுத்தின. மேற்கு ஜெர்மன் சமூகத்தில் சமூக ஜனநாயகச் சீர்திருத்தக் கொள்கைக்கு அனுகூலமான சூழலொன்று உருவாகியது (4). 1969 சமஷ்டித் தேர்தல்களின் போது SPD வாக்குகளில் 42.7 வீதத்தைப் பெற்றுக்கொண்டது. சுதந்திர ஜனநாயகக் கட்சியுடனான (FDP) கூட்டணியில் முதல் தடவையாக வில்லிபிராண்ட்டை சமஷ்டிக் சான்சலராக நிறுத்துவது சாத்தியமாகியது.

MODERNISATION

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் திசைமார்க்கத்தை வழங்குதல

## 1970 களில் நிகழ்ச்சித்திட்டம்சார் அபிவிருத்திகள்




1. ஹெல்முட் ஷ்மிட்ற், வில்லி பிரான்ட், அல்பிரட் நோ மற்றும் ஏனையோர். 1970, சார்பரூக்கென் SPD கட்சி மாநாட்டின் போது



2. நீண்ட தவணை நிகழ்ச்சித்திட்ட முதலாவது ஆணைக்குழுவின் இறுதி அறிக்கை சம்பந்தமான பத்திரிகையாளர் மாநாடு (ஹெல்முட் ஷ்மிட்ற் ஒலிவாங்கி அருகில், ஹான்ஸ் ஒப்பெல், (இடது புறத்தில்) மற்றும் 1973 'திசைமார்க்கப்படுத்தல் சட்டகம் குறித்த தீர்மானம்' முதல் பக்கம்

SPD, திட்டமிடல் மற்றும் சாத்தியத்தகவு சம்பந்தமான சமகாலக் கருத்துகளின் செல்வாக்கின் கீழ் 1970களின் ஆரம்பத்தில் ஒரு நீண்டகால நிகழ்ச்சித் திட்டத்தை வரைந்தது. இது 1975இல் இடம்பெற்ற மான்ஹெயிம் கட்சி மாநாட்டில் '1975-1985 வருடங்களுக்கான ஒரு பொருளாதார மற்றும் அரசியல் திசை மார்க்கச் சட்டகமாக' ஏற்றுக்கொள்ளப்பட்டது. ஏனைய விடயங்களோடு, அது நீண்ட கால நோக்கில் வேலைகளைப் பாதுகாத்தல், பணிநிலைமைகளை மனிதாபிமானமிக்கதாக்குதல், சுகாதாரக் கவனப் பராமரிப்பு முறைமைகளில் சீர்திருத்தங்கள், மற்றும் ஆண்களுக்கும், பெண்களுக்கும் சமவுரிமை என்பவற்றுக்கு அடிப்படையாகப் பொருளாதாரத்தை நவீனமயப்படுத்துவதற்கு அர்ப்பணிப்புணர்வு கொண்ட ஒன்றாகும். 1970களின் நடுப்பகுதியில் உலகளாவிய பொருளாதார நெருக்கடியின் பின்னர் ஏற்பட்ட பிரச்சினைகள் நீண்ட கால நிகழ்ச்சித்திட்டத்தின் சகல முன் அனுபவங்களையும் கேள்விக்குட்படுத்தின.




4. 1973 நீண்டகால நிகழ்ச்சித்திட்டம் சம்பந்தமான கேலிச் சித்திரம்







3. 1975 மான்ஹெயிம் கட்சி மாநாடு மற்றும் 1975-1985 வருடங்களுக்கான பொருளாதார மற்றும் 'அரசியல் திசைமார்க்கப்படுத்தல் சட்டகம்' முதல் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1970இல் சார்புருக்கென் SPD கட்சி மாநாடு (1) திசைமார்க்கச் சட்டகம் 85 எனப்படும் ஒரு நீண்ட தவணை சமூக-அரசியல் நிகழ்ச்சித் திட்டமொன்றை வகுத்தமைப்பதற்கான ஆணைக்குழுவொன்றை அமைத்தது. ஹெல்முட் ஸ்கிமிட் கூறியது போன்று, SPD 'இந்தத் தசாப்தத்தின் மீது ஒரு சமூக ஜனநாயக முத்திரையைப் பதிக்கும்' சந்தர்ப்பத்தைப் பயன்படுத்த விரும்பியது. அவரது தலைமையின் கீழ் 'நீண்ட தவணை நிகழ்ச்சித் திட்டத்தின்' முதலாவது வரைபொன்று 1972இல் சமர்ப்பிக்கப்பட்டது. (2) 1975இல் இடம்பெற்ற மான்ஹெயிம் கட்சி மாநாட்டில் இதன் திருந்திய வடிவம் '1975-1985க்கான ஒரு பொருளாதார மற்றும் அரசியல் திசைமார்க்கச் சட்டகமாக' ஏற்றுக்கொள்ளப்பட்டது (3). பிராண்ட் இந்தத் திசைமார்க்கப்படுத்தல் சட்டகத்தை 'அன்றாட அரசியலுக்கும், கட்சி நிகழ்ச்சி அரங்குக்குமிடையிலான இடைத் தளமாக' விபரித்தார்.

SPD 'திசைமார்க்கப்படுத்தல் சட்டகம்' சம்பந்தமான தனது பணி விடயத்தில் (1959இல்) கோடஸ்பேர்க் நிகழ்ச்சித்திட்டத்தோடு நின்றுவிட்ட ஒரு கட்சி அரங்கு குறித்த கலந்துரையாடல்களை மீண்டும் ஆரம்பித்தது. 'திசைமார்க்கப்படுத்தல் சட்டகம்' திட்டமிடல் மற்றும் சாத்தியத்தகவு குறித்த சமகாலக் கருத்துகளின் செல்வாக்கின் கீழ் வேலைகளின் நீண்ட காலப் பாதுகாப்பு வேலை நிலைமைகளில் மனிதாபிமானத்துடன் செயற்படுதல் சுகாதாரக் கவனப் பராமரிப்பு முறையைச் சீர்திருத்தல், மற்றும் ஆண்களுக்கும், பெண்களுக்கும் சம உரிமைகள் என்பவற்றுக்கான அடிப்படையாகப் பொருளாதாரத்தின் நவீனமயமாக்கலைக் கருதியது. தீர்மானகரமான அம்சங்கள் பின்வருமாறு:

- வினைத்திறன் சம்பந்தமான மரபுசார் எண்ணப்பாட்டை விமர்சித்தல்;
- சர்வதேசப் பொருளாதாரச் சுய-சார்பை வலியுறுத்துதல்;
- தரமிக்க பொருளாதார வளர்ச்சிக்கும், ஒரு வெற்றிகரமான சீர்திருத்தக் கொள்கைகளுக்குமிடையிலான இடைத்தாக்க உறவுகளைச் சுட்டிக் காட்டுதல்;
- சகல சமூகம் சார் மற்றும் பொருளாதாரப் பிரச்சினைகளையும் ஏற்றுச் சமாளிக்கும் அரசின் பொறுப்பை வலியுறுத்துதல்.

SPDக்கான ஒருங்கிணைப்பு அம்சமாக 'OR 85' (திசைமார்க்கப்படுத்தல் சட்டகம்) இன் முக்கியத்துவம் குறைத்து மதிப்பிடப்படுதல் ஆகாது.

எவ்வாறாயினும் 'OR 85'இனால் எதிர்பார்க்கப்பட்ட அளவிலான அரசியல் திசைமார்க்கத்தை வழங்க முடியவில்லை. 1970களின் இரண்டாவது அரைப்பகுதியில் உலகளாவிய பொருளாதார நெருக்கடிகளின் பின்னால் ஏற்பட்ட பிரச்சினைகள் நீண்ட தவணை நிகழ்ச்சித் திட்டத்தின் முன் அனுமானங்கள் அனைத்தையும் கேள்விக்குட்படுத்தின (4).

# 23 ‘புதிய பணிகளை ஒரு புதிய வழியில் கையாளுதல்’

## இர்சீ வரைபிலிருந்து பேர்லின் அரங்கு வரை,1984-1989



1. ஸ்மொக் சூழல் மாசடைதலின் சின்னமாகியது

1970களிலும், 1980களிலும் பெருமளவுக்கு முன்னணிக்கு வந்த தொழில்நுட்ப மாற்றங்களும், வாழிடவியல் சவால்களும் SPD தனது அடிப்படையான கட்சிச் செயற்பாடுகளை இற்றைப்படுத்தத் தூண்டின. வில்லிபிராண்ட் தலைமையில், ஆணைக்குழுவின் அமர்விடத்தின் பெயரில் உருவாகிய ‘இர்சீ நிகழ்ச்சித் திட்டம்’ SPDயின் முன்னேற்றம் குறித்த எண்ணக்கருவை மீள்வரைவிலக்கணம் செய்து சமூகரீதியிலும் வாழ்விடரீதியிலும் பொறுப்புணர்வு மிக்க கைத்தொழில் சமூகமொன்றில் கவனம் செலுத்தியது. இது சமூகப் பாதுகாப்பு முறைமையை ஒரு தடுப்புச் சமூகக் கொள்கைத் திசைமார்க்கத்தில் மாற்றியமைப்பதையும், சுய-உதவிக்கான உதவிகளையும், ‘ஆண்களுக்கும், பெண்களுக்கும் இடையிலான உண்மையான சமத்துவத்தையும்’ கோரி நின்றது.







2. இர்சீ கூட்டம் (இடமிருந்து வலம்) ஹோர்ஸ்ட் எம்கே, கார்ல் ஹெயின்ஸ் வில்லிபிராண்ட், பீட்டர் வொன் டேர்ட்சன், ஹோர்ஸ்ட் எம்கே, ஏர்ஹார்ட் எப்லர் மற்றும் எகொன் பார். பிராண்டின் ‘இர்சீ’ கைப்பிரதி வரைபு





3. 1988 முன்ஸ்டர் கட்சி மாநாட்டில் SPD தேசிய நிறைவேற்றும் பணிப்பாளர் ஆங்க் புக்ஸ் பேராளர்களுடன் விதிமுறையற்ற பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டுள்ளார். கட்சி மாநாடு SPDயினுள் ஆண் பெண் சமத்துவத்தை முன்னேற்றும் ஒரு தீர்மானத்தை (கோட்டா தீர்மானம்) மேற்கொண்டது. முன்ஸ்டர் தீர்மானத்தின் பிரகாரம் பாராளுமன்றத்தினதும், சமூக ஜனநாயகக் கட்சி உத்தியோகத்தர் களினதும் 40 விதமானோராவது பெண்களாகவிருத்தல் வேண்டும்.





4. ‘முன்னேற்றம் 90’ அரசாங்க நிகழ்ச்சித் திட்டம் சமர்ப்பிக்கப்படுதல் இடதுபுறத்திலிருந்து இரண்டாவதாக ஜொஹன்னஸ் ரோ. ஒலிவாங்கியருகில் ஹான்ஸ் ஜோக்கன் வோகல்.





5. 1989 ‘புதிய பாதை’ சுவரொட்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1984இல் SPD மக்கள் மென்மேலும் அதிகமாக விழிப்புணர்வைப் பெற்றுக்கொண்ட தொழில்நுட்ப மாற்றம் மற்றும் சூழல் பாதுகாப்புச் சவால்கள் போன்ற பிரதான சமூக அபிவிருத்தியையும் (1) மற்றும் புதிய விடுதலையையும் எதிர்ப்பு இயக்கங்களுக்குப் பதில் நடவடிக்கையாக ஒரு புதிய நிகழ்ச்சித் திட்டத்தை வகுக்கத் தீர்மானித்தது. ஆசனத் தவிசாளர் வில்லி பிராண்டின் தலைமையில் ஆணைக்குழு அமர்வு நிகழ்விடத்தின் பெயரில் 'இர்சீ நிகழ்ச்சித் திட்டம்' எனப் பெயரிடப்பட்ட நிகழ்ச்சித் திட்ட வரைபு சமர்ப்பிக்கப்பட்டது. (1984) (2). அனைத்துமடங்கும் வரைபு.

- முன்னேற்றம் சம்பந்தமான சமூக ஜனநாயக விளக்கத்தை மீள்வரைவிலக்கணம் செய்தது.
- ஒரு 'சமூகரீதியாகவும்' சூழல்ரீதியாகவும் பொறுப்புணர்வுள்ள கைத்தொழில் சமூகத்தை' வலியுறுத்தியது.
- ஒரு வகையான தடுப்புச் சமூகக் கொள்கை மற்றும் சுய-உதவிக்கான உதவி என்பவற்றை நோக்கிய சமூகக் கட்டமைப்புகள் மாற்றத்தைக் கோரியது.
- ஆண்களுக்கும், பெண்களுக்கும் உண்மையில் சமத்துவமான உரிமைகளைக் கோரியது (3).

1986இல் நியூரெம்பேர்க் கட்சி மாநாடு இந்த வரைபைக் கட்சியினுள்ளும் வெளியிலும் கலந்துரையாடலுக்கான அடிப்படையாக ஏற்றுக்கொண்டது. 1987 ஜூனில் வில்லி பிராண்ட் கட்சியின் ஆசனத் தவிசாளர் பதவியைத் துறந்ததும், ஓர் இரண்டாவது நிகழ்ச்சித் திட்ட ஆணைக்குழு தாபிக்கப்பட்டு, 'இர்சீ வரைபின்' திருத்தம், பயனொழுக்குபடுத்தல் மற்றும் நடைமுறைப்படுத்தல் பணிகள் ஒப்படைக்கப்பட்டன. தீவிர ஆழ்ந்தாராய்வுகளின் பின்னர் 1989 மார்ச்சில் அது ஓர் இறுதி வரைபைச் சமர்ப்பிப்பது சாத்தியமாயிற்று. ஒஸ்கார் லாபொன்டெயின், ஆன்க் புக்ஸ் மற்றும் ஹான்ஸ் உல்ரிச் குளோஸ் என்போரின் தலைமையிலான 'முன்னேற்றம் 90' (4) எனப்படும் செயற்பாட்டு குழு நிகழ்ச்சித் திட்ட ஆணைக்குழுவுடன் நெருக்கமாக ஒத்துழைத்தது. 1990இல் பொதுத்தேர்தல்களுக்கான அரசாங்க நிகழ்ச்சித் திட்டமொன்றை அபிவிருத்தி செய்தது. இந்த நிகழ்ச்சித் திட்டத்தில் SPD பொருளாதாரம் மற்றும் சூழலின் மீளிணக்கப்பாடு சம்பந்தமான தனது அர்ப்பணவுணர்வை வெளியிட்டது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ‘சமூக நீதியூடாக ஒருமைப்பாடு நிறைந்த சமூகத்தை நோக்கி’

பேர்லின் நிகழ்ச்சித்திட்டம் - 1989



1. 1989 நவம்பர் 09 - பேர்லின் சுவர் உடைந்து விழுதல்

ஜெர்மன் ஜனநாயகக் குடியரசில் (GDR) ஜனநாயகரீதியான அபிவிருத்தியை எதிர்நோக்கிய SPDயின் நிகழ்ச்சித்திட்டக்கட்சி மாநாடு, ஆரம்பத்திலேயே திட்டமிடப்பட்டிருந்தது போன்று, பிரெமனில் இடம்பெறவில்லை. அது 1989 டிசம்பர் 18ஆந் திகதி பேர்லினில் இடம்பெற்றது. SED ஆட்சிக் குழுவினதும், முழுக் ‘கிழக்குத் தொகுதியினதும் வீழ்ச்சியின் பின்னணியில் SPD “சுதந்திரம், சமூகநீதி, ஒருமைப்பாடு, ஆண்களுக்கும், பெண்களுக்கும் சமவுரிமைகள், கைத்தொழில் சமூகத்தின் சூழல் புத்தாக்கம் மற்றும் சமாதானத்துக்கான கட்சி” என்றும் தனது உரிமைக் கோரிக்கையை மேலும் உறுதிசெய்தது.




2. பேர்லின் நிகழ்ச்சித்திட்ட கட்சி மாநாட்டு நிகழ்விடமாகிய கட்டிடம், 1989




4. பேர்லின் நிகழ்ச்சித் திட்டத்தின் முன்பக்கம்




3. SPD இணைத் தாபகர் மார்க்கஸ் மெக்கல் மற்றும் வில்லி பிராண்ட் 1989 பேர்லின் நிகழ்ச்சித்திட்டக் கட்சி மாநாட்டில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜெர்மன் ஜனநாயகக் குடியரசில் (GDR) ஒன்றன்பின் ஒன்றாக இடம்பெற்ற நிகழ்வுகளின் விளைவாக, பிரிவனைச் சுவர் உடைக்கப்பட்டது (1) SPDயின் நிகழ்ச்சித் திட்டக் கட்சி மாநாடு ஆரம்பத்தில் திட்டமிடப்பட்டவாறு பிரெமனில் இடம்பெறவில்லை. அது 1989 டிசம்பர் 18ஆந் திகதி பேர்லினில் இடம்பெற்றது (2, 3). ஒரு தர்க்கரீதியான விளைவாக, ஜெர்மன் ஜனநாயகக் குடியரசிலும், கிழக்கு ஐரோப்பாவிலும் ஜனநாயகப் புரட்சியே பிரதான கவனவிடயமாக விளங்கியது.

தீவிர கலந்துரையாடல்களின் பின்னர் ஒரு வாக்கு மாத்திரம் எதிராக அளிக்கப்பட்ட நிலையில், வரைபு நிகழ்ச்சித் திட்டம் ஏற்றுக்கொள்ளப்பட்டது. SPD தனது பேர்லின் நிகழ்ச்சித்திட்டத்தில் (4) 'சுதந்திரம், சமூக நீதி, ஒருமைப்பாடு, ஆண்களுக்கும் பெண்களுக்கும் சம உரிமைகள், கைத்தொழில் சமூகத்தில் சூழல் புத்தாக்கம் மற்றும் சமாதானத்துக்கான கட்சி' என்றும் உரிமைக் கோரிக்கையை உறுதி செய்தது.

முன்னேற்றம் சம்பந்தமான எண்ணப்பாட்டில் மாற்றம் நடுநாயகமாக வலியுறுத்தப்படும் ஓர் அம்சமாக விளங்கியது. அது அளவு ரீதியான பொருளாதார வளர்ச்சி சம்பந்தமான ஒன்றாக மாத்திரமன்றி, பொருளாதார நடவடிக்கைக் கோட்பாடாக தரம் சார் சூழல் புத்தாக்கம் மற்றும் வாழ்க்கைத் தரத்தில் மேம்பாடு என்பவற்றை நோக்கியும் திசைமார்க்கப்படுத்தப்படும் ஒன்றாக விளங்கியது. கட்சியைப் பொறுத்த வரையில், ஓர் உலகளாவிய சட்டகத்தினுள் மாத்திரமே முன்னேற்றம் என்பது ஈட்டப்பட முடியும். SPD சார்த்துதல் பெற்ற உள்ளார்ந்த தொழில்நுட்ப மட்டுப்பாடுகளை ஏற்றுக்கொள்ளவில்லை. மாறாக, அது சமூகத்தின் பரந்த அடுக்குமுறை உள்ளடக்குவதன் மூலம் உணர்வுபூர்வமாக அரசியலை வடிவமைக்க வேண்டிய தேவையை வலியுறுத்தியது. 'ஐரோப்பிய ஐக்கிய இல்லம்' மற்றும் மூன்றாம் உலக மக்களுடன் ஒருமைப்பாடு என்பவை பலமாக வலியுறுத்தப்பட்டன. சமாதானமென்பது யுத்தமின்மை என்பதாக மாத்திரமன்றி, சூழல், பொருளாதாரம், கலாசாரம், மற்றும் மனித உரிமைகள் சம்பந்தமான துறைகளில் சகல மக்களினதும் ஒத்துழைப்பை உள்ளடக்குவதாகவும் புரிந்து கொள்ளப்பட்டது.

ஒரு புதிய சகவாழ்வுக் கலாசாரம் முன்னேற்றப்பட்டதோடு, சேவையென்பது இலாபகரமாகப் பணியிலீடுபடுதல் என்பதன்றி, குடும்பத்தினுள் வேலை, வீட்டு வேலை மற்றும் தனிப்பட்ட பங்களிப்புகள் என்பவற்றையும் உள்ளடக்கும் ஒன்றாக நோக்கப்பட்டது. வேலை நாள் 6 மணித்தியாலங்களாகக் குறைக்கப்படுவது, ஆண்கள், பெண்கள் இரு பாலாருக்கும் தன்னார்வப் பணிக்கும், கலாசாரப் பங்கேற்புக்கும் போதிய நேரத்தை வழங்கக்கூடியதாகவிருக்கும். முதல் முறையாகச் சமத்துவ உரிமைகள் என்பவை 1875 முதல் கோரிக்கை விடப்பட்டு வந்த வாக்குரிமை உள்ளிட்டவகையில், 1919இல் சமூக ஜனநாயகவாதிகளால் நடைமுறைப்படுத்தப்பட்ட சட்டரீதியான சமத்துவத்துக்கும் அப்பாற் செல்லவிருந்தது.

SOLIDARITY
ஒற்றுமை
Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ‘சமூக மற்றும் நீதி சம்பந்தமான மீள் ஒருங்கிணைப்பை வடிவமைத்தல்’

GDRஇல் SPDயின் லீப்ஸிக் நிகழச்சித்திட்டம், 1990



4. 1990 பெப்ருவரி 23. வில்லி பிரான்ட் லீப்ஸிக்கில் SPD பேரணியில்

1989 அக்டோபர் 07ஆந் திகதி GDRஇன் 40ஆவது ஆண்டு நிகழ்வில் ஜெர்மன் ஜனநாயகக் குடியரசின் சமூக ஜனநாயகக் கட்சி (SPD) ஷ்வான்டேயில் தாபிக்கப்பட்டது. SPD ஐக்கியமுற்ற தொழிலாளர் இயக்கத்தின் கட்சியென்று சுய நாமகரணம் செய்து கொண்ட சர்வாதிகார ஆட்சிக் கட்சியான SEDயின் உரிமைக் கோரிக்கைக்கு நேரடியாகவே சவால்விட்டது. 1990 ஜனவரியில் SDPயின் முதலாவது பேராளர் மாநாட்டில் அது தனக்கு மீண்டும் ஜெர்மன் சமூக ஜனநாயகக் கட்சியென்று (SPD) பெயர் சூட்டிக்கொண்டது. அதன் நடுநாயகமான நோக்கங்களுள் ஒன்று ஜெர்மன் தேசத்தின் மீள் ஒருங்கிணைப்பு ஆகும். 1990 பெப்ரவரியில் லீப்ஸிக்கில் இடம்பெற்ற GDR SPD மாநாடு ஓர் அடிப்படையான செயற்பாட்டு அரங்கை ஏற்றுக்கொண்டது. பேர்லின் நிகழ்ச்சித்திட்டத்தின் அடிப்படையில் GDRஇன் SPD சுதந்திரம், நீதி மற்றும் ஒருமைப்பாடு போன்ற அடிப்படை விழுமியங்களை உறுதி செய்ததோடு, தன்னை ஒரு ஜனநாயக, சமூக மற்றும் சூழல் பாதுகாப்புத் திசைமார்க்கம் கொண்ட சந்தைப் பொருளாதாரத்துக்கு அர்ப்பணித்தது. 1990 செப்டம்பரில் ஜெர்மன் சமூக ஜனநாயகத்தின் ஐக்கியம் மீண்டும் தாபிக்கப்பட்டது.




3. லீப்ஸிக் கட்சி மாநாட்டுக்கான சிறு விளம்பரப் பிரசுரம்


ExtraBlatt
Die SPD ist wieder da
SPD
SED raubte fremdes Eigentum




2. லீப்ஸிக் கட்சி மாநாட்டின் மேடை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1989 அக்டோபர் 07ஆந் திகதி, GDRஇன் 40ஆவது ஆண்டு நிறைவின் போது, ஜெர்மன் ஜனநாயகக் குடியரசின் சமூக ஜனநாயகக் கட்சி ஷ்வான்டேயில் (SDP) தாபிக்கப்பட்டது. இது ஐக்கிய தொழிலாளர் இயக்கத்தின் கட்சியென்று தன்னை அழைத்துக் கொண்ட GDR சர்வாதிகார ஆட்சிக் கட்சியான SEDக்குச் சவால்விடுக்கும் வகையில் இடம்பெற்றது. அது தன் நியதிச் சட்டத்தில் 'ஐரோப்பிய சோஷலிஸ வாதிகளினதும், சமூக ஜனநயாக வாதிகளினதும் ஜனநாயக சோஷலிஸ பாரம்பரியங்களைக்' குறிப்பிட்டது. சமூக ஜனநாயகத்துக்காகவும், 'பொருளாதார சக்தியின் ஜனநாயகக் கட்டுப்பாட்டுடன், சூழல் பாதுகாப்புத் திசைமார்க்கம் கொண்ட சந்தைப் பொருளாதாரத்துக்காகவும்' போராடி, அவற்றை ஈட்டிக்கொள்வதும் இன்னமும் தடைசெய்யப்பட்டிருந்த கட்சியின் நோக்கமாகவிருந்தது. 1990 ஜனவரியில் இடம்பெற்ற பேராளர் மாநாட்டில் கட்சி ஜெர்மனியின் சமூக ஜனநாயகக் கட்சியென்று மீள் நாமகரணத்தை ஏற்றுக்கொண்டது. அது ஜெர்மன் தேசத்தின் ஐக்கியத்துக்காகத் தன்னை அர்ப்பணித்துக் கொண்டது (1). புனுசுஇன் முதலாவது SPD கட்சி மாநாடு 1990 பெப்ரவரியில் லீப்ஸிக்கில் (2-4) ஓர் அடிப்படையான அரங்கு குறித்து உடன்பாடு கண்டது. அத்தியாவசிய அம்சங்களில் அது பேர்லின் நிகழ்ச்சித் திட்டத்தின் அடிப்படையில் அமைந்திருந்த போதிலும், பிரதானமாக SED சர்வாதிகார அடக்குமுறை அனுபவத்தின் அம்சங்களையும் கொண்டிருந்தது. பிரதான வித்தியாசமாக, சுதந்திரம், நீதி மற்றும் ஒருமைப்பாடு சம்பந்தமான சமூக ஜனநாயக அடிப்படை விழுமியங்கள் குறித்து, கிழக்கு ஜெர்மன் SPD தன்னை ஒரு ஜனநாயக, சமூக மற்றும் சூழல் பாதுகாப்புத் திசைமார்க்கம் கொண்ட சந்தைப் பொருளாதாரத்திற்கு அர்ப்பணித்துக் கொண்டது.

1990 செப்டம்பரில் மேற்கு மற்றும் கிழக்கு ஜெர்மன் SPD கட்சிகள் பேர்லின் கட்சி மாநாட்டில் சமூக ஜனநாயகத்தின் ஐக்கியம் மீண்டும் தாபிக்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ‘புதிது புனைதலும், சமூக நீதியும்’ - ‘மாற்றத்துக்கான தைரியம்’

## செம் பசுமைக் கருத்திட்டத்தின் ஆரம்பங்களிலிருந்து ‘2010 நிகழ்ச்சிநிரல்’ வரை, 1998-2005




1. 1998 ஆகஸ்டில் சமஷ்டித் தேர்தல் பிரசார இயக்கத்தின் போது பேர்லினில் ஜெர்ஹார்ட் ஷ்ரோடர்.




2. 2003 ஏப்ரில் பொன்னில் இடம்பெற்ற SPD பிராந்திய மாநாடு. பேராளர்களில் பெரும்பான்மையானோர் எமது சமூகப் பாதுகாப்பு முறைமைகள் மீள் சீராக்கல் செயல்முறையை’ அதாவது ‘நிகழ்ச்சிநிரல் 2010’ ஐ அங்கீகரித்தது.

உலகமயமாக்கல், தொடர்ச்சியான பொருளாதார நெருக்கடி, மக்கள் குடிப்பரம்பலில் மாற்றங்கள் மற்றும் சமூகப் பாதுகாப்பு முறைமைகளிலான சுமைகள், கொஹ்ல் காலத்தில் சேர்ந்து பெருகிய நிறைவேறாத சீர்திருத்தங்கள் என்பவையே SPDஐயும் ஷ்ரோடர்/ பிஷர் அரசாங்கத்தையும் எதிர்நோக்கும் சவால்களாகவிருந்தன. SPDயின் நிகழ்ச்சித் திட்டப் பிரகடனங்களிலும், சிவப்பு - பச்சை சமஷ்டி அரசாங்கம் பின்பற்றும் கொள்கைகளினதும் பிரதான பிரச்சினைகள் ‘புதிய நடுத்தரவர்க்கத்தினர்’ ஆதரவை நாடிச் செயற்படுதல், விடயங்களை விரைவுபடுத்தும் ஒரு சமூக அரசினூடாகத் தனிநபர் பொறுப்புணர்வை வலுப்படுத்துதல், கைத்தொழில் சமூகத்தின் சூழல் நிலைமாற்றம், ஆண்களுக்கும் பெண்களுக்கும் சமத்துவமான உரிமைகள் மற்றும் அரசு நிதிகளையும், நலனோம்புகை முறைமையையும் நிலைபேறானவகையில் வலுப்படுத்துதல் என்பவையாகும். ‘நிகழ்ச்சித்திட்டம் 2010’ உடன் சமூக ஜனநாயக அரசாங்கம் ஜெர்மன் சமூக நலனோம்புகை அரசை ‘எதிர்காலத்துக்கு தகுதிபெற வைக்கும்’ ஒரு நிகழ்ச்சித் திட்டத்தைச் சமர்ப்பித்தது. இதை அடிப்படையில் அறிமுகம் செய்யப்பட்ட சமூக - அரசியல் வலுப்படுத்தல் நடவடிக்கைகளும், குறிப்பாக ‘ஹார்ட்ஸ் சீர்திருத்தங்களும்’ ஒரு புறத்தில் வேலையின்மை குறைவடைந்ததற்கும், மறுபுறத்தில் தீவிர உள்நிலை வாத விவாதங்களுக்கும் இட்டுச் சென்றன. இதன் விளைவாக, SPD அங்கத்தவர் எண்ணிக்கை குறிப்பிடத்தக்களவு வீழ்ச்சிகண்டதோடு, தேர்தல்களில் பல பாரதூரமான தோல்விகளும் ஏற்பட்டன.




4. ஓர் அதிகுறைவான கூலி சம்பந்தமான SPD சிறு விளம்பரப் பிரசுரம்










5. ஹார்ட்ஸ் IV சட்டங்கள் என அழைக்கப்படுவனவற்றுக்கெதிரான ஆர்ப்பாட்டங்கள். பேர்லின் 2006

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1989 அக்டோபர் 1998 செப்டம்பர் சமஷ்டித் தேர்தல்களில் 1972 முதல் முதல் தடவையாக SPD 40.9 வீத வாக்குகளைப் பெற்று மிகவும் பலம்மிக்க கட்சியாகியது (1). கூட்டணி 90% பச்சைக் கட்சியுடன் சேர்ந்து அது புதிய சமஷ்டி அரசாங்கத்தை அமைத்தது. ஜெர்ஹார்ட் ஸ்குரோடர் சமஷ்டிச் சான்செலராகத் தெரிவுசெய்யப்பட்டார். சிவப்பு - பச்சை சமஷ்டி அரசாங்கம் பதவிக்கு வந்ததும் தொழிலாளர் சந்தை மற்றும் நலனோம்புகை அரசு சம்பந்தமான அவசரமான பணிகளை எதிர்நோக்கியது. இதற்கு முன்னர் இருந்த கிறிஸ்தவ ஜனநாயக மற்றும் தாராளவாதிகளின் அரசாங்கம் 'பல சீர்திருத்தங்களை நடைமுறைக்குக் கொண்டு வராமையே இதற்கான காரணமாகும். இது சமூக ஜனநாயக அரசாங்கத்தின் ஓர் அரசியல் மற்றும் நிகழ்ச்சித்திட்ட மீள் திசைமார்க்கத்தைத் தவிர்க்க முடியாத ஒன்றாக்கியது. சாதனைத் திசைமார்க்கம் கொண்டோரின் புதிய 'நடுத்தர வர்க்கத்தின் ஆதரவைப் பெற்றுக்கொள்ளுதல் விடயங்களை விரைவுபடுத்தும் ஓர் அரசினூடாக ஒவ்வொரு தனிநபரினதும் தனிப்பட்ட பொறுப்புணர்வுக்கு வேண்டுகோள் விடுத்தல், கைத்தொழில் சமூகத்தின் சூழல் மாற்றம் ஆண்களுக்கும், பெண்களுக்கும் சமத்துவ உரிமைகள் மற்றும் அரச நிதிகள் மற்றும் பொது நலனோம்புகை முறைமையை வலுப்படுத்துவதற்கான முயற்சிகள் - இவையே SPDயின் நிகழ்ச்சித்திட்டப் பிரகடனங்களில் முக்கிய அம்சங்களாக விளங்கியதோடு, சிவப்பு - பச்சை சமஷ்டி அரசாங்கத்தினால் பின்பற்றப்பட்ட பிரதான கொள்கை வாத விடயங்களாகவுமிருந்தன. கட்சியின் ஆசனத் தவிசாளரும், நிதியமைச்சருமாகிய ஒஸ்கார் லாபொன்டெயிற் 1999இல் தமது பதவிகளிலிருந்தும், இச் செயல்முறையிலிருந்தும் விலகினார்.

முதலில், சமஷ்டி அரசாங்கம் அரசாங்க நிதிகளை வலுப்படுத்தும் ஒரு நிலைமாற்றமில்லாத கொள்கையைக் கடைப்பிடித்தது. அனுகூலமற்ற சர்வதேச பொருளாதார நெருக்கடிகள் காரணமாகவும், அதைத் தொடர்ந்த வேலையின்மைகள் காரணமாகவும் இக் கொள்கையைத் தொடரமுடியவில்லை. மேலும், அவசியமான வகையில் சமஷ்டி வேலைவாய்ப்பு முகவர் நிலையத்தை ஹார்ட்ஸ் சீர்திருத்தங்கள் என்று அழைக்கப்படும் தொழிலாளர் முகவர் நிலையங்களாக மாற்றியமைத்தமை ஒரு துடிப்பான தொழிலாளர் சந்தைக் கொள்கையை வலியுறுத்தியது. மேலும், சுகாதார மற்றும் இளைப்பாற்று ஊழியர் கொள்கைகளில் சிக்கனத்தை அறிமுகம் செய்ய வேண்டியேற்பட்டது.

2003இல் 'நிகழ்ச்சி நிரல் 2010' (2, 3) உடன் சமூக ஜனநாயக அரசாங்கம் ஜெர்மனிய தொழிலாளர் சந்தைச் சீர்திருத்தங்கள் மற்றும் சமூகப் பாதுகாப்பு மீளொழுங்கமைப்பு, என்பவை மூலம் 'எதிர்க்காததுக்குப் பொருத்தமான ஒன்றாக்கும்' ஒரு நிகழ்ச்சித்திட்டத்தைச் சமர்ப்பித்தது. நலனோம்புகை அரசை மீளொழுங்குபடுத்தல், மற்றும் புத்தாக்கம் செய்தல் என்பவை இன்றியமையாத விடயங்களாகும். இது அதை மரணத்தினுள் தள்ளுவதல்ல, மாறாக நலனோம்புகை அரசின் பொருண்மையை பாதுகாப்பது மாத்திரமேயாகும். அதனால் தான் எமக்கு தீவிர மாற்றங்கள் அவசியப்படுகின்றன (சமஷ்டிச் சான்செலர் ஜெர்ஹார்ட் ஸ்குரோடர், 2003).

இந்தச் சமூக ஜனநாயகச் சீர்திருத்த நிகழ்ச்சித் திட்டத்தின் அடிப்படை வழிகாட்டல் சமூக நீதியை நாடுதலாகும் (4). எவ்வாறாயினும், நிகழ்ச்சி நிரல் 2010 ஆர்ப்பாட்டங்களையும், தேர்தல் தோல்விகளையும், கட்சியிலிருந்து இராஜினாமாக்களையும் ஏற்படுத்தியது (5). எவ்வாறாயினும், பொருளாதாரம் மீட்சியடைந்து, வேலையின்மைப் பிரச்சினை மீண்டும் குறைவடைந்தது.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ‘நீதியிலும், நியாயத்திலும் ஜெர்மனிய நவீனமயப்படுத்தல்’

## ஒரு புதிய நிகழ்ச்சித்திட்டத்தின் பாதையில் - ‘21ஆம் நூற்றாண்டில் சமூக ஜனநாயகம்’



1. 1999, பேர்லினில் SPD சமஷ்டிக் கட்சி மாநாடு. ஒரு புதிய கல்வித் திட்ட அரங்கின் பாணியை மீண்டும் ஆரம்பபிப்பதற்கு மாநாடு தீர்மானிக்கின்றது.




3. ஒரு புதிய கட்சி அரங்குக்கான ‘பிரெமன் வரைபின்’ முன் பக்கம்



2. தொழில் மற்றும் சமூக விவகாரங்களுக்கான சமஷ்டி அமைச்சர் பிரான்ஸ் முன்டெபெரிங், SPD பாராளுமன்றக் குழுத்தலைவர் பீட்டர் ஸ்ட்ரக், கட்சித் தவிசாளர் கேர்ட் பெக் மற்றும் SPD செயலாளர் நாயகம் ஹியுபேர்ட்டஸ் ஹெயில் (இடமிருந்து வலமாக) 2007 ஜனவரியில், பிரெமனில் ஓர் அந்தரங்க அமர்வின் பின்னர் ஒரு புதிய கட்சி அரங்குக்கான வரைபைச் சமர்ப்பிக்கின்றனர்.



4. 2007 பெப்ருவரியில் பிரெமனில் கேர்ட் பெக் நிகழ்ச்சித் திட்ட மாநாட்டில் உரையாற்றுகின்றார்.

ஜெர்மன் ஐக்கியம் ஈட்டப்பட்டமை, தொடரும் ஐரோப்பிய ஒன்றிணைப்பு, பொருளாதார உலகமயமாக்கல், எமது இயற்கைச் சூழலின் துரிதமான அழிவு, மற்றும் தீவிர குடிசைப் பரம்பல் மாற்றங்கள் என்பவை சமூக ஜனநாயக நிகழ்ச்சித்திட்டங்களும், கொள்கையும் பதில் சொல்ல வேண்டிய அவலங்களை ஆக்கின. 2007 செப்டம்பரில் நிகழ்ச்சித் திட்ட ஆணைக்குழு ஒரு புதிய அடிப்படை நிகழ்ச்சித் திட்ட வரைபை ஏற்றுக்கொண்டது. இது ‘இடதுசாரி மக்கள் கட்சியான’ SPDயின் புதிய அரங்காக ஹாம்பர்க் கட்சி மாநாட்டில் சமர்ப்பிக்கப்படவிருந்தது. இது எட்டுத் தீர்மானகரமான விடயப்பரப்புகளில் கவனம் செலுத்தியது. இவை சுதந்திரம், நீதி மற்றும் ஒருமைப்பாடு என்னும் அடிப்படை விழுமியங்களை வலியுறுத்தின.

- ஒரு சமாதானமான, நீதியான உலகம்
- ஒரு சமூக, ஜனநாயக ஐரோப்பா
- ஒருமைப்பாடு மற்றும் ஒரு ஜனநாயக அரசு என்பவற்றை அடிப்படையாகக் கொண்ட சிவில் சமூகம்
- ஆண் பெண் இருபாலாருக்கும் சமத்துவமான உரிமைகள
- நிலைபேறான முன்னேற்றமும், தரம்சார் வளர்ச்சியும்
- சகலருக்கும் கௌரவமான வேலைகள்
- ஒரு தடுப்பு நலனோம்புகை அரசு
- மேலும் சிறப்பான கல்வியும், சிறுவருக்கு அனுகூலமான சமூகமும்.




5. புதிய ‘ஹாம்போர்க் நிகழ்ச்சித் திட்டம்’ நிகழ்ச்சித் திட்ட ஆணைக்குழு கவனஞ் செலுத்திய முக்கிய அம்சங்கள்

SPDயின் இலட்சியம் ஜனநாயக சோஷலிஸமாகும். அதன் செயற்பாடுகளின் கோட்பாடு சமூக ஜனநாயகமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1999 டிசம்பரில் பேர்லினில் இடம்பெற்ற SPD கட்சி மாநாடு (1) ஜெர்மன் ஐக்கியத்தின் அனுபவம், ஐரோப்பிய ஒன்றிணைப்பின் தாக்கங்கள், பொருளாதார உலகமயமாக்கலின் விளைவுகள், சூழல் அழிவு மற்றும் தீவிர மக்கள் குடிபரம்பல் மாற்றங்கள் என்பவை உள்ளடங்கலாக மாறும் ஒரு சமூகத்தின் நிலைமைகளைக் கவனத்தில் கொள்ளும் வகையிலான ஒரு புதிய கட்சித் திட்ட அரங்கை வரையத் தொடங்கியது.

2007 ஆரம்பத்தில் கட்சி நிறைவேற்றுக் குழு ஒரு புதிய நிகழ்ச்சித் திட்டத்துக்கான 'பிரெமன் வரைபு' (2, 3) என அழைக்கப்பட்டதை ஏற்றுக்கொண்டது. இது இன்னமும் சுதந்திரம், நீதி மற்றும் ஒருமைப்பாடு என்னும் அடிப்படை விழுமியங்களையே வலியுறுத்தியது. கட்சியினுள் தீவிர கலந்துரையாடல்களின் பின்னர் (4) 2007 செப்டம்பரில் (5) நிகழ்ச்சித்திட்ட ஆணைக்குழு பயனொழுங்கு செய்யப்பட்ட திருத்திய வரைபொன்றை 2007 அக்டோபர் கட்சி நிகழ்ச்சித் திட்ட மாநாட்டில் சமர்ப்பித்தது. இது எட்டுத் தீர்மானகரமான விடயப் பரப்புகளில் கவனம் செலுத்தியது.

- ஒரு சமாதானமான, நீதியான உலகம்
- ஒரு சமூக, ஜனநாயக, ஐரோப்பா.
- ஒருமைப்பாடு, மற்றும் ஒரு ஜனநாயக அரசு என்பவற்றை அடிப்படையாகக் கொண்ட சிவில் சமூகம்
- ஆண் பெண் இருபாலாருக்கும் சமத்துவமான உரிமைகள்
- நிலைபேறான முன்னேற்றமும் தரம்சார் வளர்ச்சியும்
- சகலருக்கும் கௌரவமான வேலைகள்
- ஒரு தடுப்பு நலனோம்புகை அரசு
- மேலும் சிறப்பாக கல்வியும், சிறுவருக்கு அனுகூலமான சமூகமும்.

நீண்ட காலக் கட்சிப் பாரம்பரியத்தின் அடிப்படையில் 'நடைமுறையும், ஈட்டிக்கொள்ளும் எமது நிலைமாற்றமில்லாத பணியாக இருக்கும் வகையிலமைந்த, ஒருமைப்பாட்டை அடிப்படையாகக் கொண்ட ஒரு சுதந்திரமான நீதியான சமூகத்துக்கான இலட்சியம் என்ற வகையில் தன்னை ஒரு ஜனநாயக சோஷலிஸத்துக்கு அர்ப்பணித்துக் கொண்டது. எமது செயற்பாடுகளை வழிநடத்தும் கோட்பாடு சமூக ஜனநாயகமாகும்'.

# புத்தாக்கத்துக்கான சக்தி - சமூக ஜெர்மனி ஒன்றை நோக்கி

2007 ஹாம்பேர்க் நிகழ்ச்சித்திட்டம்



1. ஹாம்பேர்க் கட்சி மாநாட்டின் முழுநிறை அமர்வு

2007 அக்டோபரில் SPD தனது ஹாம்பேர்க் மாநாட்டில் ஒரு புதிய கட்சி நிகழ்ச்சி அரங்கை ஏற்றுக்கொண்டது. அது தன்னை ஓர் இடதுசாரி மக்கள் கட்சியாகவும் அறிமுகப்படுத்தியது. சுதந்திரம் மற்றும் சமூக நீதியென்பவற்றின் அடிப்படையில் அது 'அனைவருக்கும் ஒரு பொருளாதார முன்னேற்றத்தைக்' கோரியது மாத்திரமன்றி, ஒருமைப்பாடு மற்றும் பால்நிலை சமத்துவத்தின் அடிப்படையில் அமைந்ததும், சிறுவர்களுக்கு அனுகூலமானதும், தடுப்பு சமூக நலனோம்புகை முறைமை ஒன்றை வழங்குவதுமான சமூகமொன்றை உருவாக்கும் நோக்கத்தையும் அபிவிருத்தி செய்தது. இந்த அரசு கல்வி மற்றும் மேலதிக பயிற்சிகளில் முன்னேற்றம், வாழ்க்கையில் அனைவருக்கும் சமமான சந்தர்ப்பங்களை ஏற்படுத்துதல், மற்றும் உயர்ந்த மட்டத்திலான சமூகப் பாதுகாப்பு போன்ற பண்புகளைக் கொண்டு மிளிருவதாக அமையும். ஒருமைப்பாடு குறித்த இவ்வெண்ணக்கரு ஐரோப்பிய மற்றும் சர்வதேச ஒத்துழைப்பின் விதிமுறையான அடிப்படையாக விளங்கு மென்று கருதப்பட்டது. ஜனநாயக சோஷலிஸம் தொடர்ந்தும் SPDயின் இலட்சியமாகவும் சமூக ஜனநாயகம் அதன் நடவடிக்கைகளுக்கானகோட்பாடாகவு முள்ளன.




3. கேர்ட் பெக் அங்கீகரிக்கப்பட்ட 'ஹாம்பேர்க் நிகழ்ச்சித் திட்டத்துடன்'.




4. ஒரே நோக்கம் - சகலரும் சிறப்பான வேலை: கேர்ட் பெக் முன்னாள் உப - சான்செலரும், தொழில் மற்றும் சமூக விவகாரங்களுக்கான சமஷ்டி அமைச்சர் பிராங்க் முன்டெபெரிங்குடன்.




2. புதிதாகத் தெரிவுசெய்யப்பட்ட கட்சித் தலைமைத்துவம். கட்சித் தவிசாளர் கேர்ட் பெக் மற்றும் அவரின் பிரதித் தலைவர்களான அனட்ரியா நால்ஸ், பியர் ஸ்டெயின் புருக் மற்றும் பிராங்க் வோல்டர் ஸ்டெயின்மேயர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2007 அக்டோபரில் SPD நிகழ்ச்சித்திட்டக் கட்சி மாநாட்டுக்காக ஹாம்பேர்க்கில் 'சகலருக்கும் பொருளாதார சுபீட்சம் - ஒரு சமூக ஜெர்மனி' என்னும் சுலோகத்தின் கீழ் பேராளர்கள் ஒன்றுகூடியவேளையில், ஷ்ரோடர் அரசாங்கத்தினால் ஆரம்பிக்கப்பட்ட 'நிகழ்ச்சிநிரல் 2010' சீர்திருத்தங்கள் பொருளாதார வளர்ச்சி, பொது வரவு-செலவுத் திட்டங்கள் ஸ்திர நிலையடைதல், மற்றும் வேலையின்மையில் வீழ்ச்சி என்பவற்றின் வடிவத்தில் பயனளிக்கத் தொடங்கியுள்ளது தெளிவாகியது. ஆயினும் அனேக சமூக ஜனநாயகவாதிகள் தெரிவித்தது போன்று, சில அம்சங்கள் திருத்தப்படவேண்டியிருந்தது. வயது முதிர்ந்த ஊழியர்களுக்கு மேலும் பல மாதங்களுக்கு வகை 1 இலான வேலையின்மை அனுகூலங்களை வழங்குவதற்கான கட்சித் தவிசாளர் கேர்ட் பெக்கின் தீர்மானம் பெரும்பான்மையினரின் அங்கீகாரத்தைப் பெற்றது. (1) ஒரு புதிய கட்சித் தலைமைத்துவத்துக்கான தீர்மானத்தையும் கட்சி மாநாடு தெளிவாக பெரும்பான்மையுடன் அங்கீகரித்தது (2).

'ஹாம்பேர்க் அரங்கு' பேராளர்களின் பாரிய பெரும்பான்மை ஆதரவுடன் அங்கீகரிக்கப்பட்டது (3) SPD ஜெர்மனியின் முதலாவது கட்சியென்ற வகையில் சுதந்திரம், நீதி மற்றும் ஒருமைப்பாடு என்னும் ஆதார விழுமியங்களினடிப்படையில் பிரதான சமகால சவால்களுக்கான நிகழ்ச்சித் திட்டரீதியான பதிலை வழங்கியது. உலகமயமாக்கலென்பது பொருளாதாரத்தில் துடிப்பான செயற்பாடு, சமூகநீதி மற்றும் சூழல் குறித்த நற்சிந்தனை என்பவற்றை இணைக்கும் வகையிலான நிலைபேறான முன்னேற்றத்திசையிலான அரசியல் ஒழுங்குபடுத்தல் பணியாக நோக்கப்பட்டது. நிலைபேற்றுத் தன்மையே SPD யின் நோக்கமாகிய அரசியல் மற்றும் பொருளாதார நடவடிக்கைகளின் கோட்பாடாக விளங்கியது. அதுவே எதிர்காலத்தைப் பாதுகாப்பதற்கான ஒரேயொரு வாய்ப்பு என்பதே இதற்கான காரணமாகும்.

SPD ஒருமைப்பாட்டு அடிப்படையிலான ஜனநாயக சிவில் சமூகமொன்றை உருவாக்கும் தனது திட்டத்தில் தன்னை ஓர் இடதுசாரி மக்கள் கட்சியாகவும் சுதந்திரம் மற்றும் சமூக நீதி குறித்த அடிப்படை விழுமியங்களைச் சாதிப்பதில் புத்தாக்கத்துக்கான ஒரு சக்தியாகவும் காண்பித்தது. மேலும் இச்சமூகம் பல் சமத்துவம், சிறுவருக்கு அனுகூல ஆதரவு, தரம்சார் பொருளாதார வளர்ச்சி மற்றும் சகலருக்கும் கௌரவமான வேலைகள் என்பவற்றை நடுநாயகமாகக் கொண்டதாக அமையும் (4). சமூக நீதி சம்பந்தமான சிந்தனைகள் தடுப்பு நலனோம்புகை அரசு என்ற எண்ணக்கருவில் உள்ளடக்கம் பெற்றுள்ளன. இங்கு வாழ்க்கையில் சமமான சந்தர்ப்பங்களை ஏற்படுத்துதல், கல்வி மேலதிக பயிற்சி, இலாபகரமான பணிவாய்ப்பு ஒருவரின் ஜீவனோபாயத்துக்கு உத்தரவையும் வழங்குதல் மற்றும் சமூகப் பாதுகாப்புத் துறையிலான நடவடிக்கைகள் என்பவற்றுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

ஒருமைப்பாட்டின் அடிப்படையிலமைந்த சிவில் சமூகமே ஒரு சமூக மற்றும் ஜனநாயக ஐரோப்பாவினதும், சமாதானம் நிறைந்த நீதியான உலகத்தினதும் உயிர் மூச்சாகக் கருதப்பட்டது. SPDஐப் பொறுத்த வரையில், ஐரோப்பிய நிறுவனங்களையும், ஐக்கிய நாடுகள் அமைப்பையும் பலப்படுத்துவது வறுமை, சுரண்டல், அழிவைக் கொணரும் போட்டி மற்றும் ஆயுதமோதல்கள் இல்லாத ஓர் உலக அமைப்பை நிலைநாட்டுவதற்கான முக்கியமான வழிகளாகும்.

SPD தனது புதிய கட்சி நிகழ்ச்சி அரங்குடன் ஜெர்மனியில் ஒருமைப்பாட்டுடன்கூடிய பெரும்பான்மைக்காக இயக்கம் நடத்தியது. அதன் நீண்டகாலக் கட்சிப் பாரம்பரியத்தினடிப்படையில் அது 'நடைமுறைப்படுத்தல் மற்றும் சாதனையில் எமது இடையறாத பணியாகிய, ஒருமைப்பாட்டினடிப்படையிலமைந்த ஒரு சுதந்திரமானதும், நீதியானதுமான சமூகம் குறித்த இலட்சியமென்ற வகையில்' ஜனநாயக சோஷலிஸத்துக்குத் தன்னை அர்ப்பணித்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


29

# சமூக ஜனநாயகம் - இடைமாற்றத்தில் அடையாளம்

பெறுபேறுகளும், எதிர்காலச் சாத்தியங்களும்

ஜெர்மன் சமூக ஜனநாயகம் எப்பொழுதுமே வெறுமனே தற்போதுள்ள சூழ்நிலைகளைச் சகித்துக் கொள்ளாமல், யதார்த்தத்தை ஏற்றுக்கொள்ளத் தயாராகவிருந்துள்ளது. மீண்டும் மீண்டும் அது புதிய சவால்களை ஏற்றுக்கொள்ளும் தனது ஆற்றலை நிரூபித்துள்ளது. உதாரணமாக, சூழல் பிரச்சினைகளைக் கூறலாம். மாற்றங்களிலும், மாற்றங்களினூடாகவும் அது தனது அடையாளத்தைப் பேணிப்பாதுகாத்துள்ளது. சமூக ஜனநாயகம் தொடர்ந்தும் யதார்த்தமாகவுள்ளது.

- சமூக நீதியின் கட்சி
- சுதந்திரத்தின் கட்சி
- சர்வதேசப் புரிந்துணர்வின் கட்சி
- சமாதானத்தின் கட்சி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜெர்மன் சமூக ஜனநாயகம் வெறுமனே தற்போதுள்ள நிலைமைகளைக் சகித்துக் கொள்ளாமல், யதார்த்தத்தை ஏற்றுக்கொள்வதற்கு எப்பொழுதுமே தயாராகவிருந்துள்ளது. சமூக ஜனநாயகம் மக்கள் ஒருமைப்பாட்டுடன் செயலாற்றுவதன் மூலம் வாழ்க்கை நிலைமைகளை மேம்படுத்திக்கொள்ளலாம் என்னும் சிந்தனையாய் ஊக்க ஆர்வம் பெற்று, 19ஆம் நூற்றாண்டின் மத்தியிலிருந்து பல்வேறு அரசியல் முறைமைகளை ஏற்றுச் சமாளித்துச் சோதனைகளில் வெற்றிகண்டு வந்துள்ளது. மாற்றங்களிலும், மாற்றங்களினூடாகவும் அது தனது அடையாளத்தைப் பேணிப் பாதுகாத்துள்ளது. சமூக ஜனநாயகம் தொடர்ந்தும் யதார்த்தமாகவுள்ளது.

- **சமூக நீதியின் கட்சி**

SPD பொதுவாகத் தொழிற்சங்கங்களுடன் ஒருமித்து - சாதாரண மக்களென்று அழைக்கப்படுவோரின் பொருளாதார நலன்களைப் பாதுகாத்தல், அவர்களின் மனித உரிமைகள் மற்றும் மனித கௌரவத்தைப் பாதுகாத்தல் என்பவற்றுக்காகப் போராடுகின்றது. அதீத ஜனரஞ்சகவாதத்தைத் (populism) தவிர்த்து, மேலும் மேலும் ஒன்றிணைவு பெறும் உலகத்தின் சிக்கலான பிரச்சினைகளுக்கு நிலைபேறான யதார்த்தமான தீர்வுகளைத் தேடும் கடினமான பணியை அது ஆற்றுகின்றது. இதற்கு முந்திய காலங்களில் நீதியான விநியோகம் என்னும் பிரச்சினையே முக்கியமானதாக விளங்கியது. ஆயினும் இன்று முக்கியம் பெற்றிருப்பது சமமான, நீதியான வாய்ப்புகளாகும். SPD ஒருமைப்பாட்டின் அடிப்படையிலமைந்த, சமூக மற்றும் சாதனைத் திசைமார்க்கம் கொண்ட சமூகத்தில் ஒரு புதிய வகையிலான வறுமை என்றும் தற்போதைய சவாலுக்கு முகங்கொடுக்கும் வகையில் சகல பிரயத்தனங்களையும் மேற்கொள்ளும்.

- **சுதந்திரத்தின் கட்சி**

SPD - தேசிய சோஷலிஸவாதிகள் மற்றும் பொதுவுடைமைவாதிகள் இருபாலாருக்கும் எதிராக - இடையறாது சுதந்திரத்தைப் பாதுகாத்து வந்துள்ளது. அதற்காகப் பெருமளவிலான தியாகங்களையும் செய்துள்ளது. உள்நிலையில் அது சுததந்திரமென்பது அடக்குமுறை மற்றும் துன்ப துயரங்களிலிருந்து விடுபடும் சுதந்திரமென்றும், வெளிநிலையில் கட்டுத்தளைகளற்ற சுதந்திரமான தேசமென்றும் அர்த்தம் கற்பிக்கின்றது.

- **சர்வதேசப் புரிந்துணர்வின் கட்சி**

SPD தனது சொந்தத் தேசத்தின் சுதந்திரத்தை வலியுறுத்திய போதிலும், எப்பொழுதும் வெளிநிலை சம்பந்தமான பார்வையையும் கொண்டுள்ளது. ஏனைய நாடுகள் தேசங்களின் சுதந்திரமும் அதன் அபிலாஷையாக இருந்துள்ளது. முதலாவது உலக மகாயுத்தின் அழிவுகளின் பின்னர் 1925இலேயே அது புதிய பாதைகளைத் திறக்கும் வகையில் தனது நிகழ்ச்சித்திட்டத்தில் ஐக்கிய ஐரோப்பிய அரசுகளுக்கான அழைப்பை விடுத்தது. ஐரோப்பா என்பதன் கருத்து தனியாக ஒதுங்கியிருத்தல் என்பதல்ல; மாறாக அது பொதுவான சமூக மற்றும் சூழல் தர நியமங்களுக்காகப் போராடுதன் என்பதாகும். மேலும், தொடர்ச்சியாக அதிக ஒன்றிணைவை நோக்கி நகரும் ஓர் உலகத்தில் அபிவிருத்தியுறும் அரசுகளுக்கான தனது பொறுப்பையும் வலியுறுத்துகின்றது.

- **சமாதானத்தின் கட்சி**

SPD எப்பொழுதுமே சமாதானத்துக்கான ஒரு கட்சியாக விளங்கி வந்துள்ளது. ஆயினும், அடிப்படைச் சமரசம் அல்ல. ஆகஸ்ட் 1914இல் அது சொந்த நாட்டைப் பாதுகாப்பதற்கான இராணுவ நடவடிக்கைக்கு ஆதரவாகத் தீர்மானம் மேற்கொண்டது. இன்று அது சமாதானப் பணிநோக்குகளுக்கான ஐ.நா. தீர்மானங்களை ஆதரிக்கின்றது. எவ்வாறாயினும், எங்குமே இராணுவ வழிகளில் மாத்திரம் சமாதானம் ஈட்டப்படமுடியாதது என்பதை நன்கு அறிந்துள்ளது.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




'சகல மகத்தான அரசியல் நடவடிக்கைகளும் நிகழ்வுண்மைகளிலிருந்து ஆரம்பித்து, அவை எவையென்று வெளிப்படுத்துவதாகும். சகல அரசியல் குறுகிய மனப்பான்மைகளும் நிகழ்வுண்மைகளை மறைப்பதும், மழுப்புவதுமாகும்.'

பேர்டினட் லஸ்ஸால், 1862

FRIEDRICH EBERT STIFTUNG

LASSALLE



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



'முற்றுமுழுதாகச் சோஷலிஸத் தன்மையன்றி, ஜனநாயகத்தையும் உள்ளடக்கும் வகையிலான ஒரு நிகழ்ச்சித்திட்டத்தை நாம் வரைய வேண்டும் என்பதை நீங்கள் ஏற்றுக்கொள்வீர்கள். இல்லையேல் நாம் சமூக ஜனநாயக வாதிகள் என்னும் பெயருக்கு உரிமைகோர முடியாது; சமூகப் பிரச்சினைக்கான தீர்வு குறித்தும் சிந்திக்க முடியாது.'

ஓகஸ்ட் பெபல், 1869

FRIEDRICH EBERT STIFTUNG

BEBEL

பெபல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



'சோஷலிஸத்தின் இறுதி நோக்கம் என்று அழைக்கப்படுவதில் எனக்கு ஆர்வமோ, ஈடுபாடோ மிகவும் குறைவு என்பதை நான் வெளிப்படையாக ஒத்துக்கொள்கின்றேன். இந்த நோக்கம் அது எதைக் கருதினாலும் - என்னைப் பொறுத்தவரையில் அர்த்தமற்றதாகும். இயக்கமே சர்வமுக்கியத்தும் வாய்ந்ததாகும்.'

எடுவார்ட் பேர்ன்ஸ்டீன், 1898

FRIEDRICH EBERT STIFTUNG

BERNSTEIN

பேர்ன்ஸ்டீன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



'....பிரத்தியேகமாக இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் பணி மிகவும் முக்கியமானதென்பதால், அது ஒரு சமூகத்தடை விலக்காகவோ, விமர்சனங்களை ஒதுக்குவதாகவோ இருக்கக்கூடாது. யதார்த்தத்தோடு முரண்படும் ஒரு நிகழ்ச்சித்திட்டத்தைவிட மோசமான ஒரு விடயம் இருக்கமுடியாது'

கார்ல் கோட்ஸ்கி, 1899

FRIEDRICH EBERT STIFTUNG

KAUTSKY

கோட்ஸ்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



'எமது அடுத்த நோக்கம் பால் வேறுபாடின்றி வளர்ந்தவர்கள் அனைவருக்கும் பொதுவான, சமத்துவமான, நேரடியான வாக்களிக்கும் உரிமையாகும் (....). ஆயினும், நாம் போதிக்கவேண்டியது இந்த நோக்கத்தை மாத்திரமல்ல (.....) நாம் மக்களுக்குச் சரியாகச் சமர்ப்பிக்க வேண்டியது எமது கிளர்ச்சியின் அரசியல் கோரிக்கையான குடியரசுக் கோரிக்கையை ஆகும்.'


ரோஸா லக்ஸெம்பேர்க், 1910

FRIEDRICH EBERT STIFTUNG

LUXEMBURG

லக்ஸெம்பேர்க்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



‘SPDக்கு இன்றியமையாத விடயம் அதன் அங்கத்தவர்கள் சோஷலிஸவாதிகளாகவும், ஜனநாயகவாதிகளாகவும், சமாதானக் கருத்தைக் கொண்டிருப்போராகவும் விளங்கும் அவர்களின் விருப்புறுதியாகும்...... அவர்களின் சிந்தனைகளை வடிவமைப்பது பொதுவுடைமைப் பிரகடனமாக, மலைப் பிரசங்கமாக, நியாய விளக்கவாதமாக, வேறு ஏதாவது தத்துவஞானமாக அல்லது ஒழுக்கநெறி ஊக்க உணர்வுகளாக இருந்தபோதிலும், அனைவருக்கும்......... எமது கட்சியில் இடமுள்ளது. அதன் ஆன்மீக ஐக்கியம் இதனால் குலைந்துவிடமாட்டாது.’


கேர்ட் ஷுமாக்கர், 1945

FRIEDRICH EBERT STIFTUNG

SCHUMACHER

ஷுமாக்கர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



'.......... நாம் எமது வரலாறு குறித்தும், எமது மக்களுக்கு வழங்கப்பட்ட சேவைகள் குறித்தும் பெருமிதம் கொண்டுள்ளோம். சிறிய, ஏளனத்துடன் நோக்கப்பட்ட சிறுபான்மை என்னும் நிலையிலிருந்து, ஒரு மாபெரும் முன்னேற்றகரமான மக்கள் கட்சியென்ற நிலைக்கும், உரிமைகளற்ற தொழிலாளர் வர்க்கம் என்ற நிலையிலிருந்து சமத்துவமான உரிமைகளோடு வாழும் குடிமக்கள் என்ற நிலைக்கும், ஆண்களுக்கு மாத்திரம் வாக்குரிமை என்ற நிலையிலிருந்து அனைவருக்கும் வாக்குரிமை என்னும் நிலைக்கும், சர்வாதிகார அரசு என்ற நிலையிலிருந்து பிரஜைகளின் பங்கேற்பு உரிமை மற்றும் இணைத் தீர்மானமெடுத்தல் என்ற நிலைக்கும் செல்வதற்கு உதவியது இந்தப் பாதையே ஆகும்..... நாம் எமக்கு விசுவாசமாக இருந்துள்ளோம் என்று கூறமுடிவது நல்ல விடயமாகும். இது அடிமைத்தனத்துக்கான எதிர்ப்பு என்பதிலிருந்து துடிப்பாகச் சுதந்திரத்தைப் பாதுகாப்பது என்னும் நிலைப்பாடாகும்.

வில்லி பிராண்ட், 1978

FRIEDRICH EBERT STIFTUNG

BRANDT

பிராண்ட்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Copyright

| Fig. | No. | Copyright |
|---|---|---|
| Title | | Ullstein |
| 1 | | AdsD |
| 2 | No. 1 | Daimler Werksarchiv Stuttgart |
| 2 | No. 2 | Archiv Sigrid und Wolfgang Jacobeit |
| 2 | No. 3 | Rights owner unascertainable |
| 2 | No. 4,1 | Karl-Marx-Haus, Trier |
| 2 | No. 4,2 | Karl-Marx-Haus, Trier |
| 2 | No. 4,3 | Source AdsD |
| 2 | left | Rights owner unascertainable |
| 3 | No. 1 | Rights owner unascertainable |
| 3 | No. 2 | Source AdsD |
| 3 | No. 3 | Rights owner unascertainable |
| 3 | No. 4,1 | Source AdsD |
| 3 | No. 4,2 | Source AdsD |
| 3 | No. 5 | Rights owner unascertainable |
| 3 | No. 6 | Rights owner unascertainable |
| 3 | left | Rights owner unascertainable |
| 4 | No. 1 | Rights owner unascertainable |
| 4 | No. 2 | Source AdsD |
| 4 | No. 3 | Rights owner unascertainable |
| 4 | No. 4 | SAPMO (Stiftung Archiv der Parteien und Massenorganisationen der DDR), Berlin |
| 4 | No. 5 | Source AdsD |
| 4 | No. 6 | AdsD |
| 4 | left | SAPMO, Berlin |
| 5 | No. 1 | Karl-Marx-Haus, Trier |
| 5 | No. 2 | Source AdsD |
| 5 | No. 3 | Rights owner unascertainable |
| 5 | left | Rights owner unascertainable |
| 6 | No. 1 | Source AdsD |
| 6 | No. 2 | Rights owner unascertainable |
| 6 | No. 3 | Source AdsD |
| 6 | No. 4 | Rights owner unascertainable |
| 6 | left | Rights owner unascertainable |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 7 | No. 1 | Picture library Preußischer Kulturbesitz (bpk), Berlin |
| 7 | No. 2,1 | Source AdsD |
| 7 | No. 2,2 | Karl-Marx-Haus, Trier |
| 7 | No. 3 | Rights owner unascertainable |
| 7 | No. 4 | Source AdsD |
| 7 | No. 5 | AdsD |
| 7 | left | Rights owner unascertainable |
| 8 | No. 1 | Rights owner unascertainable |
| 8 | No. 2, 1-4 | Source AdsD |
| 8 | No. 3 | SAPMO, Berlin |
| 8 | No. 4 | AdsD |
| 8 | No. 5 | AdsD |
| 8 | left | AdsD |
| 9 | No. 1 | Rights owner unascertainable |
| 9 | No. 2 | Rights owner unascertainable |
| 9 | No. 3 | Rights owner unascertainable |
| 9 | left | Rights owner unascertainable |
| 10 | No. 1 | IISG, Amsterdam (?) |
| 10 | No. 2 | AdsD |
| 10 | No. 3 | Rights owner unascertainable |
| 10 | left | AdsD |
| 11 | No. 1 | AdsD |
| 11 | No. 2 | Rights owner unascertainable |
| 11 | No. 3 | Rights owner unascertainable |
| 11 | No. 4 | Rights owner unascertainable |
| 11 | No. 5 | AdsD |
| 11 | No. 6 | Rights owner unascertainable |
| 11 | No. 7 | Rights owner unascertainable |
| 11 | left | AdsD |
| 12 | No. 1 | Rights owner unascertainable |
| 12 | No. 2 | Source AdsD |
| 12 | No. 3 | Source AdsD |
| 12 | No. 4 | AdsD |
| 12 | No. 5, 1-2 | Source AdsD |
| 12 | left | AdsD |
| 13 | No. 1 | AdsD |
| 13 | No. 2 | Source AdsD |
| 12 | No. 3 | AdsD |
| 13 | No. 4,1 | Rights owner unascertainable |
| 13 | No. 4,2 | Rights owner unascertainable |
| 13 | No. 5 | Source AdsD |
| 13 | left | AdsD |
| 14 | No. 1,1 | AdsD |
| 14 | No. 1,2 | Source AdsD |
| 14 | No. 2 | AdsD |
| 14 | No. 3 | AdsD |
| 14 | No. 4 | Source AdsD |
| 14 | left | Source AdsD |
| 15 | No. 1 | AdsD |
| 15 | No. 2, 1-2 | Source AdsD |
| 15 | No. 3 | Keystone |
| 15 | No. 4 | Source AdsD |
| 15 | left | Source AdsD |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 16 | No. 1 | Ullstein |
| 16 | No. 2 | Agrimmer |
| 16 | No. 3 | Rights owner unascertainable |
| 16 | No. 4 | Deutsche-Presse-Photo-Zentrale, Berlin |
| 16 | No. 5, 1 | AdsD |
| 16 | No. 5,2 | Source AdsD |
| 16 | left | Deutsche-Presse-Photo-Zentrale, Berlin |
| 17 | No. 1,1 | Ullstein |
| 17 | No. 1,2 | Rights owner unascertainable |
| 17 | No. 2,1 | AdsD |
| 17 | No. 2,2 | Source AdsD |
| 17 | No. 3,1 | Arbeiderbevegelsens arkiv og bibliotek, Oslo |
| 17 | No. 3,2 | Source AdsD |
| 17 | No. 4 | Source AdsD |
| 17 | left | Rights owner unascertainable |
| 18 | No. 1 | AdsD |
| 18 | No. 2 | Sunday Picture |
| 18 | No. 3 | AdsD |
| 18 | No. 4 | Source AdsD |
| 18 | No. 5,1 | AdsD |
| 18 | No. 5,2 | Source AdsD |
| 18 | left | AdsD |
| 19 | No. 1,1 | Rights owner unascertainable |
| 19 | No. 1,2 | Source AdsD |
| 19 | No. 2 | Rights owner unascertainable |
| 19 | No. 3 | AdsD |
| 19 | No. 4,1 | AdsD |
| 19 | No. 4,2 | AdsD |
| 19 | left | AdsD |
| 20 | No. 1 | dpa/picture alliance |
| 20 | No. 2 | Source AdsD |
| 20 | No. 3 | AdsD |
| 20 | No. 4 | J. H. Darchinger |
| 20 | Nr. 5 | Source AdsD |
| 20 | left | J. H. Darchinger |
| 21 | No. 1, 1-2 | Source AdsD |
| 21 | No. 2 | Darchinger |
| 21 | No. 3 | dpa/picture alliance |
| 21 | No. 4 | Source AdsD |
| 21 | No. 5 | dpa/picture alliance |
| 21 | left | J. H. Darchinger, Bonn |
| 22 | No. 1 | J. H. Darchinger, Bonn |
| 22 | No. 2 | dpa/picture alliance |
| 22 | No. 3,1 | J. H. Darchinger, Bonn |
| 22 | No. 3,2 | Source AdsD |
| 22 | No. 4,1 | Source AdsD |
| 22 | No. 4,2 | Rights owner unascertainable |
| 22 | left | dpa/picture alliance |
| 23 | No. 1 | Ullstein |
| 23 | No. 2,1 | AdsD |
| 23 | No. 2,2 | AdsD |
| 23 | No. 2,3 | Source AdsD |
| 23 | No. 3 | Rights owner unascertainable |
| 23 | No. 4 | J. H. Darchinger, Bonn |
| 23 | No. 5 | Source AdsD |
| 23 | left | Rights owner unascertainable |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 24 | No. 1 | Landesbildstelle Berlin |
| 24 | No. 2 | Rights owner unascertainable |
| 24 | No. 3 | J.H. Darchinger, Bonn |
| 24 | No. 4 | Source AdsD |
| 24 | left | Rights owner unascertainable |
| 25 | No. 1 | Source AdsD |
| 25 | No. 2 | Rights owner unascertainable |
| 25 | No. 3 | Source AdsD |
| 25 | No. 4 | Rights owner unascertainable |
| 25 | left | Rights owner unascertainable |
| 26 | No. 1 | Ullstein |
| 26 | No. 2 | dpa/picture alliance |
| 26 | No. 3,1 | Ullstein |
| 26 | No. 3,2 | Ullstein |
| 26 | No. 4 | Source AdsD |
| 26 | No. 5 | Ullstein |
| 26 | left | Source AdsD |
| 27 | No. 1 | Ullstein |
| 27 | No. 2 | dpa/picture alliance |
| 27 | No. 3 | Source AdsD |
| 27 | No. 4 | dpa/picture alliance |
| 27 | No. 5 | Source AdsD |
| 27 | left | Source AdsD |
| 28 | No. 1 | AdsD |
| 28 | No. 2 | dpa/picture alliance |
| 28 | No. 3 | dpa/picture alliance |
| 28 | No. 4 | AdsD |
| 28 | left | AdsD |
| 29 | | Ullstein |
| 29 | left | Ullstein |

| | |
|---|---|
| Lassalle | AdsD |
| Bebel | AdsD |
| Bernstein | dpa/picture alliance |
| Kautsky | AdsD |
| Luxemburg | AdsD |
| Schumacher | Saturday Evening Post |
| Brandt | Hermann J. Knippertz, Rheinbach |

For some of the photographs and drawings the rights owners could not have been ascertained despite intensive research. Rights owners may contact: Historisches Forschungszentrum der Friedrich-Ebert-Stiftung, D-53170 Bonn.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ISBN: 978-955-607-059-0
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org